Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 18.00
දිනමුරසු වාරමලර් ஜூலை 07 - 13, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 621

## முத்தரப்பில் எத்தரப்பு முஸ்லிம்களின் தனித் தரப்பு?

## கிழக்கைப் பிரித்தாளும் புலிகளின் புதிய வியூகம்



# ஆன்மீகம்



## ஸ்ரீராம தூத அனுமன் வணக்கம்

ஸ்ரீராம தூதன் ஸ்ரீ அனுமனை துதிப்போர்க்கு அறிவு, பலம், புகழ், தைரியம், அச்சமின்மை, ஆரோக்கியம், மந்தத் தன்மையின்மை, நாவன்மை ஆகியவை உண்டாகும்.

ஸ்ரீமத் இராமாயணம் எனும் இதிகாசத்தில் (புராணம்) ஜொலிக்கும் ரத்தின மணியாகத் திகழ்பவர் - ஆஞ்சநேய மகாப் பிரபு. அனுமன், அஞ்சனை குமாரன், வாயுபுத்திரன், மகாபலிஸ்டன், ராமேஸ்டன், அர்ஜுசனசகன், பிங்காட்சன், அமிதவிக்ரமன், சமுத்திரத்தை தாண்டியவன், சீதையின் சோகத்தை நாசம் செய்தவன், லக்ஸ்மணருக்கு பிராணன் கொடுத்தவன், இராவண மமதையைப் பரிகாசம் செய்தவன் ஆகிய இந்தப் 12 நாமங்களையும் ஜெபிக்க வேண்டும்.

ஸ்ரீராம தூத அனுமனை - "ஓம் புத்திர்பலம் யசோதைர்யம் நிர் பயத்வம் அரோகதா! அஜாட்யம் வாக்படுத் வம்ச அனுமத் ஸ்மரணாத பவேத்!!" இம்மந்திர ஜெபம் சொல்லி வணங்குவதால் வித்தைகளில் தேர்ச்சியும், நல்ல ஞாபக சக்தியும் பெறுவதோடு, காரியசித்தியுண்டாகும். "ஓம் அஸாத்ய ஸாதக ஸ்வாமின், அஸாத்யம் கிம் தவப்ரபோ ராம தூத மகாப்ராக்ஞ்ய மம கார்யம்ச சாதய!" மேற்கூறிய மந்திர ஜபம் செய்ய அனுகூலமாகும்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

## ஜெயம் பெறு!

வாழ்க்கையை ஒரு போர்க்களம், ஒரு மல்யுத்தம், ஒரு ஓட்டப் பந்தயம், ஒரு போராட்டம் என்று எத்தனையோ காரியங்களுக்கு ஒப்பிட்டுப் பேசலாம். ஆனால் நீ ஜெயம் பெறுகிறாயா என்பதுதான் கேள்வி. 'தோல்வி' என்பது ஆவிக்குரிய மரணமே. நம்முடைய ஜீவியத்தில் வரும் சோதனைகள் நம்மை மனமொடியச் செய்ய முயற்சிக்கின்றன. மனமொடிவு சோர்வையும், தளர்ச்சியையும் தந்து, கடைசியில் தோல்விக்குள் இழுத்துச் சென்று, மரண எல்லையில் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறது. ஆனால் ராஜாதிராஜாவான இயேசு கிறிஸ்துவினால் மீட்டெடுக்கப்பட்ட அவரது பிள்ளைகளாகிய நாம், ஜெயம் பெறவே அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவன் ஜெயத்தை நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். கிறிஸ்து சிலுவையிலே ஜெயத்தை நமக்குச் சம்பாதித்துத் தந்திருக்கிறார். அன்பானவர்களே, பலவிதமான தோல்விகள், சோதனைகள், வியாதிகள், உங்களை வாட்டுகின்றனவா? நிந்தனைகள் சோர்வடையச் செய்கின்றனவா கலங்காதீர்கள். கிறிஸ்துவின் இரத்தத்தில் ஜெயம் நமக்குண்டு.

ஆர். பாலசந்திரன், கந்தப்பளை.

## பாதுகாப்புப் பெறுவோம்!

ஷைத்தான் மனிதர்களுக்கு விரோதியாவான். எல்லா விதத்திலும் மனிதர்களுக்குப் பகிரங்கமான இடையூறுகளைச் செய்பவனாக இருக்கின்றான். ஷைத்தான் மனிதர்களைச் சூழ்ந்த வண்ணமே இருக்கின்றான். எனவே ஷைத்தானின் தீங்கை விட்டுப் பாதுகாவல் தேடுவதற்காக எந்நேரமும் அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும்.

அத்தோடு அதிகமாக திக்ர் செய்து வருவோமானால் ஷைத்தான் எங்களிடம் சூழ்ந்து இருக்கமாட்டான். யார் அதிகமாக திக்ர் செய்கின்றார்களோ அவர்களை விட்டு ஷைத்தான் தூரமாகி விடுகின்றான். ஷைத்தான்களின் படையினரை முறியடிப்பது திக்ர் செய்வதினால் மாத்திரமே என அதிகமான ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது. ஷைத்தான் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தவனாக மனிதர்களுடைய மனதை எந்நேரமும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அது ஏனெனில் அம் மனிதனை வழி கெடுப்பதற்காகவே. மனிதர்கள் சதாவும் திக்ர் செய்து வந்தால் ஷைத்தான் வழி கெடுக்க முடியாமல் கேவலமடைந்து பின்வாங்கி விடுவான்.

மாறாக, மனிதர்கள் திக்ர் செய்யவில்லையானால் ஷைத்தான் மனிதரின் மனதில் ஊசலாட்டத்தைப் போட ஆரம்பிக்கிறான் என ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. எனவே ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாப்புப் பெற வேண்டுமானால் அதிகமாக திக்ர் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஷைத்தானின் தீங்கை விட்டும் அல்லாஹ்தாலா நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

-ஆர்.றஸ்மின், றஹ்மத்புரம், முந்தல்.

## கவிதைப் போட்டி இல.618



பரிசுக்குரிய கவிதை

### மலிவு

திறந்த பொருளாதாரத்தின்
புதிய சந்தைப் பொருள் -
மலிவு விலையில்
மனித உயிர்!

-இரா.இராமகிருஷ்ணன்,
பொகவந்தலாவை.

## கவிதைப் போட்டி இல.621



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 13.07.2005

கவிதைப் போட்டி இல.621
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### மயானம்

இல்லை....இப்போது
நம் தேசத்தில் மயானங்கள்....
இத் தேசமே இருப்பது
மயானத்திலேதான்.

-கலீல் கண்டு, மள்வானை.

### எதிர்காலமுண்டா?

உலகில் மயானத்திற்கு
இடம் ஒதுக்கியது
இறந்த காலம்.
மயானத்தில் உலகிற்கு
இடம் ஒதுக்குவது
நிகழ்காலம்.

--பீத் அல்ஹூவைரிஸ், பாலாவி.

### வாழ்க்கை வட்டம்

பிறந்த போது
மனிதர்கள்!
வாழ்ந்த போது
அகதிகள்!
இறந்தபோது
பிரேதங்கள்!
இதுதான் - மனித
வாழ்க்கை வட்டம்!

--க.கமால்தீன், ஏறாவூர் – 03.

### வேடிக்கை

உயிரற்று விழுந்து
கிடக்கும் எங்கள்
உறவுகளின்
உணர்வலையைத்
தீர்த்து
வைக்கும் பொதுக்
கட்டமைப்பு
உங்களுக்கு
வேடிக்கை.

-சோ.சிவக்குமார், உடப்பு.

### பரிதாபம்

இது
சாக்கடையோ
சவக்குழியோ
அல்ல,
மனிதம்
மரித்துப்போன
மண்ணில்...
மலிந்து கிடக்கும்
மனிதப்
படுகொலைகள்!!

--திருமலை நதார்,
ஜின்னா நகர்.

### இங்கு அதுதானே நடக்குது!

ஐயய்யோ இன்னுமொரு
குண்டு வெடிப்பா?
எத்தனை அப்பாவி
உயிர்கள் பலி!
சும்மா பதறாதீங்கையா.....
ஒரு மூன்று நாளைக்கு
ஹர்த்தால் போட்டால்
எல்லாமே மறந்து போகும்.
(சரியாப்போய்விடும்.)

-எஸ்.பி.பி.கணேஷ், கொழும்பு – 02.

### பிணங்கள் பெருகும்!

மண்டையே
இல்லாதவர்கள்
மகுடம்
சூட்டிக் கொண்டால்,
தலைகளே
இல்லாதவர்கள்
பதவியில் அமர்ந்து
கொண்டால்,
தைரியமே
இல்லாதவர்கள்
ஆயுதங்களைத்
தூக்கிக்
கொண்டால்
வீதிகளில்
மட்டுமல்ல,
வீடுகளிலும்
பிணங்கள்
பெருக்கெடுக்கும்!

--நா.ஜெயபாலன்,
பிபிலை.

### எமது நாடு

கருத்துச் சுதந்திரம்
காலாவதியாகிப் போனதால்
எமது நாடு - படு
கொலைகள் விளையும்
தாயகம்
மரணங்கள் மலிந்த பூமி.

--றெ.பி.மரியடினேசன், மன்னார்.

### எங்கும் முளைக்கும்!

விதைத்த விதை
அவ்விடத்திலேயே
முளைக்கும் - இங்கே
செத்துக் கிடக்கும்
வித்துடல்கள்
எவ்விடத்திலும்
முளைக்கும்!

--வி.இராகுலன்,
ஆரையம்பதி – 01.

### சாதனை

போரலை
ஓய்வெடுக்க,
புறப்பட்ட பேரலையின்
சாதனையோ! இது

--க.மு.முகம்மது றிஸ்மி,
அல்லை நகர் – 05.

### விபரீதம்

மண்ணைப் பிடித்திடும்
தாக்குதலை
தன் தொழிலாய்ச் செய்த
சில தறுதலைகளினால்
இங்கே உருள்கிறது
பல தலைகள்.

--எம்.பி.எம்.ஸப்வான், நிககொள்ள.

# உங்கள் பக்கம்

## சரணவள்ளித் தோட்ட மக்களின் அவல நிலை தீரவேண்டும்

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த வலப்பனை தொகுதியில் உள்ள அல்மா குறூப் சரணவள்ளித் தோட்ட மக்கள் நீண்ட காலமாக அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகளற்ற நிலையில் கஷ்டமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இத்தோட்ட மக்கள் வரட்சியான காலங்களில் குடிநீர் பெற்றுக்கொள்ள நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என விசனம் தெரிவிக்கின்றனர். காலையில் தொழிலுக்குச் செல்லும் பெண்கள், மாலையில் வீட்டுக்கு வந்ததும் குடங்களையும் கேன்களையும் எடுத்துக்கொண்டு தண்ணீர் பெற்றுக்கொள்ள நீண்டதூரம் செல்வதையே பிரதானமாகக் கைக்கொண்டுள்ளனர். மனித வாழ்க்கைக்கு அன்றாடம் மிகவும் முக்கியமாகத் தேவைபடுவது குடிநீராகும். நாங்கள் வேலை விட்டு வந்ததும் தண்ணீரைப் பெற்றுக்கொண்ட பின்னரே ஏனைய காரியங்களில் ஈடுபடுகின்றோம் என இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். பாடசாலைக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் கூட பாடசாலை விட்டு வீடு வந்ததும் குடிநீர் பெற்றுக்கொள்வதிலேயே நேரம் செலவழிந்து விடுகிறது என்று கவலைப்படுகின்றனர். மேலும் வீட்டில் வசிக்கும் வயது போன தாய்மார்கள் கூட மிகவும் சிரமத்துடன் தண்ணீர் சேகரிப்பதில் முண்டியடித்துக்கொண்டு ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு இம்மக்களுக்கு மின்சார வசதியற்ற நிலை இருப்பதால், குப்பிலாம்பு வெளிச்சத்திலேயே அன்றாட சமையல் மற்றும் பிள்ளைகளின் படிப்பு போன்றவை நடந்தேறுகின்றன. இந்த வசதிகளை மனம் வைத்துச் செய்து கொடுத்தால் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம் என மக்கள் கூறுகின்றனர். எனவே, இத்தோட்ட மக்களின் இந்த அவல நிலையைப் பொறுப்பெடுத்து இவ்வசதிகளை செய்து கொடுத்து மக்கள் சிரமமின்றி வாழ வழி அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதோடு அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகளை கூடிய விரைவில் ஏற்படுத்தித்தர உதவுமாறு மக்கள் சார்பாக முரசினூடாக மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

சகோ. ஆர்.பாலசந்திரன்,
அல்மா சீட்டன், கந்தபளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை



### அள்ளிவரும்

தினமுரசு அள்ளிவரும்
அனைத்து அம்சங்களும்
தூள். குறிப்பாக தேன்
கிண்ணம் ரொம்ப சூப்பர்.
தாங்கள் நடத்தும் கவிதைப்
போட்டி ஒவ்வொரு
கலைஞனையும் ஊக்குவிப்பது
போலுள்ளது. இதை தவிர
அரசியல் கட்டுரை, சினிமா,
பாப்பா முரசு, அதிரடி
அய்யாத்துரை, தகவல் பெட்டி
மற்றும் தொடர் கதைகளும்
கட்டுரைகளும் பிரமாதம். உன்
பணி தொடர என்
வாழ்த்துக்கள்.

--பி.சஜன்ராஜ், திருகோணமலை.

### முத்தமிழ் முரசே!

தித்திக்கும் தினமுரசே
தீன்சுவை மூட்டும் தினமுரசே
வியாழன் தோறும் புதுமலராய்
வாசனை மூட்டும் முரசே
கண் விழித்தால் செவிமடுக்க
வைக்கும் முரசே
உன்னை எத்தனை உள்ளங்கள்
காதலிக்கின்றன - அதில்
நானும் ஒருவன்.
அதுபோல் உன் புகழும்
சேவையும் மென்மேலும்
வளர பல கோடி
வாழ்த்துக்கள்.

ஆறுமுகம் சந்திரசேகர்
பள்ளத்தனை, கம்பளை.

### வாழ்க முரசே!

வாரம் ஒருமுறை
வந்தாலும்
தித்திக்கும் செய்திகளைத்
திகட்டாது தந்து எங்கள்
அறிவுப் பசியைத்
தீர்க்கிறது.
'முரசு' அரசியல், சினிமா
மற்றும் பல்வேறு பட்ட
அம்சங்களும் சிறுவர்
முதல் பெரியோர் வரை
அனைவரையும் கவரும்
என்பதில் ஐயமில்லை,
வாழ்க முரசே! வளர்க
தினமுரசு!!

ஆர். கிருபா, ஜெர்மனி.

### முரசு!!

அகிலம் போற்றும் முரசு....
ஆசான் பலர் எழுதும் முரசு...
இளைஞர் விரும்பும் முரசு....
ஈடு இணையில்லா முரசு...
உண்மை விளம்பி முரசு....
ஊட்டச்சத்து போன்றது முரசு...
எல்லோர் கைகளிலும் முரசு....
பார்க்கப் பளிச்சிடும் முரசு....
பாதுகாக்க வேண்டியது முரசு......

எம். ராஜினாத், மாளிகாவத்தை.

### அன்பான தினமுரசே!

அன்பான தினமுரசே!
காலத்தின் தேவை அறிந்து
பல சுவையான
செய்திகளைத் தருவதில்
உனக்கு நிகர்
யாருமில்லை. வாரந்தோறும்
உன் வரவை எதிர்பார்த்து
தினமும் காத்திருக்கிறேன்.
உன்னில் எனக்கு
பிடித்தவை தேன் கிண்ணம்,
லேடிஸ், காதில் பூ மற்றும்
பல விடயமாகும்.
தொடர்ந்து உன்பணி
தொடர என் வாழ்த்துக்கள்.

--எம்.ஆசீர்வாதம், லண்டன்.

# பொதுக் கட்டமைப்புக்கு திருத்தங்கள் கொண்டுவர அரசு முயற்சி

அரசும் - புலிகளும் செய்துகொண்டுள்ள சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ அமைப்பில் சில மாற்றங்கள் செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அரச சமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. முஸ்லிம் காங்கிரஸ், 'நுஆ' என்றழைக்கப்படும் தேசிய ஐக்கிய முன்னணி உட்பட, பல முஸ்லிம் அரசியல் கட்சிகளும், கிழக்கிலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் முஸ்லிம் அமைப்புகளும் விடுத்த கோரிக்கைகளையடுத்தே இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. அரசின் பங்காளிக் கட்சியான நுஆ அமைப்பின் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் இது தொடர்பாக ஜனாதிபதியோடு மீண்டும் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதற்கிடையில் ஊடகத்துறை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீனின் வற்புறுத்தலையடுத்து முஸ்லிம் சமாதானச் செயலகம், முஸ்லிம்களுக்கு பொதுக் கட்டமைப்பில் பிரதிநிதித்துவம் கோரி வழக்குத் தாக்கல் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பொதுக் கட்டமைப்பை எதிர்த்து வழக்குகள் தாக்கல் செய்துள்ள சிங்களத் தேசியவாதக் கட்சிகளும், முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லையென்று கண்டனம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுனாமி அனர்த்த நிவாரண சபை குறித்து கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையென்றும் அவர்களுக்கு உரிய அந்தஸ்து வழங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று லங்கா சமசமாஜக் கட்சி அரசை வற்புறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் திஸ்ஸ விதாரண அண்மையில் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சுனாமி நிவாரண சபைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் கிழக்கில் நிவாரண மீள்கட்டுமானப் பணிகளுக்காக முன் முயற்சிகளை மேற்கொண்டவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண என்பது குறிப்பிடத்தக்கது. உத்தேச திருத்தங்கள் தொடர்பாகப் புலிகளின் சமாதானச் செயலகப் பிரதிநிதிகளுடன் அரச சமாதானச் செயலகப் பிரதிநிதிகள் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாமென்றும் தெரியவருகிறது.

## தோட்டப்புற ஆசிரியர் நியமனம் டிசம்பரில்

வருட இறுதிக்குள் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மலையக இளைஞர், யுவதிகளைத் தோட்டப்புறப் பாடசாலைகளில் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள். மத்தியில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் இவர்கள் தெரிவுசெய்யப்படுவர். போட்டிப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறும். நியமனங்கள் டிசம்பர் மாதம் வழங்கப்படும். 833 தோட்டப்புறப் பாடசாலைகளில் நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு பத்து வருடங்கள் வரை இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை தொடர்பான ஆய்வுநூல் வெளியீட்டு விழா மற்றும் மரமுந்திரிகைக் கன்றுகள் விநியோகிக்கும் வைபவத்தில் எடுக்கப்பட்ட படம். அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நூலை வெளியிட்டு வைப்பதை முதல் படத்திலும், மரமுந்திரிகைக் கன்றுகள் விநியோகிப்பதை மறு படத்திலும் காணலாம்.

## இலங்கைக் கப்டன் விரைவில் விடுதலையாகலாம்

சோமாலியாக் கடலில் வைத்து நிவாரண உணவுப் பொருட்களுடன் கடத்திச் செல்லப்பட்ட இலங்கைக் கப்டனும் ஏனைய மாலுமிகளும் இன்னும் ஒரு வாரத்துக்குள் விடுவிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுவதாகக் கொழும்பிலுள்ள ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பேச்சாளர் தெரிவித்தார். கப்பலையும், பொருட்களையும், மாலுமிகளையும் விடுவிப்பதற்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கோரியுள்ள கடற்கொள்ளையருடன் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளும் கென்யாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

## முஸ்லிம்களைக் கொடிய புலிகளிடம் அடகு வைத்து விட்டனர்

### -ஜமாஅதே இஸ்லாமி

இலங்கையில் இருந்துவரும் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண நாட்டிலுள்ள இருபெரும் அரசியற் கட்சிகளும் அண்மைக் காலமாக எடுத்து வந்த முயற்சிகள் பாராட்டத்தக்கவையே. எனினும் தற்போது புலிகள் அமைப்புடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் பாரதூரமான பல அம்சங்களை கொண்டுள்ளது என்று இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் மத்திய ஆலோசனைச் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டிவிட்டு அரசாங்கமும் புலிகள் அமைப்பும் செய்து கொண்டுள்ள இவ்வொப்பந்தம் கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் போலியானவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சுனாமியால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களே. இந்நிலையில் இவர்களது வாழ்வில் விடியலைக் கொண்டுவரும் பொறுப்பு புலிகள் அமைப்பிடம் கொடுக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. அதற்குக் காரணம் புலிகள் கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனங்களாகும். கொடுமைகள் பல புரிந்த புலிகளின் கரங்களில், கிழக்கு முஸ்லிம்களையும் அடகு வைக்கும் வகையில் இவ்வொப்பந்தம் அமைவது துரதிஷ்டமானதே. சுனாமி தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஏற்பட்டுள்ள இதில் தலைமைத்துவமும், பணமும், பலமும், இடமும் எல்லாமே புலிகள் கரங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததன் மூலம் நியாயம் கிடைக்கும் என நம்புவதற்கில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதி

கதிர்காமத்தில் அமையப் பெற்றுள்ள இந்து யாத்திரிகர்களுக்கான தங்கும் விடுதி கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சரும், கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்பின் பேரில் புனரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ள தாக அமைச்சரின் இந்துசமய விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் அறிவித்துள்ளார். இதன்படி யாத்திரிகர்கள் தங்குவதற்கு இலகுவாகப் பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கதிர்காம யாத்திரையை மேற்கொள்ளும் யாத்திரிகர்களின் நன்மை கருதி இவ்விடுதி நவீன மயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

## வட, கிழக்கிலேயே 80 வீதமான மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை

மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை ஆய்வு தொடர்பான நிதியமொன்றினை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டுள்ளார். அடுத்த வருடம் இந்த நிதியம் ஆரம்பித்து வைக்கப்படும். இந்தியாவிலிருந்து உதவிகளைப் பெற்று இலங்கையில் மரமுந்திரிகைச் செய்கையை முன்னேற்றுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவிலும், மரமுந்திரிகைக் கன்றுகளை விவசாயிகளுக்குக் கையளிக்கும் வைபவத்திலும் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன. மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை தொடர்பாக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட ஆய்வு நூல்கள் இவ்வைபவத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனமும், வயம்ப பல்கலைக்கழகமும் இணைந்து இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வைபவத்தில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எஸ்.தவராஜா உரையாற்றுகையில், வடக்கு கிழக்கிலேயே 80 வீதமான மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இதனாலேயே தமிழில் ஆய்வு நூல்கள் வெளியிடப்படுவதாகவும் கூறினார்.

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்

### - அமைச்சர் கதிர்காமர்

அரசியல் படுகொலைகளும் புலனாய்வுப் பிரிவினரின் படுகொலைகளும் எவ்விதத் தடையுமின்றித் தொடர்வதால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட்டு சம்பந்தப்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய விதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார். இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஆழிப் பேரலை சுனாமி நிவாரண சபையில் புலிகள் இயக்கம் கைச்சாத்திட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது படுகொலைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது :

"சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரும், கைச்சாத்திட்ட இரு தரப்புகளில் ஒரு தரப்பு, தண்டனை கிடைக்குமென்ற எவ்வித பயமுமின்றி ஆயுதங்களுடனும் குண்டுகளுடனும் அலைகிறது. யுத்த நிறுத்த ஒப்பந்த வரைமுறைக்குள் இவர்கள் மீது நடவடிக்கையெடுப்பதற்கு எவ்வித வசதியுமில்லை. புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டுமென்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. ஆனால் இந்தப் பின்னணியில் கொலைகளில் ஈடுபடப் புலிகளை அனுமதிக்கடக் கூடாது. தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான ஏதாவது வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றும் அமைச்சர் சொன்னார்.

## நெடுந்தீவில் சடலம்

நெடுந்தீவு மேற்கு, புனித லோறன்சியா தேவாலய கடற்கரையில் இளைஞரொருவரின் சடலம் கடந்த இரண்டாம் திகதியன்று கண்டுபிடிக்கப்பட்டது. கோவிந்தன் விஜயகுமார் என்ற 23 வயது இளைஞரின் சடலமே இதுவென அவரது நெருங்கிய உறவினர்கள் அடையாளம் காட்டினர். கடந்த இரண்டாம் திகதி வழமைபோல் வீட்டைவிட்டு வெளியேறியவர் பின்னர் வீடு திரும்பவில்லையென்றும் இவரைத் தேடி வந்த உறவினர்கள் சடலத்தை மட்டுமே கண்டுபிடித்தனர் என்றும், இவர் முன்னர் ஈ.பி.டி.பி. அமைப்பில் அங்கம் வகித்தவரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வழமைபோன்றே படையினர் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்குவர்

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பயணம் செய்யும்போது இலங்கை ஆயுதப் படையினரின் பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாகப் புலிகள் விடுத்திருக்கும் காலக்கெடுவுக்கு மத்தியிலும் படையினர் அதிகளவு பாதுகாப்பை வழங்க மாட்டார்களென்று இராணுவப் பேச்சாளர் தயா ரத்நாயக்கா தெரிவித்தார். அரச படையினர் போதிய பாதுகாப்பு வழங்கத் தவறினால் புலிகள் தமது சொந்தப் பாதுகாப்பை ஏற்படுத்த நேரிடுமெனக் கூறி தமிழ்ச்செல்வன் இரண்டுவாரக் காலக்கெடு கொடுத்தது பற்றிக் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். ஓமந்தையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி நாற்பது புலி உறுப்பினர்களுடன் புறப்பட்ட பஸ்ஸொன்று கிளைமோர் தாக்குதலில் தப்பிய பின்னரே தமிழ்ச்செல்வன் இக் காலக் கெடுவை விடுத்திருந்தார். "கடந்த மூன்று வருடங்களாக நாம் புலிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கி வருகிறோம். இப்போதும் எமது பாதுகாப்புக் காரணமாகவே புலி உறுப்பினர்கள் உயிர் தப்பினார்கள். இந்த நிலையில் ஆயுதப் படையினரை மிரட்டும் விதத்தில் காலக்கெடு விதிப்பதில் பயனில்லை. வழமைபோன்று அவர்களுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்கப்படும்" என்று பிரிகேடியர் ரத்நாயக்கா மேலும் தெரிவித்தார்.

## அரச செயலகப் பிரதிநிதிகளுடன் முஸ்லிம் தலைவர்கள் விரைவில் பேச்சு

இலங்கை அரசின் சமாதானச் செயலக அதிகாரிகள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கிய அரசியல் தலைவர்களை அழைத்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக மேற்படி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ நிவாரண சபையில் போதியளவு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லையென்று முஸ்லிம் தரப்புகள் தெரிவித்த அதிருப்தியையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. சுனாமி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிழக்கிலுள்ள மூதூரில் சில தினங்களுக்கு முன்னர் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் அரச தரப்பிலும் புலிகள் தரப்பிலும் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகள் கலந்துரையாடி மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டனர். கிழக்கிலுள்ள முஸ்லிம் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கு முஸ்லிம் தரப்பினரின் ஆலோசனைகளையும், பங்களிப்பையும் பெறுவதற்காகவே இச் சந்திப்பு விரைவில் நடைபெறுமென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## விமான ஓடு பாதையை பார்வையிட மீண்டும் புலிகள் அனுமதி மறுப்பு

புலிகளின் இரணைமடுக் குளத் தருகே அமைந்துள்ள விமான ஓடு பாதையைப் பார்வையிட வேண்டுமென்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் விடுத்த வேண்டுகோளைப் புலிகள் கடந்த வாரமும் தட்டிக் கழித்துவிட்டனர். கடந்த வாரம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது ஹொக்லண்ட் மீண்டும் இக் கோரிக்கையை விடுத்தபோதும், பதிலேதுமளிக்காமல் தமிழ்ச்செல்வன் மௌனம் சாதித்துவிட்டாராம். இத்தகவலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளரான திருமதி ஹெலன் ஒலஸ்ட்டோகிற் தெரிவித்துள்ளார். ஏற்கனவே பல தடவைகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இந்த விமான ஓடு பாதையைப் பார்வையிட வேண்டுமென்று கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் புலிகள் அதனைத் தட்டிக் கழித்துவிட்டனர். சம்பந்தப்பட்ட பகுதியில் கண்ணிவெடிகள் இருப்பதால் அங்குசெல்ல முடியாதெனப் புலிகள் தெரிவித்திருந்தனர். இந்த விமான ஓடுபாதை குறித்து இலங்கை விமானப் படை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தது. இந்தியாவும் இது குறித்து எச்சரிக்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விமான ஓடுபாதை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை மீறும் செயலெனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## துணிச்சலற்ற வெளியார் தலையீடு பகட்டுக்குப் பந்தல் போடுவதாக இருக்கும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு இரண்டு வாரங்கள் ஆகிவிட்ட போதும் அது இயங்குவதாக இல்லை. அதற்கிடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக் கட்டமைப்பு முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைத்துள்ளது என்றும், ஆகவே மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்றும் நாடு தழுவிய ரீதியில் முஸ்லிம்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கமும், சர்வதேச சமூகமும் என்னதான் நியாயம் கற்பிக்க நினைத்தாலும், பொதுக் கட்டமைப்பு என்ற மீள்கட்டுமானப் பணி தொடர்பில் முஸ்லிம்கள் சுனாமி ஏற்படுத்திய அழிவுகளுக்கு ஏற்ப கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற தவறை சரி செய்துவிடமுடியாது.

குறைந்த பட்சம் புலிகளுக்கு நான்கு, முஸ்லிம்களுக்கு நான்கு, ஏனைய தரப்புக்கு இரண்டு என்றாவது பங்கீடு இருந்திருக்க வேண்டும். அது தவிரவும் பொதுக் கட்டமைப்பின் நிர்வாக அலுவலகத்தை வன்னியில் அமைக்கும் தீர்மானமும் ஏனைய சமூகங்களின் சுதந்திரமான கருத்தாடலுக்கும் தீர்மானத்துக்கும் தடையேற்படுத்துவதாகவே இருக்கும்.

சர்வதேச அழுத்தம் தான் ஜனாதிபதியை நெருக்கியிருக்கிறது என்றால், சர்வதேச சமூகம் ஆயுதம் தூக்கியவர்களை விட மற்றத் தரப்பினரைக் கிள்ளுக்கீரையாக நினைக்கிறதா? சாதாரண பொதுக் கட்டமைப்பில் விட்டுக்கொடுத்து இணங்கிச் செயற்படாத புலிகளா இறுதித் தீர்வில் முஸ்லிம்களை அங்கீகரிக்கப்போகிறார்கள். இவர்களா தமிழ் தேசியத்தின் கீழ் முஸ்லிம்களும் வாழ முடியும் என்று சூளுரைக்கிறார்கள். மீண்டுமொரு யுத்தத் தவிர்ப்பைச் செய்வதான எண்ணத்தில் இருப்பவர்கள், தமிழர் தரப்பிடமிருந்து உரிமைகளைப் பெற முஸ்லிம்களும் துப்பாக்கி தூக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை சர்வதேச சமூகம் ஏற்படுத்திவிடக் கூடாது. எந்தவொரு வெளிச் சக்தியாலும் புலிகளிடமிருந்து மாற்றுத் தரப்பாருக்கு அல்லது மாற்றுச் சமூகத்துக்கான நியாயத்தையோ, இணக்கத்தையோ துணிச்சலோடு பெற்றுத்தர முடியாத கையாலாகாத்தனமே மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவை வல்லரசுகளாக இருந்தாலென்ன, வலியவர்களாக இருந்தால் என்ன? எல்லாமே பகட்டுக்குப் பந்தல் விரிப்பவர்களே தவிர, வேறொன்றுமில்லை. ஆகவே, பொதுக் கட்டமைப்பு வரவேற்கக் கூடியதே. அதே நேரம், முஸ்லிம்களினதும், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களினதும் நியாயமான கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும். அப்போதுதான் பொதுக் கட்டமைப்பு, அதன் இறுதி வெற்றியை அடையும். இல்லையாயின் இன்னும் தேவையற்ற காலதாமதத்திற்கே வழி சமைக்கும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முத்தரப்பில் எத்தரப்பு முஸ்லிம்களின் தனித் தரப்பு

நரன்

வடக்கு, கிழக்குக்கான சுனாமி நிவாரண சபை தொடர்பாக அரசாங்கமும் புலிகளும் செய்து கொண்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முழு நாட்டையுமே உலுப்பியிருக்கிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மூவின மக்களையுமே சுனாமி தாக்கியிருக்கிறது. உயிர், உடைமைகளை இழந்தவர்களில் 95 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கடலோரங்களில் வாழ்ந்து வந்த ஏழை மக்களே. உலகளாவிய ரீதியில் பதின்மூன்று நாடுகளைத் தாக்கிய சுனாமி, இலங்கையிலும் பதின்மூன்று மாவட்டங்களைத் தாக்கியுள்ளது. வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் ஆறு மாவட்டங்கள் உயிர், உடைமைகளைக் காவு கொடுத்துள்ளன. இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அறுபது சதவீதத்துக்கு மேற்பட்ட அவலங்களை வடக்குக் கிழக்கே சுமந்து கொண்டிருந்தாலும், கிழக்கில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்தவர்கள் முஸ்லிம் மக்களே.

இந்த நிலையில்தான் சுனாமிக்குப் பின்பான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் உரிய முறையில் இடம்பெற வேண்டுமென்று அனைத்து முஸ்லிம் கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன. முஸ்லிம் கட்சிகளின் அக் கோரிக்கையை ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் வலியுறுத்தும் சிங்கள, தமிழ் கட்சிகளும், அமைப்புகளும் ஆதரித்துள்ளன. சுனாமி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கம், புலிகளென்று இரு தரப்புகள் மட்டுமே கைச்சாத்திட்டுள்ளன. முஸ்லிம்களின் மூன்றாம் தரப்புக் கோரிக்கை அல்லது தனித் தரப்புக் கோரிக்கை இன்று, நேற்றல்ல, சில வருடங்களுக்கு முன்னரேயே எழுந்து விட்டது. உத்தேச சுனாமிப் பொதுக்கட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகப் பங்குபெற வேண்டுமென்று, முஸ்லிம்களைப் பரிதிநிதித்துவம் செய்யும் சகல தரப்புகளுமே கோரிக்கை விடுத்தபோதும், சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே அதனைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டன.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களையும் முக்கியமாகக் கொண்டது இந்த நாடு. வடக்கு, கிழக்குக்கு அப்பால் சிங்களப் பேரினவாதத்தின் நுகத்தடியில் சிக்கி அவஸ்தைப்பட்ட தமிழினத்தைப் போல், இரண்டாவது சிறுபான்மைச் சமூகமாக விளங்கும் முஸ்லிம் மக்களும் பெரும் அவலங்களைச் சந்தித்திருக்கிறார்கள். நாடெங்கும் முஸ்லிம் மக்கள் பரந்து வாழ்ந்தாலும், கிழக்கில் அம்பாறை போன்ற மாவட்டங்களில் செறிந்தும் வடக்கே யாழ்ப்பாணம், வன்னி, மன்னார் போன்ற மாவட்டங்களில் பரந்தும் வாழ்கின்றார்கள் என்ற யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். சிங்கள இன வெறியர்களின் தாக்குதல்களுக்குத் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் உள்ளாக்கப்பட்டு வந்ததைப் போல் முஸ்லிம் மக்களும் தமிழ் இன வெறியர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியான வடக்கு, கிழக்கில் சிங்களப் படையினரின் அடாவடித்தனங்களுக்குத் தமிழ் மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டதைப் போன்று, தமது வாழ்விடங்களிலேயே புலிகளின் தாக்குதலுக்கு முஸ்லிம் மக்கள் உள்ளாகி அவஸ்தைப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய சியோனிஸ்டுகளின் பாணியில் 75,000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் உடைமைகளெல்லாம் பறிக்கப்பட்ட நிலையில், உடுத்த உடையோடு வட மாகாண மண்ணை விட்டுப் புலிகளால் விரட்டப்பட்டிருக்கிறார்கள். இந்த முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழ்விடமே வட மாகாணம்தான். இதையும்விட மிக மோசமான அடாவடித்தனம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மீது புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் பல நூற்றுக் கணக்கில் சுட்டுத்தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம் மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. சிங்கள அரச பயங்கரவாதத்தின் அடாவடித்தனங்களுக்கு அப்பாவித் தமிழ் மக்கள் பலியாக்கப்பட்டதைப் போன்று புலி இயக்கப் பயங்கரவாதத்துக்கு அப்பாவி முஸ்லிம்கள் இலக்காக்கப்பட்டுள்ளனர்.

மூன்றே மூன்று தேசிய இனங்களை மட்டும் கொண்டிருக்கும் இந்தச் சிறிய நாட்டில் இடம்பெற்ற எந்தவொரு இனவெறித் தாக்குதலுமே எழுந்தமானவையாக எழுந்தவையல்ல. சுருங்கச் சொன்னால் அரசும் புலிகளும் நடத்திய யுத்தத்துக்குள் சிக்கிக் கொண்டு வடக்குக் கிழக்கு வாழ் முஸ்லிம்களும் அவஸ்தைப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இனமும் ஒன்று மற்றொன்றை அவநம்பிக்கையோடு பார்க்கும் நிலையே இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

பேரினவாத இன ஒடுக்கு முறைகள் நிகழும் ஒரு நாட்டில் அல்லது சமூக அமைப்பில் தத்தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இன, மத அல்லது சமூக ரீதியாக அரசியல் கட்சிகளோ அல்லது அமைப்புகளோ உருவாக்கப்படுவதில் தவறில்லை. ஆனால் அவை மாற்று இனத்தின் அல்லது சமூகத்தின் உரிமைகளை காலில் போட்டு மிதிக்கக் கூடாது. பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக இரு தரப்பு அரசியல்வாதிகளும் கக்கிய வகுப்புவாத விஷங்கள், ஆலகால விஷமாக மாறி இந்த நாட்டின் நிம்மதிக்கு வேட்டுவைத்தன. இந்த நிலையில்தான் கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்ற காலத்தில் தான் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கோடு கிழக்கில் 'ஜிகாத்' என்ற பெயரில் 'புனித யுத்தம்' நடத்த முஸ்லிம் இளைஞர்களைத் தயார் செய்ய சிங்களப் பேரினவாதிகள் முனைந்தார்கள். தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு, கிழக்கின் நிலத்தொடர்பைப் பிரிக்க, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட அதே காலப் பகுதியிலேயே முஸ்லிம் இளைஞர்களை ஆயுத பாணி களாக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவும் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை முறியடிப்பதற்காக மற்றொரு தேசிய சிறுபான்மை இனத்தைத் தூண்டி விடுவதே பேரினவாதிகளின் தந்திரோபாயமாக இருந்தது. இந்த முயற்சிக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காத காரணத்தால் அது தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத் தக்கது. இந்திய - பாகிஸ்தான் யுத்தம் நடந்து கொண்டிருந்த காரணத்தால் இலங்கையில் முஸ்லிம் தீவிரவாத இயக்கமொன்றுக்கு ஆதரவளித்துத் தன் தலையில் மண்ணையள்ளிப் போட்டுக் கொள்ள இந்தியா தயாராகவிருக்கவில்லை. அப்போது இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடாமல் இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சம்பந்தப்படுத்திய அமெரிக்காவும் இந்தியாவைப் பகைத்துக் கொண்டு முஸ்லிம் பயங்கரவாத இயக்கமொன்றுக்கு

> **அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளுமே பிரதான பங்குதாரர்களாக யுத்தம் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஈடுபடமுடியுமென்றும் நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. யுத்தத்தின் ஆணிவேர் அரசும் புலிகளும்தான் என்றாலும் பக்கவேர்களாக பல தரப்புகள் ஓடிக் கொண்டிருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது. எனவே, முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில், அவர்களின் வாழ்விடங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அவர்களும் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை நூற்றுக்கு நூறுசத வீதம் சரியானதே**

ஆதரவு வழங்கத் தயாராக இருக்கவில்லை. உலகளாவிய தீவிரவாத முஸ்லிம் அமைப்புகளும் இலங்கையில் முஸ்லிம் இளைஞர்களை ஆயுதமேந்த வைப்பதால் எதுவும் சாதிக்கப்படப் போவதில்லை என ஒதுங்கிக் கொண்டு விட்டன. கிழக்கில் 'ஜிகாத்' என்ற பெயரில் முஸ்லிம்களின் ஆயுதக் குழுவைக் கட்டியெழுப்ப எடுக்கப்பட்ட முயற்சி கருவிலேயே கலைந்து போய்விட்டது. கிழக்கில் முஸ்லிம் இளைஞர்களை ஆயுத பாணிகளாக்க எடுக்கப்பட்ட முயற்சி வெற்றி கண்டிருக்குமானால் இந்த நாட்டில் மண்டையோடுகள் மட்டுமே மிஞ்சியிருக்கும். முஸ்லிம் மக்களையும் அரவணைத்துச் சென்ற தமிழ் மிதவாதத் தலைமையின் சமாதி மேட்டில் முஸ்லிம் 'ஜிகாத்' துக்களை முனைப்படுத்த அன்றைய அரசு எடுத்த முயற்சி முளையிலேயே கருகிப் போய்விட்டது. இந்த நிலையில்தான் முஸ்லிம் மக்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரச்சினையிலும் அல்லது அது தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம் தரப்பும் அங்கம் வகிக்க வேண்டுமென்பது நியாயமான கோரிக்கையாகும். அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், சுனாமிப் பொதுக்கட்டமைப்பு ஆகியவற்றில் முஸ்லிம்களுக்கு இடமளிக்கப்படவில்லையென்ற ஆதங்கம் அவர்கள் மத்தியில் நிலவுகின்றது. யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளுமே பிரதான பங்குதாரர்களாக யுத்தம் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஈடுபடமுடியுமென்றும் நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. யுத்தத்தின் ஆணிவேர் அரசும் புலிகளும்தான் என்றாலும் பக்கவேர்களாக பல தரப்புகள் ஓடிக் கொண்டிருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

எனவே, முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில், அவர்களின் வாழ்விடங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அவர்களும் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை நூற்றுக்கு நூறுசத வீதம் சரியானதே. ஆகவே அரசு - புலிகளென்ற இரு தரப்புகளுக்கும் அப்பால் முஸ்லிம்களும் மூன்றாம் தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை கடந்த சில வருடங்களாக முன் வைக்கப்பட்டு வருகிறது. முஸ்லிம்களின் இந்தத் தனித்தரப்பு யோசனைக்கு அரசும் புலிகளும்கூட ஆதரவு வழங்கியிருந்தனவென்று முஸ்லிம் கட்சிகள் கூறுகின்றன. ஐ.தே.க. அரசு, புலிகளோடு நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசு தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டார். அரசு தரப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் தரப்புப் பிரதிநிதியென்றும் அப்போது கூறப்பட்டது. ரவூப் ஹக்கீம் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியதுடன், இருவருமே ஒப்பந்தமொன்றினையும் செய்து கொண்டனர். தமிழ் மக்களின் தானைத் தளபதியாக - ஏகபோகப் பிரதிநிதியாகப் பிரபாகரனை ஏற்றுக் கொண்ட ரவூப் ஹக்கீம், தன்னை முஸ்லிம்களின் பிரதிநிதியாகப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டாரென்றும் கூறினார். ஆனால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சில காலங்களின் பின்னர், ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதாகத் தமிழ்ச்செல்வன் அதிரடி அறிவித்தலை விடுத்து, முஸ்லிம் காங்கிரஸின் முகத்தில் ஓங்கியறைந்தார். முஸ்லிம் காங்கிரஸை வெறும் ஏமாந்த சோனகிரிகளாகத்தான் ஏனைய இரு தரப்புகளும் கணித்து வந்தன. முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம் மக்களை ஏமாந்த சோனகிரிகளாகக் கணித்து, அவர்களின் முதுகிலேறி சவாரி விட முனைந்தது. விளைவு, முஸ்லிம் காங்கிரஸ் என்ற மரம் ஆறேழு கிளைகளாகப் பிரிந்து போய்விட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் என்றும் நுஆ என்றும் அதாவுல்லா அணியென்றும் மாற்றுக் குழு, வேற்றுக் குழுவென்றும் பிரிந்து நிற்கும் இந்த முஸ்லிம் தரப்புகளால் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் தமது மக்களுக்காக ஐக்கியப்பட முடியாமல் போனது வேதனைக்குரியது. முஸ்லிம் தரப்புகளின் பிரதான பின்தளம் கிழக்கு மாகாணமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அரசு தனக்கெனச் சமாதானச் செயலகமொன்றினை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைப் போல் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து சமாதானச் செயலகமொன்றினை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால், எந்த மக்களுக்காக இந்த முஸ்லிம் சமாதான செயலகம் ஏற்படுத்தப்பட்டதோ, அந்த மக்களைப்பற்றி கிஞ்சிற்றேனும் கவலை கொள்ளாமல் தூங்கி வழிந்து கொண்டிருக்கின்றன. தேசியக் கட்சிகளோடு கூட்டிணைந்து அரசில் அங்கம் வகிப்பதோ அல்லது தேசியக் கட்சிகளுக்கு அனுசரணையாக முஸ்லிம் கட்சிகள் செயற்படுவதையோ யாரும் தவறென்று கூறிவிடமுடியாது. ஆனால் யாருடைய நலன்களைப் பேணுவதற்காக இக் கூட்டணிகளில் இணைகிறார்களென்பது பிரதான கேள்வியாகும். தமது மக்களின் நலன்களைப் பலிப் பொருளாக்கிக் குறுகிய அரசியல் இலாபத்துக்காக முஸ்லிம் தலைமைகள் மண்டியிடுமானால் அது ஆபத்தானதாகும்.

தனித்தரப்புக் கேட்பவர்களால் தங்களுக்குள்ளேயே ஒருமித்து ஏகமனதாக ஒருதரப்பாக முன்வரக் கூடிய பக்குவம் இவர்களுக்கு இன்னமும் இல்லை. பேரம் பேசும் சக்தியை ஓர் இனம் கட்டி வளர்க்க வேண்டுமானால் தமக்குள்ளே ஐக்கியத்தைக் கட்டி வளர்க்க வேண்டும். சிதறு தேங்காயைப்போல் தலைமைகள் சிதறுமானால் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் ஜீவாதார உரிமைகள் சிதறடிக்கப்படும்.

முஸ்லிம்களின் தனித்தரப்பாகப் பங்குபற்ற யாரை அழைப்பது? முஸ்லிம் காங்கிரஸையா? நுஆவையா? அல்லது மாற்றுக்குழு, வேற்றுக் குழுக்களையா? இந்தப் பாரிய பிரச்சினைக்கு முஸ்லிம் தலைமைகள் முதலில் விடை காண வேண்டும். அப்போதுதான் தமது கோரிக்கையை காத்திரமான முறையில் முன்வைக்க முடியும். எனவே முத்தரப்பில் எத்தரப்பு முஸ்லிம்களின் தனித்தரப்பு? என்ற கேள்விக்கு முஸ்லிம் தலைமைகள் விடை காண வேண்டும். இல்லையேல் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் அணி திரண்டு இத் தலைமைகளுக்கு அரசியல் அரங்கிலிருந்து விடை கொடுத்து அனுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிடும்.

# ஊரிலிருந்து....



மேல நாடுகளில பிரஜைகளா மாறிவிட்ட எங்கட ஆக்கள், பிறந்த மண்ணை பார்க்க வந்தா, இப்ப ரெண்டெழுத்தாற்ற கெடுபிடி நினைச்சுப்பாக்கேலாத மாதிரி குறைஞ்சு போச்சுது.

என்னடா ஆக்கள் திருந்திவிட்டினமோ எண்டு யோசிக்காதையுங்கோ. எல்லாம் லண்டன் ஜெயதேவன் வன்னி பங்கரில இருந்த பின் விளைவுதான். எல்லா எம்பஸிக்காரரும் தங்கட பிரஜைகளுக்கு என்ன நடக்குது எண்டு கண்ணில விளக்கெண்ணை விட்டுப் பார்க்கீனம். நல்ல விசயம்தான். ஆனா பழைய குருடி கதவைத் திறவடி எண்டமாதிரி ரெண்டெழுத்தார் முருங்கை மரத்தில எப்ப ஏறுவினம் எண்டதும் யார் கண்டது.

# கிழக்கைப் பிரித்தாளும் புலிகளின் புதிய வியூகம்

புலிகளுக்கு அதி உச்ச பலாபலன்களையும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு அக்கால கட்டத்தில் தமது அரசியலை நடத்தவும் பெரிதும் தேவையாக அமைந்த போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகளும், நான்கு மாதங்களும் நிறைவு பெற்றுள்ளது. பெயரளவில் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று மகுடம் சூடப்பட்டிருந்தாலும் இக்கால கட்டத்தை புலிகள் தமது அரசியல் எதிரிகளைப் பலி வாங்கவும் மீண்டுமொரு பாரிய யுத்தத்திற்கான தயாரிப்புகளைச் செய்வதற்குமே பயன்படுத்திக்கொண்டனர் என்பதை ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம். அதுவே தொடர்வதும் கண்கூடு.


புலிகளைப் பொறுத்தவரை தற்போது நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நீண்ட காலத்தை எடுத்துவிட்டது. ஆகையால் தமது திட்டங்களை விடவும் காலம் தனது திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கிவிட்டது. அதன் விளைவாக புலிகளின் உறுப்பினர்களிடையே போர்க் குணம் தணிந்து மாற்று வழிமுறையில் சிந்திக்கத் தூண்டியது. இன்னும் சிலரை போர்ப்பாதையில் இருந்து விலகி சாதாரண வாழ்க்கை, குடும்ப உறவு என சிந்திக்க வைத்து சிலர் தனி வாழ்க்கைக்குத் திரும்பியும் விட்டனர். இதில் கருணாவின் பிரிவும் கிழக்கு மாகாண நிலைமைகள் வன்னித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து விலகிச் செல்லும் புலிகளைப் பொறுத்தவரை பெரும் கவலைக்குரிய அல்லது ஏமாற்றத்துக்குரிய விடயங்களாகும்.

ஆகவே இதேநிலை நீடித்தால் புலிகள் இயக்கமானது அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ காலத்தின் போக்குக்கு அமைய சில மாற்றங்களுக்கு உட்படவே செய்யும். அதை புலிகளின் படுகொலைகளாலோ பதற்றச் சூழலாலோ தடுத்து விட முடியாது.


இந்த யதார்த்தத்தை புலிகள் மிகத் தாமதமாகவே புரிந்துகொண்டுள்ளனர். ஆகவேதான் ஏற்பட்ட சரிவையும் மாற்றத்தையும் சரிசெய்கின்ற அவசரமே மீண்டுமொரு யுத்தத்துக்கான காய் நகர்த்தல்களும், காலக்கெடு விடுமளவுக்கு பொறுமையின் விளிம்பில் வந்து நிற்பதுமான பரப்புரைகளாகும்.

இந்த முடிச்சை அவிழ்க்கும் ஒரு ஆரம்பப் புள்ளியாக வெலிக்கந்தைப் பகுதியில் புலிகள் பயணம் செய்த பஸ் வண்டி மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் அதனை ஒட்டிய புலிகளின் பதினான்கு நாள் காலக் கெடுவையும் பார்க்கலாம்.

மீண்டுமொரு யுத்தத்துக்கு புலிகள் தயார்தானா? அப்படியாயின் கிழக்கு மாகாணத்தின் நிலை என்னவாகும். கருணாவின் பிரிவுக்குப் பின்னர் கிழக்கின் பிடி பிரபா அணிப் புலிகளின் வசம் உள்ளதா என்பதை ஆய்வு செய்கின்றபோது, இல்லையென்றே தெரியவருகிறது. இதற்குச் சான்றாக தற்போது கிழக்கு மாகாணத்தை பிரபாகரன் எவ்வாறு நிர்வகிக்கிறார் என்பதைப் பார்க்கின்றபோது வெளிப்படுகின்ற சில முக்கிய விடயங்களைப் பார்க்கலாம். கருணாவின் பிரிவுக்கு முன்னர் கிழக்கின் பெருந் மாற்றிக்கொண்டதோடு, திருகோணமலையின் அசைவுகளையும் அவதானித்துக் கொண்டிருந்தார். மொத்தத்தில் கிழக்கின் தலைமை மையமாகத் தன்னை நிறுவிக்கொண்டார். அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக கருணாவின் படையணியின்




ஆறாயிரத்துக்கும் அதிகமான போராளிகளையும் பெருந்தொகை ஆயுத பலத்தையும் கொண்டிருந்ததோடு வன்னியில் தனது வழி நடத்தலில் ஜெயந்தன் படையணியையும் உருவாக்கினார் கருணாவின்


பிரபாகரன்

தலைவராக கருணா இருந்தார். ஆகவே அவருக்கு மட்டக்களப்பு - அம்பாறை ஆகிய பெரும் பகுதியின் கட்டுப்பாட்டு அதிகாரம் முழுமையாக வழங்கப்பட்டிருந்தது.

**ஆனையிறவுச் சமர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டம், தென்மராட்சி, வடமராட்சி சமர்களில் கருணாவின் போராட்ட குணமும், அதில் கருணா பெற்ற வெற்றிகளும் பிரபாகரன் தனது வாழ்நாளில் மறுக்க முடியாதவை.**

திருகோணமலை பதுமனின் பார்வையில் இருந்தது. அப்படி இருந்தும் கருணா தனது ஆளுமையின் காரணமாக பதுமனையும் தனது விசுவாசியாக

திறமை மீது பிரபாகரனுக்கு இவ்வளவு நம்பிக்கை உருவாவதற்குக் காரணியாக அமைந்த பல விடயங்களைச் சொல்லலாம். சிலவற்றைப் பார்க்கும்போது, ஆனையிறவுச் சமர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டம், தென்மராட்சி, வடமராட்சி சமர்களில் கருணாவின் போராட்ட குணமும், அதில் கருணா பெற்ற வெற்றிகளும் பிரபாகரன் தனது வாழ்நாளில் மறுக்க முடியாதவை. ஆனையிறவு தாக்குதலின்பின் அங்கு கொடியேற்றியவர் தற்போதைய மட்டு தளபதியாகப் புலிகளால் நியமிக்கப்பட்டிருக்கும் பானு என்பவர். இதில் மற்றுமொரு விடயம் இச்சமரில் சொர்ணம் வழிநடத்திய படையணி பெரும் அழிவை எதிர்கொண்டதும், செய்வதறியாது பின்வாங்கவும் செய்தார். ஆனால் கருணா படையணியின் மூர்க்கத் தாக்குதல்களும், கருணா காட்டிய உறுதியும் பானுவுக்கும் சொர்ணத்துக்கும் அப்பேடிதே கருணா குறித்து ஒரு கரும் புள்ளியை ஏற்படுத்தியது எனலாம்.

பானுவுக்கும் சொர்ணத்துக்கும் கருணா மீது மேலும் முறுகலை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தவை. சாவகச்சேரி தாக்குதலில் பானுவின் தவறான வழிநடத்தலால் சரசாலையில் ஒரேயடியாக


கருணா

அறுபது பேர் உயிரிழந்தனர். தவிரவும் பானுவின் பிழையான வழிநடத்தலுக்கு அப்போது கணிசமான போராளிகள் பலியாகினர். அந்தத் தாக்குதலுக்குப் பிறகு, தென்மராட்சித் தாக்குதலை தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு கருணாவுக்கு வழங்கப்பட்டது. அப்போது கருணா ஒரு கோரிக்கையை முன்வைத்தார். இதுவே கருணா முதன் முதலில் புலிகளின் தலைமையை நோக்கி வைத்த கோரிக்கையாகும். அதாவது, ஆனையிறவு, முல்லைத்தீவு போன்ற பாரிய தாக்குதலில் கிழக்குப் போராளிகள் சுமார் ஐநூறுக்கும் - அறுநூறுக்கும் மேலதிகமானோரை தான் இழக்க வேண்டியேற்பட்டது. ஆகவே பிடித்த பகுதிகளைப் பாதுகாக்கும் பொறுப்புக்களையாவது வடக்குப் பகுதி போராளிகளிடம் ஒப்படையுங்கள் என்று கேட்டதோடு, அவ்வாறு செய்தால்தான் தன்னால் தென்மராட்சித் தாக்குதலை நடத்தமுடியுமென்றும் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பிறகு தென்மராட்சித் தாக்குதல் கருணாவால் ஆரம்பிக்கப்பட்டது. கருணா மொத்தமாக சுமார் ஆயிரத்து அறுநூறுக்கும் அதிகமான போராளிகளை இழந்து, தலைமைக்கு அடுத்தடுத்த வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்தார். கருணாவின் தொடர் வெற்றியும் அர்ப்பணமிக்க படையணியும் ஏனைய போராளிகள் தளபதிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது. இந்தத் தர்மசங்கடமான நிலையை பிரபாகரன் வேப்பங்காயை விழுங்குவதுபோல் ஏற்றுக்கொண்டாலும், புலிகளின் பொட்டு அம்மானுக்கு தனது விசுவாசிகள் ஓரங்கட்டப்படுவதும், கருணாவின் வளர்ச்சியும் ஒரு நெருடலாகவே இருந்தது. அதைச் சரி செய்து கொள்வதற்காகச் சூழ்ச்சிகளை

அலசுவது
- மதியூகி -

திட்டமிட்டார். காகம் இருக்கப் பனம் பழம் விழுந்ததைப் போல் கருணாவின் பிளவு ஏற்பட்டது. அதைப் பொட்டு அம்மான் தூண்டிவிட்டதோடு சமரசத்துக்கு இடம் தராத வகையில் காய் நகர்த்தி அதில் வெற்றியும் கண்டார்.

இதன் பயனாக கருணா பிரிந்து சென்றார். கருணாவுடன் நெருக்கமாக இருந்த பதுமன் நயவஞ்சகமாக வன்னிக்கு அழைக்கப்பட்டு சிறையடைக்கப்பட்டார். கருணாவை அழிக்கின்ற முயற்சிக்கு திருமலையிலிருந்து தலைமைதாங்கும் பொறுப்பை சொர்ணத்திடம் ஒப்படைத்து, பதுமனின் இடத்துக்கு சொர்ணத்தை திருகோணமலையின் தளபதியாகவும் முடி சூட்டி பிரபாகரன் அனுப்பினார்.

திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை ஆகிய கிழக்கின் பெரும் மாவட்டங்களுக்கு பிரபாகரனால் தெரிவு செய்யப்பட்ட தளபதிகளின் தகைமைகளும் அவர்கள் ஊடாக பிரபாகரன் பெற விரும்பு பலாபலன்களும் பற்றிய விரிவான விடயங்களை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

## அதிரடி அய்யாத்துரை



**ஆத்தா** ஆடு வளத்தா, மாடு வளத்தா ஒரு நாயை மட்டும் வளக்காமல் அதுக்குப் பதிலா என்ன வளத்தா எண்டு பாரதிராஜாவின்ர ஒரு படத்தில வசனம் இருக்குதெல்லோ. அதுபோல ரெண்டெழுத்தார் இப்ப மிருகங்களை வளக்கினமாம். ஏன் எண்டால் ஒரு தனியான நாட்டுக்கு மிருகக்காட்சிச்சாலை இருக்க வேணுமெல்லோ! அதாலதான். அவை பல வகையான மிருகங்களையும் தருவிச்சு வளக்கினமாம். நாடு பிடிக்கிற கதையே உப்பிடிக் கிடக்கு. அதிலையும் மிருகக்காட்சிச்சாலை கட்டிற ரேஞ்சில போய்க்கொண்டிருக்கினம். அதுமட்டுமில்லையுங்கோ. ஒரு தலைநகராக கிளிநொச்சியை மாற்ற வேணுமெண்டும் ஒரு நீண்ட திட்டம் போட்டிருக்கினமாம். என்ன திட்டம் போட்டால் என்ன, எங்கட தேசம் புதுப்பொலிவு பெறுதெண்டால் எங்களுக்குப் பெருமைதானுங்கோ. உப்பிடிக் கட்டிப்போட்டு மீண்டுமொரு யுத்தம் நடத்தி கட்டினதுகளை உடைச்சுப்போடாதேங்கோ. பிறகு அது சின்னப்புள்ளத்தனமாய் போயிடும். விளங்குதோ.....

**போன** வாரம் வவுனியாவில இருக்கிற முத்தையா மண்டபத்திலை புதுமையான ரத்தினத்தார் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' எண்ட கவிதைத் தொகுப்பு வெளியிட்டவரெல்லோ. அரச சபையிலை மன்னைரைப் புகழ்ந்து கவிபாடி பொற்கிழி வாங்கிறவையளைப் போல ரெண்டெழுத்தாரைப் பற்றி புகழ்ந்து பாடிறவர் எண்டது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அப்படியானவர் உந்த விழாவில விடுதலையெண்டால் என்ன எண்டு கொடுத்த வியாக்கியானம் வில்லங்கத்தை விலைக்கு வேண்டுமாப்போல இருந்திச்சுதுங்கோ. மனிசன் சும்மாவே அலட்டிறவர். அலட்டலோடை அலட்டலா விடுதலையைப் பற்றி சொல்லேக்க அச்சமில்லாமல் உலவுதல், யாருக்கும் அஞ்சாமல் வாழ்தல், எனக்குக் கிடைக்கும் சகலதும் எல்லோருக்கும் கிடைப்பது, நான் நினைத்தபடி வாழும் உரிமையை நிர்ணயித்தல் - எண்டு வீரம் பிதுங்க விளாசித்தள்ளினார் பாருங்கோ. உதை அவர் தற்போதைக்கு தலைமையா ஏற்றிருக்கிறவருக்கு அட்வைஸாச் சொன்னாரா, இல்லாட்டில் அவரை விமர்சிக்கிறாரா எண்டதுதானுங்கோ பிடிபட மாட்டன் எண்டிட்டுது. புதுமையான ரத்தினமே - என்னப்பா புதிர் போட்டதோடை புற்றையும் கிண்டிவிட்டிட்டீர். பாம்பு படம் எடுக்கும். பாத்து இருந்து கொள்ளுங்கோ.

**தை** பிறந்தால் வழி பிறக்கும் எண்டுவினம். ஆனால் தை பிறந்தால் நான்தான் ஜனாதிபதியெண்டு யானைக் கட்சித் தலைவர் பாத யாத்திரை நடத்திறார். காடு கிடக்கிற கிடையில கரடி காவடி ஆடிச்சுதாம் எண்ட மாதிரி நாடு கிடக்கிற கிடையில இவர் சனத்தின்ர நாடி பிடிச்சு பல்ஸ் பாக்கிறார். போன தடவை சமாதானத்தைக் கொண்டு வருவன் எண்டவர், இந்தத் தடவை நூறு மீற்றர் தடையை இல்லாமல் செய்வன் எண்டிறார். பாத்தியலோ பொலிரிக்ஸ் எங்கையெல்லாம் புதைஞ்சு கிடக்குதெண்டு. பொதுக் கட்டமைப்புக்கு தன்ர கட்சிக் கொடியையே சமிக்ஞையாகக் காட்டினவர், அதிகார அம்மணியின்ர அதிகாரத்தை அபகரிக்கிற திட்டத்திலை உறுதியா இருக்கிறார். இவர் அதிகாரத்துக்கு வந்தால் சமாதானம் வருமெண்டதை விடவும் ஒரு சமர் தொடங்கும் எண்டுதான் யோசிக்கினமாம் பொலிரிக்ஸ் வட்டாரத்தார். அது சரிங்கோ. முறைக்கிறவன் கோபத்திலதான் முறைக்கிறான் எண்டு நினைக்கலாம். ஆனால் வாயைத் திறக்காமல் சிரிக்கிறவன என்ன நினைச்சுக் கொண்டு சிரிக்கிறான் எண்டு நம்ப ஏலாதுங்கோ. அதிகாரம் வரேக்க நாக்கிலிப் புழுவுக்கும் நகை நட்டு போடணும் போல இருக்குமாம். புரியுதோ......


**போர்** நடக்குதோ இல்லையோ எண்டு கண்காணிக்க வந்தவை இவ்வளவு நாளும் கொலைகள் விழ விழ மாதாந்த அறிக்கைக்காக மட்டும் பதிவு செய்துகொண்டு இருந்திச்சினம். இப்ப என்னடாவெண்டால் நிழல் யுத்தமொண்டு நடக்குது. உது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்; மீண்டுமொரு யுத்தத்தையே கொண்டுவரும் எண்டு நீண்ட ஸ்டேட்மெண்ட் விட்டிருக்கினம். உந்த வெள்ளைத்தோல் வெங்கநாந்திகளுக்கு ரெண்டெழுத்தாராலை மாற்றுக்கட்சிக்காரர் சுடப்படேக்கை பொடியோடை வந்து முறைப்பாடு செய்யேக்க உதின்ர விபரீதத்தைப் புரிஞ்சு கொள்ள முடியல்லையே. கொலையானவனுக்காகப் பேசிறதை விட்டுப்போட்டு, கொலையாளியை விடுவிப்பதற்காக நியாயம் பிளந்திச்சினம். இவை வாங்கின வக்காளத்து இண்டைக்கு காலக்கெடு அளவுக்கு கழுத்தில பிடிச்சிட்டுது. இண்டைக்கு நிழல் யுத்தமெண்டினம். யுத்த தவிர்ப்பெண்டால் பிறகென்ன நிழல் யுத்தமெண்டினம். கற்பழிப்பை மிதமான கற்பழிப்பு எண்டிறமாதிரி புதுக்கதை விடுகினம். நிஜமோ நிழலோ படுகொலைதான் மிச்சமெண்டதை புரிஞ்சு கொண்டு இனியாவது கொஞ்சம் வேகமா வேலை செய்யுங்கோ. ஏலாட்டில் வேளைக்கு வெளிக்கிடுங்கோ. ஒவ்வொரு நாளும் ஒரு கொலை விழத்தான் போகுது. போதாக் குறைக்கு போரும் நடக்கத்தான் போகுதெண்டால் பிறகு இவை எதுக்கு எண்டு நான் கேக்கயில்லையுங்கோ. தினமும் செத்த வீடு நடத்திற அப்பாவி சனம் கேக்குதுகள்.

**வெளிநாடுகளில** இருந்து வீடு பார்க்கவும், உறவுகளைப் பார்க்கவும் தாயகம் திரும்பினவை அவசர அவசரமா தங்கட ரிட்டன் டேட்டை கொன்போர்ம் பண்ணினமாம். அதுமட்டுமில்லாம,தலைநகரில வெளிநாட்டுக்குப் போறதுக்காக தங்கி இருக்கிறவையும் தங்கட ஸ்பொன்சர்காரருக்கு கோல்மேல கோல் போடுகினமாம். நாட்டில சிச்சுவேஷன் ரொம்ப சிக்கலாக் கிடக்கு. நான் முந்திறதோ நீ முந்திறதோ எண்டு சிலம்பு சுத்தினம். அதுக்கிடையில எங்களை எப்படியாவது அங்காலை எடுத்துப்போடுங்கோ எண்டு அழாத குறையா நிக்கினமாம். உப்பிடி பரபரப்பு வந்தால் மீடியாக்காரருக்குத்தான் கொண்டாட்டம் எண்டில்லையுங்கோ. இப்ப கொமினிகேஷன்காரருக்கும் லாபம் தானுங்கோ. வெளிநாட்டில இருந்து டொலராவும் பவுணாவும் வாரதெல்லாம் ரூபாயாகப் போகுது. ம்....நாட்டில குழப்பம் வரவேணுமெண்டு கோயில்ல நேர்த்தி வைக்கிறவைக்கும் அதுக்கிடையில எங்களையும் எடுங்கோ எண்டிறவைக்கும் இடையில நடக்கிற விளையாட்டுக்கு ஒரு அளவே இல்லாமல் போயிட்டுது.

**மின்சாரக்** கட்டணமும், எரிவாயுக் கட்டணமும் எகிறிக்கொண்டு போகுதுங்கோ. பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும் எண்ட மாதிரி நாட்டின்ர பொலிரிக்ஸ் குழப்பங்களும், ரெண்டெழுத்தாரின்ர போர் முழக்கங்களும் தலைவிரி கோலமாகத் திரியேக்க உப்பிடி பொருளாதாரப் பிரச்சினை ஒருபக்கம் பின்னந் தலையால பிடிச்சு இழுத்து விழுத்தப்பாக்குது. மகா ஜனங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கோ. நிலைமை வலு மோசமாப் போய்க்கொண்டிருக்கு. ஏதோ என்ர மனதில பட்டதைச் சொல்லிப்போட்டன். இனி உங்கட சமத்து.

# தேவ இரகசியத்தின் ரோஜா மாதாவின்

## 58 ஆவது ஆண்டு பெருவிழா



**திகதி** : 13.07.2005

**நாள்** :புதன்கிழமை

**நேரம்** : காலை 9.30 மணிக்கு திருச்சுரூப பவனி ஆரம்பம்.

**பவனி** : கன்னாரத்தெரு (லைப்பிரரி அருகாமையில்) சந்தியிலிருந்து தொடங்கி ஆண்டிவால் வீதி வழியால் சென்று கதிரேசன் வீதியினூடாக திருச்சுரூபம் அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தை வந்தடையும்.

***திருப்பலி :*** காலை 10.30 மணிக்கு பங்குத் தந்தை பீட்டர் சுபராஜ் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

***ஜெபமாலை :*** நண்பகல் 12.00 மணிக்கு 15 காரணிக்கங்கள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இப்பெருவிழாவில் தேவதாயின் அன்பையும், அரவணைப்பையும், ஆசீரையும் பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***தேவ இரகசிய ரோஜா மாதாவின் பிள்ளைகள்***
***மேலதிக விபரங்களுக்கு : தொலைபேசி 0114 614434.***


# தரவளை வீதியின் அவல நிலை நீங்குமா?

நுவரெலியா மாவட்டத்தில், மிக முக்கிய நகராக ஹட்டன் கருதப்படுகின்றது. மூவின மக்களும் இணைந்து வாழும் நகரங்களில் இதுவும் ஒன்று. இந் நகருக்கு மிக அருகாமையில் உள்ள சிறு நகரமே டிக்கோயா. இந் நகரில் இருந்துதான் சாஞ்சிமலை, சலங்கண்டி, போடைஸ் வழியாக டயகம போன்ற இடங்களுக்கான வீதி செல்கிறது.

மேற்குறிப்பிட்ட இடங்கள். நகரங்கள் என்ற தரத்துக்கு வளராவிட்டாலும், இவ்விடங்களில் ஏராளமான மக்கள் வசிக்கின்றனர். ஹட்டன் பஸ் டிப்போவில் இருந்து மூன்று இடங்களுக்கான பஸ் போக்குவரத்தும் நடைபெறுகின்றது. ஹட்டனிலிருந்து, டிக்கோயா வழியாகச் சென்றே மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல வேண்டும். குறிப்பாக டிக்கோயாவிலிருந்து பிரிந்து செல்லும் இவ்வீதியை தரவளை வீதி என்றே அழைக்கின்றனர். இத் தரவளை வீதி, கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக படுமோசமான நிலையிலேயே இருந்து வருகின்றது. துவிச்சக்கரவண்டிக்குக் கூட இவ்வீதியால் பயணஞ் செய்ய முடியாத நிலையில், வேறு வாகனங்கள் பயணஞ் செய்யும் கஷ்டநிலைமை கவலைக்கிடமானது.

பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர் என நாளாந்தம் பயணிக்கும் மக்கள் இவ்வீதியால் பயணஞ் செய்வதன் மூலமே அலுப்படைந்து விடுகின்றனர். மேலும் வாகன உரிமையாளர்கள், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இவ்வீதியால் பயணஞ் செய்கின்றனர். இதனை விட பாதசாரிகள் அனுபவிக்கும் துன்பம் மேலானது. மழைக்காலங்களில் இவ்வீதியால் நடந்துசெல்வது என்பது, 5 நிமிட பயணத்தையும், அரை மணித்தியால நேரத்தில்தான் கடக்க வேண்டிய நிலைமையிலுள்ளது. பாடசாலை மாணவர்கள் தங்களது உடைகளைப் பாதுகாக்க, மழை நாட்களில் குடையினை வானை நோக்கிப் பிடிப்பதை விட வீதியை நோக்கியே பிடிக்கின்றனர். ஏனெனில், வீதியில் நிரம்பி வழிகின்ற நீர் நிலைகளின் எண்ணிக்கையேயாகும். இந்நிலை அனைவருக்குமே ஏற்படுகின்ற வழமையான அம்சமாக இவ்வீதியில் பயணிப்போருக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வீதியால் செல்லும் மக்களும், வாகன உரிமையாளர்களும், பொது மக்களும் அவ்வப்போது தமது எதிர்ப்புகளைக் காட்டினாலும், இதுவரை அடைந்த பயன் எதுவும் இல்லை. இறுதியாக இவ்வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட தனியார் வாகன உரிமையாளர்களும், பொதுமக்களும், நலன் விரும்பிகளும் இணைந்து இவ்வீதியால் போக்குவரத்துச் செய்வதைத் தடைசெய்து அமைதிப் போராட்டம் ஒன்றினை நடாத்தினர்

ஆனால், அப்போராட்டம் நடைபெற்றபோது அங்கு வருகை தந்த மத்திய மாகாண கல்வி, போக்குவரத்து அமைச்சர், வீதியை புனர்நிர்மாணம் செய்து தருவதாகவும், போராட்டத்தினைக் கைவிடுமாறும் வாக்குறுதியளித்து அப்போராட்டத்திற்கு முடிவு ஒன்றினைக் கொண்டு வந்தார்.

ஆனால் அவ்வாக்குறுதி, அந்த நிமிடமே காற்றோடு பறந்துவிட்டது. இப்படித்தான் மலையக மக்கள் போராடி, தமது நியாயங்களைப் பெற்றுவிட முனைந்திடுகையில் அரசியல்வாதி எனும் சமூக சேவகர்களால்(?) தடுத்து நிறுத்தப்படுகின்றனர். இவ்வாறான செயல்களால் இரண்டு விடயங்கள் இவர்களுக்கு சாதகமாக அமைகின்றன....


ஒன்று மலையக மக்கள் சுயமாகப் போராடும் நிலையைத் தடுத்து நிறுத்துதல். மற்றது தங்களை மீறிய செயற்பாடுகள், மலையகத்தில் நடைபெறாது தடுத்து நிறுத்துதல் என்பனவாகும்.

எனவே மலையக அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்குவதில் காட்டுகின்ற அக்கறையினை, செயற்பாடுகளில் காட்டுவார்களா? என மலையக மக்கள் எதிர்ப்பார்ப்பது, எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விட்ட கதையாகும். மலையக மக்கள் போராடும் பலத்தை வளர்த்துக்கொண்டால், வீதியின் அவல நிலை மாத்திரமல்ல... மலையகம் எதிர் நோக்கும் தடைகளும் நீங்கும். இதை மலையக மக்கள் உணர்ந்துக்கொண்டால் விடிவு வெகு விரைவில் கிட்டும்.

*– 'மலைக்கவி' கா. சுபாஷ்.*


விளம்பரப் பகுதி

# சிங்கப்பூரில் தங்குமிட வசதி



**சிங்கப்பூரில் வீடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக**

**கை தொலைபேசி எண் : 0065 97514941**
**தொலை நகல் (Fax) : 0065 64816144**
**படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.**

**LINGAM WEDDING SERVICES**
10, Anson Road, #15-14, International Plaza, Singapore 079903


# தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ:மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**





**தெய்வீக மருத்துவம்**

**சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை**
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka – தெய்வீகம் ஸ்ரீலங்கா
Head Office – தலைமையகம்
Batticaloa – மட்டக்களப்பு
**Tele/Fax : 065-2224825, +94777032844.** Balu Sothidar @ hotmail.com.

***"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"***
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"


# கண்டெடுத்த அடையாள அட்டைகள்

கண்டெடுக்கப்பட்ட ஐந்து அடையாள அட்டைகளும் பிறப்புச் சான்றுப் பத்திரம் ஒன்றும் 'முரசு' ஆசிரிய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிட்டுள்ள பெயர்களும் இலக்கங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.


| | |
|---|---|
| துரைராஜா தேவராஜன் | - 543470724V |
| இப்ராஹிம் மொஹமட் பஹ்மி | - 761724339V |
| ஜானகி பரமானந்தம் | - 686101096V |
| ஆறுமுகம்சங்கரப்பிள்ளை செல்வரத்தினம் | - 382691601V |
| பஸ்னா ஜெய்னுல் ஆப்தீன் | - 617242168V |

இவற்றுடன் நவரெட்ணம் ரெட்ணஜோதி நிரஞ்ஜன் என்பவரது பிறப்புச் சான்றுப் பத்திரமும் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் போதிய சான்றுகளைச் சமர்ப்பித்து 'முரசு' ஆசிரிய பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


*தொடர்புகளுக்கு :- 011- 4514282*


# தமிழ் KEY BOARD விற்பனைக்குண்டு


**கல்யாணி, பாமினி, கலகம் பொன்டுடன் (Fonts) தமிழ் Key Board விற்பனைக்குண்டு. வெளிநாட்டவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.**




**SPG PC COMPUTER**
NO. 23, MAY FIELD ROAD, COLOMBO - 13.
Tele. Phone No :- 0777588405



மலையாள மாந்திரிக சக்தி





(1) மலையாள தேசத்தில் வசிப்பவளே ஸ்ரீ துர்க்கா தேவி ! ஸ்ரீ துர்க்கா தேவியின் பீடம் மலையாளமே! மலையாள தேசத்தின் தனி மகத்துவம் மலையாள மாந்திரிகம். அது மட்டுமா? விதியின் விபரணம் சாஸ்திரம், சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளமே! **மலையாள மாந்திரிக பேராரசர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P ஐயா அவர்களே**

(2) இலங்கையில் தொண்டு தொட்டு 46 வருடகாலமாக நுவரெலியாவிலும் கொழும்பிலும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயங்களை அமைத்து அன்றாடு 6 மணித்தியால அக்கினி குண்டலி பூஜை நடை பெருவதாலேயே! எண்ணியது எண்ணியவாறு நிறைவேறுகிறது

(3) உண்மைக்கு எடுத்து காட்டாக இது ஒரு வரையருக்கப்பட்ட தனியார் துரை P.K. Saamy Associate (Pvt) Ltd நிறுவனமாக இயக்கி வருவதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் மாந்திரிக சித்த ஞானத்தால் காரியம் நிறைவேறும் திகதியை உடனே கூறிவிடும் சக்தி இங்கு இருக்கிறது.

(4) மேலும் ஐயாவின் பிரதான அனுசரணையுடன் வழங்கும் ஞாயிறு தோறும் சக்தி தொலை காட்சியில் இரவு 7 மணிக்கு **வேலன்** தொடரை தொடர்ந்து பார்த்து வேலன் மகிமையை கண்டறியுங்கள். மேலும் **கை அளவு உலகு** ஐரோப்பா முழுவதும் வெள்ளிதோறும் London நேரப்படி காலை 9.30 மணிக்கு கை ரேகை தொடர் நிகழ்ச்சியை Vectone TV பார்க்க தவறாதீர்கள். மேலும் விபரம் அறிய வெப்தலத்தை நாடுங்கள் www.drpksamy.com www.gangatharan.com

(5) இங்கு தீய வேலைகளுக்கு ஒருபோதும் இடமில்லை மனித ரூபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமையை கண்டறிய மாதம் தோறும் இறுதியில் நடைபெறும் 11 மணித்தியால அக்கினி குண்டலி யாக பூஜையில் கலந்து கொண்டால் இவ் அற்புதத்தை கண்டறியலாம். அன்று அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கபடும்

(6) **இனி உங்கள் பிரச்சனை என்ன?**
தீராத நோய் தீர வேண்டுமா? ஆஸ்மா நோயால் அவஸ்தையா? பாரிச வாதமா? பக்க வாத விளைவுகளா? கை கால் உளைச்சலா? மன பேதளிப்பா? விரக்கிதியா–படபடப்பா? - பில்லி சூனியமா? பேய் சேட்டையா? எதிரிகளின் சதிதிட்டத்தில் விடுபட வேண்டுமா?

(7) மற்றும் பிரிந்து போன கணவன்–மனைவி–காதலன் காதலி ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாணத்தடை நீங்க, மது போதையில் இருந்த விடுபட, குபேர வாழ்வு அச்சர கூடு அணிந்து கொள்ள, கல்வி ஞான கவசம் பெற, தலைமுடி உதிர்வதை தடுத்து கொள்ள, இளம் நரையை போக்க, தலைமுடி வளர, சோம்பலை தவிர்க்க, வியாபாரம் விருத்தியடைய, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நன்மை பெற, கடற் தொழில் வியாபாரம் முன்னேற, வண்டி (வாகனம்) இலாபத்துடன் செயல்பட, விரும்பிய தொழில் கிட்ட, சென்றவர்கள் தேடிவர, முன்வினை தோஷம் கரும தோஷம் செவ்வாய் தோஷம் பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பேறு கிட்ட, அதிஸ்டகல் மோதிரம் அணிந்து கொள்ள, இன்னும் உங்கள் குறைகளுக்கு நேரில் என்னை சந்தித்து ஆலோசிக்கவும்.(வெள்ளி ஞாயிறு கிழமை தவிர்த்து)

(8) இன்னும் அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே! பிழைத்தது இல்லை நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, எத்தனையாம் திகதி திருமணம், எத்தனை மணிக்கு எத்தனையாம் திகதி பிரயாணம், எத்தனையாம் திகதி–எண்ணியது நடக்கும், சரிவருமா? சரிவராதா? என்பது இத்தனையாம் திகதி சரிவந்து விடும், என்று அறிந்த தெரிந்து செயல் பட முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும்.

(9) தொலைபேசியில் விளக்கம் பெற விரும்புவோர் எனது சிரேஸ்ட தெளிவுரையாளர் சிவா விடம் நேரத்தை ஒதுக்கி கொண்டு தெளிவு பெறலாம் அணைத்து தொலை பேசிக்கும் எம்மிடம் (C.L.I) உண்டு வெளிநாட்டவருக்கு விஷேட தொலைபேசி வசதியுண்டு.


**உலக மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி**

**பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N.) J.P.**

**ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரிக உச்சாடன பீடம் 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு – 13.**
தொலைபேசி (CLI) :- (0094 -11)- 2342463,2342464,2470615,2449110, 2431137, 4616331, 4616127, 46131124, 4613133, Fax: 2344831
Mobile :- +0094 777-588405 E-mail:- drpksamy@sltnet.lk web:- www.drpksamy.com, www.gangatharan.com

**கிளைகள்** நுவரெலியாவில் (P.T.R ஐயாவை சந்தியுங்கள்) ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் 33, கண்டி வீதி, தொ.பே: 0094-052-2222508/4490031/2223093
வெள்ளவத்தையில் 107/B, காலி வீதி, கொழும்பு–06. தொ.பே :- 0094 -11- 2552485

# இன்னொருவர் பார்வையில்



**'தமிழ் கிளர்ச்சியை ஸ்திரமற்றதாக்குதல்' என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் ஏ.எம்.நவரத்ன பண்டார எழுதிய கட்டுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. 'த ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகையில் கடந்த 29 ஆம் திகதி இக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆயுதமேந்திய இயக்கமொன்று தனது போராட்ட நடவடிக்கைகளைக் கைவிட்டு சில, பல வருடங்களுக்கு அமைதியாக இருக்குமானால் அதன் யுத்த குணாம்சங்கள் படிப்படியாக இல்லாமல் போய்விடுமென்ற எடுகோளின் அடிப்படையில் இக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. சுனாமி நிவாரண சபை புலிகளைப் பலவீனப்படுத்துமென்பது அவரின் தர்க்கரீதியான நியாயம்**

# புலிகளை வீழ்த்துமா சுனாமி எலிப்பொறி?

**எல்.ரி.ரி.ஈ.**யின் நம்பகத்தன்மையைப் பரிசீலிக்கக் கிடைத்திருக்கும் யோசனையொன்றினை பயன்படுத்தக் கூடிய ஒரு சந்தர்ப்பம் குறித்து, ஜே.வி.பி. பெரும் கூச்சலிடுகிறது. சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபையூடாக அரசாங்கத்தோடு சேர்ந்து செயலாற்றி, பொதுப் பிரச்சினைக்குத் தீர்வு காண புலிகள் இயக்கம் முன்வந்துள்ளது. அதாவது வடக்குக் கிழக்கில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் புனரமைக்கும் நோக்குடனேயே இச் சபை அமைக்கப்படுகிறது. சகல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகளை பிரதான அரசியல் நீரோட்டத்திற்குக் கொண்டுவர ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார். அத்துடன் புனரமைப்பு முகாமைத்துவப் பணிகளுக்கென வழங்கப்படும் உதவிகளுக்கூடாக உலகளாவிய சந்தைச் சக்திகளுடன் ஒப்பந்தமொன்றினையும் செய்து கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சில தலைவர்கள் ஒளித்து விளையாடும் செயற்பாடுகளை மேற்கொண்டாலும், ஜனாதிபதிக்கு பின்துணையாக நிற்க, சுதந்திர கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. புலிகள் இயக்கம் அதன் பயங்கரவாத செயற்பாடுகளை முற்றுமுழுதாகக் கைவிட்டு விடவில்லை. என்றாலும் புலிகளுடன் இணைந்து செயற்படும் சவாலை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கும் ஜனாதிபதி, முகாமைத்துவ தீர்மானம் எடுக்கும் வழிமுறைக்கு புலிகளை உள்வாங்க முயற்சி செய்கிறார்.

இந்த சுனாமி நிவாரண சபை அமைக்கப்பட்டால், அது அரசாங்கத்திற்குப் பெரும் சவாலாக அமையும். ஏற்கனவே சமய உணர்வுகளால் கொந்தளித்துக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தில் சிங்கள, முஸ்லிம் மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டியவராகவும் அவர் உள்ளார். இன்னமும் ஆயுதங்களை வைத்திருப்பதோடு, கொழும்பு அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்து தொடர்ச்சியாகச் சந்தேகம் கொண்டிருக்கிறது புலிகள் இயக்கம். இவ்வாறான கிளர்ச்சி அமைப்போடு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது மிகவும் கஷ்டமான விடயமாகும். பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வழமை போன்று "ஒளித்து விளையாடும்" வேலையைச் செய்கிறது. சுனாமி நிவாரண சபைக்கு ஆதரவு வழங்கும் சமிக்ஞைகளைக் காட்டிவரும் அதேவேளை, அரசாங்கத்துக்குள் இடம் பெறும் உள்மோதல்களைப் பயன்படுத்தி, அரசியல் இலாபமீட்ட ஐ.தே.க. முயன்று வருகிறது. ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. நாடு சிதைவுற்றிருக்கும் இந்த நிலைமையில்கூட இலங்கையின் நீரோ மன்னர்கள் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வோடு விளையாடுகிறார்கள். அவர்கள் தமது புகழ்மிக்க கடந்த காலங்களை நினைவில் வைத்துக் கொண்டு வாழ விரும்புகிறார்கள். இதனூடாக தமது அரசியல் எதிரிகளைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கையும் கொண்டுள்ளனர். தமது கட்சி அரசியல் நலன்களுக்கப்பால் இந்த நெருக்கடியைப் பார்க்க வேண்டியுள்ளது என்பதை இவர்களில் எவருமே புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

தற்போதைய கட்டத்தில் அரசியல் கட்சிகள் கையாளுகின்ற இந்தப் பிரச்சினை அவர்களது அரசியல் நலன்களோடு சம்பந்தப்பட்டுள்ளது. தற்போதைய சவால் அரசுக்கு விடுக்கப்பட்டுள்ளது. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது. தமிழ் கிளர்ச்சியை தீவிரமற்றதாக்குவதற்குத் தேவையான காத்திரமும் விரைவுமிக்க வழிமுறைகளைத் தேட வேண்டியதே அரசு எதிர்கொள்ளும் சவாலாகும். எவ்வளவு விரைவாக அரசு இந்தப் பணியைப் பூர்த்தி செய்கிறதோ அந்தளவு விரைவாக இன்றைய உலகப் பண்பாட்டு பயன்பாடுகளைப் பெறுவதற்காக உலக சமூகத்துடன் இணைந்துகொள்ள முடியும். தமிழ் கிளர்ச்சியை இலங்கை அரசு வெற்றிகரமாகக் கையாளுமானால் முன்னெப்பொழுதையும்விட வலுவுள்ளதாகத் திகழும்.

எந்தவொரு தீவிரவாத அல்லது புரட்சிகர இயக்கத்தைப் பொறுத்தவரை

**உலகளாவிய அரசியலமைப்பிலும் பிராந்திய அமைப்பிலும் எதிர்பாராத ஏதாவதொரு பாரிய நிகழ்வு ஏற்பட்டாலேயொழிய, இலங்கையின் வடக்குக் கிழக்கில் சுதந்திரமான தமிழீழ இராச்சியத்தை ஏற்படுத்த முடியாது என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். ஏனைய நாடுகளோடு, குறிப்பாக அயல் நாடுகளோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கும் ஒரு நாட்டைப் பிரிப்பதற்கு தற்போதைய உலக ஒழுங்குமுறை எவ்வித ஊக்கத்தையும் அளிக்க மாட்டாது.**

அவற்றின் தீவிரத் தன்மை கால ஓட்டத்தில் குறைந்து போவது இயற்கையானதுதான். இந்த அரசியல் விஞ்ஞானக் கோட்பாடு தீவிரவாத இயக்கங்களின் காலவோட்டத்தோடு பரீட்சிக்கப்பட வேண்டியது. இந்த இயக்கங்கள் குறுகிய காலத்துக்குள் தமது இலக்கை அடையவில்லையென்றால் நீண்ட கால நோக்கில் அவை தமது நிலையைத் தக்க வைத்துக்கொள்வது பிரச்சினைக்குரியதாக அமையும். பெரும்பாலான மக்கள் பிரிவுகளிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற அவர்கள் முயற்சி செய்வார்கள். புரட்சிவாதிகள் என்ற அவர்களின் நிலைப்பாடு நிராகரிக்கப்பட்டால், அவர்கள் அரச அமைப்புகளில் சேர்ந்து கொள்ள முயற்சிப்பார்கள்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் தற்போது ஒரு முக்கியமான திருப்புமுனையில் வந்து நிற்கிறது. புலிகள் மேற்கொள்ளும் தமிழ் கிளர்ச்சியை தீவிரமற்றதாக்கி, தணிக்கச் செய்யும் சவாலை அரசு எதிர்கொள்கிறது. ஐ.தே.க. அரசினால் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் புலிகளின் தீவிரத்தைத் தணிப்பதற்கான வழியைத் திறந்து விட்டுள்ளது. எவ்வாறாயினும் புலிகளை வன்செயலற்ற அரசியலுக்கு கூட்டிவருவதற்கென அமைக்கப்பட்ட உபகமிட்டிகள், குறிப்பாக 'சிரான்' போன்றவை இன்றுவரை செயற்படத் தொடங்கவில்லை. தற்போது சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபை முன்வைக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு சமாதான முன்னெடுப்புக்காக முன்வைக்கப்பட்ட யுத்த நிறுத்த செயல்முறையைப் போன்று இந்த நிவாரண சபை மற்றொரு நடவடிக்கையாகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இம்முறை கடவுள் வழங்கிய சந்தர்ப்பமாக இது திகழ்கிறது. பூமித் தாயே இம்முறை அந்த சவாலை முன்வைத்திருக்கிறாள். உதவி வழங்கும் நாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் சொந்த நலன்கள் இருக்கலாம். இந்த இயற்கை அழிவைப் பயன்படுத்தி அவர்கள் தமது உலகளாவிய முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்லலாம். எம்மிடம் நாட்டின் மிகப் பரந்த தேசிய நலன்களுக்காக அர்ப்பணிப்போடு செயல்படக் கூடிய சிறந்த நிருவாகமும் அரசியல் தலைமையும் இருக்குமேயானால் சிங்கப்பூரில், மலேசியாவில், தென்கொரியாவில் இடம்பெற்றதைப் போன்று வெளிநாட்டு உதவிகளின் பலாபலன்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

சுதந்திர இராஜ்ஜியம் ஒன்றை நிறுவும் திட்டத்தைக் கொண்டிருக்கும் பயங்கரவாதக் குழுவொன்று சட்டபூர்வ அந்தஸ்தைப் பெறுவதற்கு மிகத் தீர்க்கமான சாதக சூழ்நிலையை இந்தச் சுனாமிச் சபை ஏற்படுத்துமென்று இதனை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். இலங்கை நிலப்பரப்பின் ஒரு பகுதியை பிரித்தெடுப்பதன் மூலம் புலிகள் சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற்றுவிடுவார்களென்றும் இந்த எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். ஆனால், நிவாரண சபையை ஆதரித்துப் பேசுபவர்கள் புலிகளும் இதில் அங்கம் வகிப்பதால் அவர்களை சாதாரண அரசியல் வழிமுறைக்குக் கொண்டு வருவதற்கும் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கும் இது உதவுமென்று கூறுகின்றனர். இந்த இருதரப்பு வாதப் பிரதிவாதங்களுமே முரண்பட்டவையாக இருக்கவேண்டிய கட்டாயமில்லை. ஒரு தொடர் நிகழ்வின் இரு அந்தங்களை இவை பிரதிபலிக்கின்றன. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முனையும் அரசின் கொள்கையைப் பொறுத்தவரையில் அதற்கான ஒரு தொடர் நிகழ்ச்சியின் இரு அந்தங்களே இவை என்பது வெளிப்படையான கணிப்பீடாகும். இதனை வெற்றிகரமாக கையாளுவதன் மூலமே சிறந்த நிலையை எட்ட முடியும்.

உலகளாவிய அரசியலமைப்பிலும் பிராந்திய அமைப்பிலும் எதிர்பாராத ஏதாவதொரு பாரிய நிகழ்வு ஏற்பட்டாலேயொழிய, இலங்கையின் வடக்குக் கிழக்கில் சுதந்திரமான தமிழீழ இராச்சியத்தை ஏற்படுத்த முடியாது என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். ஏனைய நாடுகளோடு, குறிப்பாக அயல் நாடுகளோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கும் ஒரு நாட்டைப் பிரிப்பதற்கு தற்போதைய உலக ஒழுங்குமுறை எவ்வித ஊக்கத்தையும் அளிக்க மாட்டாது. 1980களில் பனிப் போர் அரசியலிலிருந்து புலிகள் நலன்களைப் பெற்று பல்வேறு 'தேசங்களுக்கிடையிலான ஓர் அமைப்பாக' புலிகள் தோற்றம் பெற்ற போதிலும் ஒரு சுதந்திர தமிழீழ ராஜ்ஜியத்தைப் பெறுவதற்கு இது உதவப் போவதில்லையென்பது அவர்களுக்கு நன்கு தெரியும். 1980களின் ஆரம்பத்தில் தனித் தமிழீழ ராஜ்ஜியத்தைப் பெறுவதற்கு இந்தியா உதவுமென்று புலிகள் நம்பியிருந்தனர். இதனை அடைவதற்கு இந்தியா உதவப் போவதில்லையென்பதை அவர்கள் தற்போது புரிந்து கொண்டுள்ளனர். இப்போது முழு உலகமுமே, இலங்கை அரசோடு ஒப்பந்தமொன்றை செய்து கொள்ளுமாறும், ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் புலிகளை வலியுறுத்தி வருகின்றன. இறுதியாக இலங்கை அரசோடு ஒப்பந்தத்திற்கு வருவதற்கு புலிகள் இப்போது முயற்சி செய்கின்றனர். இதனை வழங்குவதற்கு இலங்கை அரசு தயாராக இல்லையென்றால் வடக்குக் - கிழக்கில் ஏனைய நாடுகளின் மறைமுக அங்கீகாரத்தோடு ஒரு நிழல் அரசொன்றினை வைத்திருக்கும் ஆயுதக்குழுவாக அவர்களால் தொடர்ந்திருக்க முடியுமென்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால், தற்போது உலகமயமாக்கலென்ற துரிதத் திட்டத்தோடு முன்செல்லும் தற்போதைய உலக அமைப்பில் ஒரு வலுவான திட்டமாக இது இருக்க முடியாதென்பதும் அவர்களுக்குத் தெரியும்.

எனவே அரசியல் தலைமைத்துவத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவாலே இது. எனவே இலங்கை அரசாங்கம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிளர்ச்சியாளர்களோடு ஓர் இணக்கத்திற்கு வரவேண்டும். இதன் மூலம் சுதந்திர தமிழ் இராஜ்ஜியம் என்ற கருத்தோட்டத்தை தேவையற்றதாக்குவதற்கு கடினமாகச் செயற்பட வேண்டும். இதன் மூலம் தமிழ் கிளர்ச்சிவாதத்தின் தீவிரத்தைத் தணிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவமுடியும். எனவே இந்த சுனாமி நிவாரணச் சபை வெற்றியளிக்குமானால் அது கிளர்ச்சி இயக்கத்தோடு இன்னுமொரு இணக்கத்துக்கு வருவதற்கான மற்றொரு நடவடிக்கையாக மட்டும் அமையாது, தமிழ் கிளர்ச்சியின் தீவிரவாதத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கையாகவும் அமையும்.

சுனாமி நிவாரணசபை யோசனைகளை ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் இந்த விவாதத்தில் கலந்து கொண்ட விதம் பற்றி நாம் பார்த்தோம். புலிகளோடு ஆக்கபூர்வமான உறவை ஏற்படுத்துவதற்கான துணிவு இவர்களுக்கு உண்டா என்பதையும் அரசியல் தீர்வொன்றிற்கு முன்வந்து சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான விசுவாசத்தைப் புலிகள் கொண்டிருக்கிறார்களா என்பதும் எதிர்காலத்தில் அம்பலமாகும்.

நன்றி : த ஐலண்ட்

**பிந்துனுவேவா படுகொலை மற்றும் அதன் தொடர் நிகழ்வுகள், தீர்ப்புகள், தீர்மானங்கள் பற்றிய மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர்கள் சங்கத்தின் விசேட அறிக்கையைத் தழுவி எழுதப்பட்ட விடயதானங்களைக் கடந்த இரு வாரங்களாக பிரசுரித்திருந்தோம். சகல தரப்புப் பயங்கரவாதிகளுக்கும் எதிராகப் பேனாமுனையும் போராட வேண்டியிருக்கிறது. எனவேதான் கவனமாகவும் கனகச்சிதமாகவும் 'பயிரை மேய்ந்த வேலிகள்' பற்றியும் 'வேலி தாண்டிய வெள்ளாடுகள்' பற்றியும் எழுதப்பட்ட இந்த விடயதானத்தின் இறுதிப் பகுதி இங்கே தரப்படுகிறது.**

"பிந்துனுவேவா படுபொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான தீர்ப்பை மாற்றி வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்மானம் எவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்காது. தண்டனை கிடைக்குமென்ற பயமின்றிக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதே இலங்கையில் சட்ட விதியாக இருந்து வந்துள்ளது. அது விதி விலக்காக இருந்ததில்லை. ஆயிரக்கணக்கான கொடூரங்கள், கொலைகள், சித்திரவதைகள், கற்பழிப்புகள், ஆட்கள் காணாமல் போதல் ஆகியவை அதிகாரத்துவ மந்த நிலை வேலைகள் என்ற பெரும் குவியலுக்குக் கீழ் புதைக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தில் உள்ளவர்களே பொறுப்புச் சொல்ல வேண்டுமென்று மக்கள் ஸ்தாபன மயப்பட்டு, தொடர்ச்சியான கோரிக்கைகளை முன் வைக்காதவரை, அரசியல் கையாள்கை, ஊழல், நிர்வாகத் திறமையீனம் ஆகியவை தொடர்ந்தும் புதையுண்டே இருக்கும்." என்று மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக போதனாசிரியர்கள் சங்கம் ஜூன் 12 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

"தகவல்கள் கிடைக்கவில்லை என்பதற்காக நீதி கிடைக்காமல் போய்விடக் கூடாது. பல்வேறு வழக்குகளில் தொடர்புப்பட்டவர்களின் பெயர்கள், அவர்கள் சம்பந்தப்பட்ட விபரங்கள், அவர்களின் பதவி நிலைகள் ஆகியவை தெரிந்தவைதான். ஆனால், இலங்கையிலுள்ள மன்றுகள் மற்றும் அவை சார்ந்த நிருவாக அமைப்புகள் அரசியல் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த பிரமுகர்களுக்குப் பக்கச்சார்பாக இருக்கிறது." என்றும் அறிக்கை கூறுகிறது.

சிரேஷ்ட அதிகாரிகளின் அதிகாரப் பொறுப்புப் பற்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டியது ஓர் அவசியத் தேவையாகும். குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்வதற்காகவும் பாதுகாப்பு நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காகவும் இவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. உயர் மட்டத்திலுள்ளவர்கள் பயமின்றி குற்றச் செயல்களில் ஈடுபடுவது நிறுத்தப்படாதவரை திட்டமிட்ட வன்செயல்களைத் தடுத்து நிறுத்தி விடமுடியாது. அத்துடன் நீடித்த சமாதானம் ஏற்படக்கூடிய வாய்ப்புக் கிட்டாது.

இத்தகைய தீங்கான நிலையை மாற்ற வேண்டுமானால் சர்வதேசக் கிரிமினல் நீதிமன்றத்தின் ரோம் சட்டவிதிகளை அங்கீகரிக்க வேண்டுமென்று இலங்கை அரசை மக்கள் வற்புறுத்த வேண்டும். எதிர்காலத்தில் நிகழக் கூடிய யுத்தக் குற்றங்கள், இன ஒழிப்பு நடவடிக்கைகள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்காகவே சர்வதேச நீதிமன்றத்தை இலங்கை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்.

இவ்வாறு தண்டனை கிடைக்குமென்ற பயமின்றி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று விரும்புபவர்கள் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையின் அச்சுறுத்தல்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அத்துடன் புலிகளின் விமானம் மற்றும் கடற்படை அணிகளையும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையில் பயமின்றி குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு இலங்கை யிலுள்ள அரசியல், இராணுவ, பொருளாதார வங்குரோந்து நிலையே முக்கிய காரணமாகும்.

தற்போதைய சமாதான பேச்சுவார்த்தைகள் முறிந்து போய்விடுமென்ற பயத்தின் காரணத்தினால், நாளை சமாதானத்தை ஏற்படுத்தப் போகின்றவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் தரப்பினரை அவற்றிற்குப் பொறுப்பாக்க எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிக்க உதவுகின்றனர். சமாதான முன்னெடுப்புகளின் சக்தி, இருதரப்பினரின் குற்றச் செயல்களில் ஓர் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அரசு தரப்புக் குற்றங்கள் (மிகப் பயங்கரமாக இடம் பெற்று, ("யுத்த நிறுத்தத்தின் பின்னர் கணிசமாகக் குறைவடைந்தது) புலிகளின் குற்றங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளுக்குக் கிடைத்த புதிய சுதந்திரங்களின் காரணத்தினால் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியிலும் கூட தங்குதடையின்றி குற்றச் செயல்கள் அதிகரித்தன") என்பதே இத் தொடர்பாகும். உண்மையில் சமாதான முன்னெடுப்பு, தாம் விரும்பியபடி கொலை செய்வதற்கு புலிகளுக்குச் சுதந்திரம் அளித்துள்ளது. அரசியல் மற்றும் இராணுவ எதிர்பாளர்களையும் கீழ்மட்டப்புலனாய்வாளர்களையும் சாதாரண குடிமக்களையும் புலிகள் கொன்று வருகின்றனர்.


(முற்றும்)

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

ஆயினும்,இந்த வளர்ச்சிக்கெல்லாம் அஸ்திவாரம் என் அன்புசால் அண்ணன், மெல்லிசை மன்னர் திரு. விஸ்வநாதன் தான் என்பதை நான் எந்தக் கோவிலிலும் சத்தியம் செய்து சொல்லுவேன்.

அவரோடு இணைந்து நான் இரண்டாயிரம் பாடல்களுக்கு மேல்



எழுதியிருக்கிறேன். இன்னமும் எழுதிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய எண்ணற்ற பாடல்களுக்கு சாகாவரம் தந்த சரித்திர புருஷர் அவர். அவருடைய கூர்மையான இசையறிவில், என் தழிழை நான் சாணை பிடித்துக் கொண்டேன். நானும் கவியரசர் கண்ணதாசனும் எழுதித்தந்த பாடல்களுக்கு அவர் இசையமைத்தார் என்பது பாதி உண்மைதான். பெரும்பாலான எங்களது பாடல்கள் அவருடைய வர்ண மெட்டுக்கேற்ப வார்த்தெடுக்கப்பட்டவையே! மெட்டுக்கு எழுதப்பெற்ற பாடல்கள் கூட, எழுதி மெட்டமைக்கப்பட்டது போல் கருத்துச் செறிவோடு விளங்கும். அதற்கான கால அவகாசம் அப்போது இருந்தது என்பதுதான் உண்மை.

வாடிகன் கிறிஸ்தவ ஆலயத்தில் மைக்கேல் ஏஞ்சலோ வண்ண வண்ண ஓவியங்கள் இன்னமும் காலத்தை வென்று அந்த சிற்பியின் மேன்மையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. மைக்கேல் ஏஞ்சலோ மிக உன்னதமான சிற்பியும் ஆவார்.

'எப்படிப் பாறைகளிலிருந்து இப்படி சிற்பங்களை உண்டாக்குதல் உங்களுக்கு சாத்தியமாக இருக்கிறது?' என்று மைக்கேல் ஏஞ்சலோவிடம் ஒருமுறை கேட்கப் பட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு பதிலிறுத்தார்.

'பாறையிலிருந்து நான் சிறபத்தை உண்டாக்குவதில்லை சிற்பம் ஏற்கனவே பாறையில் உருப்பெற்றிருக்கிறது. அதைச் சுற்றியிருக்கும் அனாவசியக் கற்களைத்தான் நான் உளி கொண்டு செதுக்கித் தள்ளுகிறேன்!' என்றார் மைக்கேல் ஏஞ்சலோ.

அண்ணன் விஸ்வநாதனும் இப்படித்தான் சொல்லுவார். ஒரு பாட்டை எழுதி அவரிடம் நீட்டினால், வெவ்வேறு தாளங்களில் அழகுற வர்ண மெட்டுகளை அமைத்து அதிசயிக்க வைப்பார்.

'எப்படி இவ்வளவு அழகாக மெட்டமைக்கிறீர்கள்?' என்று அவரிடம் கேட்டால்.

"நான் எங்கே மெட்டமைத்தேன்...? பாட்டுக்குள்ளேயே அதற்கான மெட்டு ஒளிந்து கொண்டிருக்கிறேன். அதைத் தேடிக் கண்டுபிடித்தாலே போதுமானது. அந்தப் பணியைத்தான் நான் செய்கிறேன்!' என்பார்.

அதுபோல், நாம் அவரது மெட்டுக்கு எழுதும்போது அதற்குரிய வார்த்தைகளை - வார்த்தைகளென்றால், வெறும் வார்த்தைப் பந்தலல்ல - அர்த்தமும் ஆழமும் நிரம்பிய அருமையான கவிதையை நாம் யாத்து தர வேண்டுமென்று விரும்புவார்.

இந்தப் பணியைச் செய்கின்ற புலவனை - தன் விரோதியாக இருந்தாலும், அவர் ஆரத்தழுவி வரவேற்பார்; தகுதியற்றவரை, தன் உறவினராயிருப்பினும் தூர ஒதுக்கிவிடுவார்.

தகுதியை மட்டும் நிறுத்தப் பார்க்கும் துலாக்கோல் போல் துலங்கியவர் விஸ்வநாதன். நல்ல பாடலை நாம் எழுதிவிட்டால், அதைத் தன் தலையில் சுமந்து கொண்டு ஊர் ஊராகச் சென்று தண்டோரா அடித்துச் சொல்வார்.

ஒரு முறை ஒரு படத்திற்குப் பாட்டெழுத விஸ்வநாத அண்ணனோடு அமர்ந்தேன்.

(தொடரும்.......)




---

### உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




விவாகரத்திற்குப் பிறகு குழந்தை யாரிடம் இருப்பது என்பதில் பிரச்சினை எழுந்தது. குழந்தை தன்னிடமே இருக்க லாரா அனுமதிக்காவிட்டால், அவளுடைய தகப்பனார் செய்துகொண்டிருக்கும் தேசத் துரோகக் காரியத்தை அரசாங்கத்திடம் தெரிவித்து விடப்போவதாக லாராவின் கணவர் மிரட்டினார்.

தந்தை செய்கிற காரியம் லாராவுக்குப் பிடிக்கவில்லையே தவிர, அவரை அவள் மிகவும் நேசித்தாள். அவர் சிறைக்குச் சென்று அவமானப்படுவதை அவள் விரும்பவில்லை. ஆகவே தன்னுடைய கணவர் விரும்பியபடி குழந்தை அவரிடமே இருக்க ஒப்புக்கொண்டாள்.

ஏதோ நெருக்கடியில் ஒப்புக்கொண்டாளே தவிர, நாட்கள் செல்லச் செல்ல அவளுடைய தாய்மைப் பாசம் மேலோங்கியது. தந்தை தொடர்ந்து தேச விரோதக் காரியங்களில் ஈடுபடுவது அவளுக்கு மன வேதனையை உண்டாக்கிற்று. குழம்பிப் போனாள். தன்னுடைய மன வேதனையைத் தாயாரிடம் எடுத்துச் சொன்னாள். அவளுடைய தாயாரின் பெயர் பார்பரா. தன்னுடைய கணவர் தேச விரோதக் காரியங்களில் ஈடுபட்டிருப்பது பார்பராவுக்குத் தெரியும். அதைக்கூட அவளால் தாங்கிக்கொள்ள முடிந்தது. அவளால் தாங்கிக்கொள்ள முடியாத இன்னொன்று இருந்தது. அதுதான் வேறு பல பெண்களோடு வாக்கர் கும்மாளமடித்து ஊரைச் சுற்றிக்கொண்டிருந்தது. ஆனாலும் கணவரைக் காட்டிக் கொடுத்து அவரைச் சிறைக்கு அனுப்ப அவளும் இஷ்டப்படவில்லை.

அடுத்து என்ன செய்வது என்பது குறித்து தாய்க்கும் மகளுக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. லாரா தன்னுடைய தாயாரிடம் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டாள். வாக்கரும் தன்னுடைய நாட்டு ரகசியங்களை அந்நிய நாடுகளுக்கு விற்று நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார். கடைசியில் லாரா தீர்மானமான முடிவுக்கு வந்தாள்.

வாக்கரின் ரகசியத்தை வெளியிட்டு வீடுவேன் என்பதைத்தான் லாராவின் கணவர் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வந்தார். அதைத் தன்னுடைய தாயாரே வெளியிட்டு விட்டால் தன்னுடைய கணவர் தன்னை மிரட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்றும், தன்னுடைய குழந்தையை தானே வளர்க்கும் பாக்கியம் கிடைக்குமென்றும் லாரா எண்ணினாள்.

தந்தையின் ரகசியத்தை வெளியிட்டு விடும்படியாக தாயாரை வற்புறுத்தத் தொடங்கினாள். தந்தைக்குத்தான் நாட்டுப் பற்று இல்லை, தாயாரும் நாட்டுப் பற்று இல்லாமல் எத்தனை நாளைக்கு வாழப் போகிறாள் என்று கேட்டாள். 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பார்பரா ஒரு முடிவுக்கு வந்து, FBI அதிகாரிகளிடமே தன் கணவர் பற்றிய எல்லா விவரங்களையும் சொல்லி விட்டாள். FBI யிடம் தகவலைச் சொன்னாளே தவிர, தன் கணவர் பொலிஸில் பிடிபடாமல் தப்பிச் செல்லுவதற்கு அவகாசம் கொடுத்தே சொன்னாள்.

FBI விசாரணை பல திடுக்கிடும் தகவல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. பிரமாண்டமான அமைப்பை தன்னுடைய நிர்வாகத்தில் வைத்துக்கொண்டு, இராணுவ ரகசியங்களைச் சேகரித்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு வாக்கர் வழங்கியிருக்கிறார் என்பது FBI அதிகாரிகளைப் பிரமிக்க வைத்தது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---


புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக இன்று உலகில் அறிமுகமாகியுள்ள பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய மருந்து வகைகளும் கர்ப்பத் தடை மாத்திரை களும் கடந்த சில வருடங்களாக எல்லோரையும் ஆட்டிப்படைத்து வருகின்றன. இதில் கர்ப்பத்தடை மாத்திரைகள் எனும்போது அவை அதிகமாகப் பெண்களுக்கென்றே தயாரிக்கப்பட்டு வருகின்றன.


# ஆண்களுக்கு மாத்திரை பெண்களுக்கு பிளாஸ்டர்

புதிய ஆய்வுகளின் பிரகாரம், பாலியல் உலகின் இரண்டாம் கட்டப் புதிய கண்டுபிடிப்பொன்றை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இப்போது வெளியிட்டுள்ளனர். இதனடிப்படையில் ஆண்களுக்கான கருத்தடை மாத்திரையொன்றை இன்னும் சில வருடங்களில் சந்தைக்கு விட இந்த விஞ்ஞானிகள் எதிர்பார்ப்புக் கொண்டுள்ளனர். உண்மையிலேயே இது விற்பனைச் சந்தையில் மாபெரும் புரட்சியையே ஏற்படுத்தும் என சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆண்களது கருத்தடை தொடர்பான ஆய்வுக்காக 55 வயதுகளையுடைய ஆண்களும், பிள்ளைகளைப் பிரசவிக்கக் கூடிய அதிகபட்ச தகுதிகளையுடைய பெண்களும் உட்படுத்தப்பட்டுள்ளனர். மேற்படி ஆய்வின்போது சுமார் ஒரு வருடக்காலமாக இந்தக் கருத்தடை மாத்திரையை இவர்கள் உபயோகப் படுத்திக் கொண்டுள்ளனர்.

இவ்வாய்வின் போது பெண்கள் கருத்தரிக்கவில்லை எனத் தெரியவருகிறது.






இம் மாத்திரையை உபயோகிப்பதன் மூலம் உடலில் உள்ளார்ந்த பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாதென்றும், இது காம உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் இம்மாத்திரை எதிர்காலத்தில் ஆண்களது பாரிய கவனத்தை ஈர்க்கக்கூடியதாகும் என்பது இவர்களது கருத்தாகும்.

பொதுவாகப் பெண்களிடமிருந்து விந்தணுக்கள் மாதமொரு முறையே வெளிவரும் என்ற போதிலும் ஆண்களிடமிருந்து நாள்தோறும் பல இலட்சக் கணக்கில் இவை உற்பத்தி செய்யப் படுகின்றன. இதனால் மேற்படி கருத்தடை மாத்திரை ஆண்களுக்கு பாரியதொரு சவாலாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கருத்தடை மாத்திரைகள் பெண்களைப் பொறுத்தவரையில் உடனடியாகச் செயற்பட்ட போதிலும் ஆண்களிடத்தே செயற்பாடு கொள்வதற்கு நீண்ட காலம் எடுப்பதாகும் எனத் தெரிய வந்துள்ளது. இதனடிப்படையில் விந்து உற்பத்தியைக் கட்டுப்படுத்துமுகமாக ஹோர்மோன்கள் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும் இதன் மூலம் ஹோர்மோன்களின் மட்டுப்படுத்தலானது ஒரு பிரச்சினையாகத் தலைதூக்கியுள்ளது. இதன் காரணமாக சோர்வு மற்றும் பாலியல் செயற்பாட்டில் மந்தத் தன்மை என்பனவும் ஏற்பட்டுள்ளன. இதனால் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற புதிய ஆய்வுகளின் போது மேலதிக ஹோர்மோன்கள் வழங்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் ஆண்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை Progestin ஊசி ஏற்றப்படுவதுடன் 4 மாதங்களுக்கு ஒரு தடவை Testtosterone வழங்கப்பட்டும் வருகிறது. இவை மேற்படி கருத்தடைக்குப் பெரிதும்



உபயோகமாகின்றன. என்றாலும் பெரும்பாலான ஆண்கள் இவற்றை மாத்திரைகளாக உட்கொள்ளவே விரும்புகின்றனர்.

அநேகமான ஆண்கள் ஊசி ஏற்றிக்கொள்வதை விரும்புவதில்லை. இதே நேரம் Testtosterone மேலதிகமாக எடுப்பதால் விந்து உற்பத்தியை வீழ்ச்சியுறச் செய்யலாம் என்பது ஆய்வாளர்களது கருத்தாகும். இக்கண்டுபிடிப்பு 1930இல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

1960இல் இதற்கான மாத்திரைகள் தயாரிக்கப்பட்ட போதிலும் அநேகமான ஆண்கள் இதனை உபயோகப்படுத்துவதற்கு அதிக விருப்பம் கொண்டிருக்கவில்லை. தங்களுக்குப் பிள்ளைகள் பிறக்காமல் போகும் என்ற எண்ணத்தினாலும், தங்களது ஆண்மைக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதனாலுமே இவர்கள் இதனை வெறுத்தனர்.

இதே நேரம் அநேகமான ஆண்கள், பெண்களைப் போன்று தூரநோக்குடன் சிந்திக்காமல் முடிவுகளை எடுப்பதும் உண்டு. எனினும் தற்போதைய ஆண்கள் மேற்படி மாத்திரையின்பால் நாட்டம் கொண்டிருப்பது இதனால் பல காரியங்கள் நடப்பதனாலேயே ஆகும் எனலாம்.

இதேநேரம் இன்னொரு புதிய விஷயமும் இப்போது வெளிவந்துள்ளது. அதாவது, ஆண்களது பாலியல் குறைபாடு தொடர்பான பிரச்சினைக்கு பல்வேறு சிகிச்சை முறைகள் உள்ளன. தினந்தோறும் பத்திரிகை, சஞ்சிகைகளைப் பார்க்கும்போது நாட்டு வைத்தியம் முதற்கொண்டு பல்வேறு சிகிச்சை முறைகள் இதற்காக வெளியிடப்படுகின்றன. எனினும், பெண்களின் பாலியல் ரீதியிலான குறைபாடுகளைப் போக்க எதுவிதமான சிகிச்சை முறைகளும் அதிகமாக வெளிவருவதில்லை.

பாலியல் குறைபாடு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் பலர் இருக்கின்றனர். பாலியல் செயற்பாடுகளின்போது திருப்தியுறாத ஒரு வகை நோய்க்கு ஆளாகியுள்ள பெண்களையும் காணலாம். இவ்வாறான பெண்களுக்கான புதியதொரு சிகிச்சை முறை இப்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இது தோலின் மீது ஒட்டக்கூடிய ஒருவகை பிளாஸ்டர் ஆகும். இதன் மூம் டெஸ்டொஸ்டெரோன் ஹோமோன்கள் படிப்படியாக உடலுக்குள் செலுத்தப்படுகின்றன. இந்தப் பிளாஸ்டரின் மூலம் பெண்களிடம் பாலியல் உணர்வுகள் தூண்டப்படுகின்றன.

குறைந்த வயதில் பருவமடைகின்ற பெண்களுக்குப் பாலியல் உணர்வுகள் இலகுவில் தூண்டப் பெறுவ தில்லை என்பதால், இவ்வகைப் பிளாஸ்டர்கள் இவர்களுக்காகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி அமெரிக்க உணவு மற்றும் மருந்தாக்கல் அதிகார சபை (FDA) மூலம் பிரொக்டர் என்ட் கெம்பல் கம்பெனியில் இருந்து சந்தைப்படுத்துவதற்காக கோரப்பட்ட இவ்வாறானதொரு பிளாஸ்டர் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, டெஸ்டொஸ்டெரோன் இவ்வாறு உடலினுள் செலுத்தப்படுவதால்அதனால் ஏற்டக்கூடிய நீண்ட காலத்துக்கான பாதிப்புக்கள் குறித்து மீளாய்வு செய்யவேண்டும் என்று கூறியே இது நிராகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி பிளாஸ்டர் மூலம் பெண்களின் பாலியல் குறைபாடுகளுக்கான சிகிச்சை வழங்கப்பட இயலும் என்பதை இவர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.


'நிவ் சயன்டிஸ்ட்' சஞ்சிகை கூறுவதன் படி பெண்களிடையே நூற்றுக்கு 40 வீதத்தினர் பாலியல் குறைபாடுகளால் பாதிக்கப்படுகின்றனர். இதனால், ஆண்களுக்கு 'வயாகரா' உற்பத்தி செய்தது போல் பெண்களுக்காக இவ்வாறானதொரு பிளாஸ்டரைக் கண்டுபிடித்து இலாபம் ஈட்டிக் கொள்ள விற்பனைச் சந்தை முயல்வதாகவும், இது ஒரு பண்பான செயல் அல்ல என்றும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.


இதேநேரம் பெண்களின் பாலியல் ரீதியிலான குறைபாடுகளை அந்தளவுக்கு மேலோங்கச்செய்து காட்டக்கூடாது என்றும், ஆண்களுடன் இவர்கள் இணையும்போது இருவருக்கிடையில் ஏற்படும் தொடர்புகளே இதனைத் தீர்மானிக்கும் என்றும் பெண்கள் அமைப்புகள் கூறுகின்றன.

'பெண்கள் பாலியல் ரீதியில் எவ்வாறு உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்பது தெரியும். ஆனால், அவர்கள் பாலியல் ரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்களது உணர்வுகளை சுதந்திரமாக வெளியிட வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை' என பெண் விடுதலை வாதியான ஷெயா் 'ஹைட் நிவ் சயன்டிஸ்ட்' சஞ்சிகைக்குக் கூறியுள்ளார்.

'பெண்களுக்குத் தேவை பாலியல் ரீதியில் உணர்ச்சியூட்டக் கூடிய மருந்து மாத்திரைகளல்ல; தன் துணையுடன் புது ரக செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய வாய்ப்புகளே ஆகும்' என அவர் மேலும் கூறுகின்றார்.

-பாரூக்





# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

# INFORMATION TECHNOLOGY PARK

MPCS Building, 127, K.K.S. Road, Jaffna, Sri Lanka. Phone : 021 2223641/Fax 021 2223643

எமது நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, விரும்பிய கீழே தரப்பட்ட கற்கை நெறிகளுக்கான பதிவுகளை 15.07.2005 வரை மேற்கொள்ளலாம்.

**Diploma Courses**

- Dip. in Ms - Office
- Dip. in Desktop Publishing
- Dip. in Hardware Technology
- Dip. in Computer Programming

**Certificate Courses**

- MS - Word
- MS - Excel
- CorelDRAW
- Visual Basic
- MS - Access
- PageMaker
- AutoCAD
- Java
- Oracle

**Workshop**

- PC Maintenance & Repairs
- Typesetting & Grapic Designing

**online Classes**

- Dip.in PC Application & Office Management

(அரச, தனியார் உத்தியோகத்தருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது)

**வகுப்புக்கள் ஆரம்பம்**

வார நாள் - 15 - 07 - 2005

வார இறுதி நாள் - 16 - 07 - 2005

கற்கை நெறிக்கான பதிவுக் கட்டணம் 250/=

**Center for Information Technology**

*- Executive Officer*

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கை, தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.

Ministry of Agriculture Marketing Devolopment, Co - operative Development, Hindu Affairs and Assisting Education and Vocational Training



# சனிப் பெயர்ச்சி பலன்கள்

தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீயபலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## மேடம்



*4ஆம் இடம்:*

24.06.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு நாலாமிடத்தில் அர்த்தாஷ்டம சனியாகச் சஞ்சரிக்கிறார். நாலாமிடம் சனியின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல என்பது உங்களுக்கே தெரியும். இதனால் எந்தவொரு காரியத்தையும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் முடிக்க முடியாது. வீண் அலைச்சலும் உடல்நலக்குறைவும் காரிய தாமதமும் உண்டாகும்.

சனிபகவான் பொதுவாக இடத்திற்கு தகுந்தாற்போல் மாறிவிடுவார் என்றாலும், வருட பிற்பகுதியில் குருபகவானின் நன்மையும், ராகு - கேது நன்மைகளும் இருப்பதால் அச்சமின்றி இவ் வருடத்தை எளிதாக ஓட்டிவிடலாம். கவலைகள் தராமல் இருக்க காலையில் கந்தனை வழிபடவும். கந்தன் கருணை புரிவார். இருந்தாலும் குரு - ராகு - கேது நன்மைகள் இருப்பதை மனத்தில் வைத்துக்கொண்டு அடிதடியில் இறங்கி விடாதீர்கள். சனியின் கழுகுப் பார்வை வருட மத்தியிலிருந்து இறுதிவரை உங்கள் மீது பதிந்தே இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

இக் காலங்களில் இரவு பயணத்தை, வாகனங்கள் வாங்குவதையோ, முன் சீற்றில் இருப்பதையோ, வாகனத்தைச் செலுத்துவதையோ தவிர்க்க வேண்டும். 2006 - தை மாதம் வரை காலங்கள் போதாமையால் மழைவரும் போது பீ.கே. சாமி ஐயா குடை ஒன்று கொடுத்தார் என்று விளங்கும். குடை எடுத்துச் செல்லா விட்டால் மழையில் நனைந்துதான் ஆகவேண்டும். அல்லது குடை வாங்குவது போல் மேஷ ராசிக் காரர்கள் தோஷ பரிகாரங்களைச் செய்து கொள்ளலாம்.

வாகனங்கள் எதிர்பார்த்த இலாபத்தைத் தராது. அவற்றைக் கவனமாகக் கையாளா விட்டால், எதிர்பாராத விபத்துக்களும் அதனால் பண நஷ்டமும் ஏற்பட்டு விடும். இரவு நேரப் பயணங்களைத் தவிர்க்கவும். கூடுமானவரை வண்டிகளை டிரைவரை வைத்து ஓட்டச் சொல்லுங்கள். செல்ப் டிரைவிங் வேண்டாம். உறவினர் விரோதம் கொண்டு பிரிந்து போவார்கள். உங்களது பெற்றோர்களின் உடல் நலம் பாதிப்படையும். மாணவர்கள் படிப்பில் மந்தநிலை அடைவார்கள். மேல்படிப்பிற்கு விரும்பிய துறையில் இடம் கிடைப்பதில் சிரமம் உண்டாகும்.

வீடு - மனை - தோட்டம் - துரவு முதலியவற்றைச் சீர்திருத்தம் செய்வதற்குக் கணிசமான தொகை செலவு செய்ய நேரிடும். அண்டை அயலாரோடு விரோதம் மூளும். வீடு வாங்கவோ, கட்டவோ நினைத்தவர்களுக்கு இது ஒரு சவாலான காலமாக மாறிவிடும். திட்டத்துக்குள் எதுவும் அடங்காது. எனவே அப்படிப்பட்ட எண்ணங்களை ஒத்தி வைப்பது நல்லது.

மாடு, கன்றுகள் இலாபம் தராது. கால நடை பண்ணை வைத்திருப்போர் அவற்றைப் பராமரிக்க மிகுந்த செலவு செய்ய நேரிடும். வாகனங்கள் பாதி வழியில் மக்கர் பண்ணலாம். புதிய வாகனங்கள் வாங்குவது இக்கால கட்டத்தில் நன்மை தராது.

தாயாருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். அவர் வகையான வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். அவரது பெயரிலான சொத்துச் சுகங்களில் வருமானம் தடைப்படலாம். அல்லது வம்பு வழக்குகளில் மாட்டிக் கொள்ளலாம்.

சனிபகவான் மூன்றாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தைப் பார்ப்பதால், எதிரிகள் பலம் பெற்று எதிர்க்கத் துணிவார்கள். கால்காசு பெறாதவன்கூட சவால் விடுவான். செய்தொழில் வியாபாரங்களில் போட்டி, பொறாமைகள் உண்டாகும். உடலாரோக்கியம் பாதிப்படையும். வீண் செலவுகள் அதிகரித்து அவற்றைச் சரிக்கட்ட கடன் வாங்க நேரிடும். தேவையற்ற வம்பு வழக்குகள் உருவாகும். சொந்த பந்தங்கள் விரோதம் கொண்டு பிரிந்து போவார்கள்.

சனி பகவான் ஏழாம்பார்வையாக உங்கள் ராசிக்குப் பத்தாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் செய்தொழில் வியாபாரங்களில் மந்தநிலை உண்டாகும். தொழிலாளர் பிரச்சினை உருவாகும். உத்தியோஸ்தர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்திற்கு ஆளாக நேரிடும். அதனால் இடமாற்றம், பதவி மாற்றம் முதலியவற்றை அடைவார்கள். ஒரு சிலர் சஸ்பென்ஷனுக்கும் உட்படுவர். சமுதாயத்தில் உங்களது கௌரவம், அந்தஸ்து குறைந்து போகும். அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்கத் தாமதமாகும்.

சனிபகவான் பத்தாம் பார்வையாக உங்களது ஜென்ம ராசியைப் பார்க்கிறார். இதனால் மனதில் குழப்பமும், கவலையும் தோன்றும். சுறுசுறுப்பும் உற்சாகமும் குறையும். முயற்சி செய்த காரியங்களில் தடைகளும் தாமதங்களும் உருவாகும். ஒரு விதமான பதற்றமான சூழ்நிலையே நிலவி வரும்.

ஆக, வருடத்தின் பிற்பகுதியில் சனியால் நன்மைகள் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. எனவே நிலைமையைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ளுங்கள். இனி குரு என்ன செய்யப் போகிறார் என்று பார்ப்போம்.

குருபகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். ஆறாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல.

இந்தக் கால கட்டத்தில் எதிர்ப்புகள் அதிகரிக்கும். உடல் நலமும் மனநலமும் பாதிக்கப்பட்டு சோர்வு உண்டாகும். அதனைச் சரிக்கட்டக் கடன் வாங்க நேரிடும். தேவையற்ற வம்பு, வழக்குகள் உருவாகும். செய்தொழில் வியாபாரங்களில் மந்தநிலை உண்டாகும். பாக்கிகள் வசூலாகாது. 24.06.2005 வரை சனியின் உதவி இருப்பதால் குருவின் தாக்குதலை எளிதில் சமாளித்து விடலாம். பயம் வேண்டாம்.

உறவினர்களும், நண்பர்களும் தக்க சமயத்தில் உதவிக்கு வரமாட்டார்கள். மனைவியின் மனக்குறைகள் அதிகரிக்கும்.

குருபகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பத்தாமிடத்தைப் பார்ப்பதால் வியாபாரிகள் சிலபல நிர்ப்பந்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாவார்கள். திடீர் சோதனைகள், ரெய்டுகள் கூட நடைபெறலாம். உத்தியோகஸ்தர்கள் பதவி மாற்றம், இடமாற்றம் முதவியவற்றை அடைவார்கள். சமுதாயத்தில் உங்களது மதிப்பு, மரியாதை, கௌரவம், அந்தஸ்து ஆகியவை குறைவுபடும்.

குருபகவான் ஏழாம்பார்வையாக உங்கள் ராசிக்குப் பன்னிரண்டாமிடத்தைப் பார்ப்பதால் பணவரவுகள் தடைபடும். செலவினங்கள் அதிகரிக்கும். தேவையற்ற அலைச்சல் திரிச்சல்கள் உருவாகும். நிம்மதியான தூக்கம் இருக்காது. யோக பாக்கியங்கள் குறைந்து போகும்.

குருபகவான் ஒன்பதாம் பார்வையாக உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தைப் பார்த்தால் குடும்பத்தில் அமைதி குறையும். கணவன், மனைவி இருவருக்குள்ளும் ஆகாத, போகாத விஷயங்களுக்காக மனஸ்தாபங்கள், சண்டை சச்சரவுகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் சுணக்கம் தோன்றும். வர வேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகாது. பண நெருக்கடி உண்டாகும். கண் சம்பந்தப்பட்ட உபத்திரவம் தோன்றும்.

இத்தகைய இன்னல்களைக் கொடுத்து வந்த குருபகவான் 19.09.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு ஏழாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். ஏழாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு மிகவும் உகந்த இடமாகும். இதனால் நிலைமைகள் முற்றும் மாறும். கணவன் மனைவி இருவருக்குள்ளும் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும். முந்தைய புழுக்கங்களிலிருந்து விடுபடலாம். ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம். உடலில் சோம்பலும் அசதியும் மறைந்து சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். வியாபாரத் துறையில் உள்ளவர்கள் கணிசமான இலாபத்தை அடைவார்கள். திருமணமாகாத இளம் வயது ஆண், பெண்களுக்குத் திருமண வாய்ப்பு கூடி வரும்.

குருபகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பதினொராமிடத்தைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்கள் எளிதில் வெற்றிபெறும். நாலா வழிகளிலும் வருமானம் உண்டாகும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகும்.

குருபகவான் ஏழாம் பார்வையாக உங்கள் ஜென்ம ராசியைப் பார்ப்பதால் உடலும் மனமும் பலம் பெறும், ஆயுள் விருத்தி உண்டாகும், சமுதாயத்தில் உங்களது மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், சரிந்த கௌரவம், அந்தஸ்து உயரும். குடும்பத்தினர் உங்களது சொல், பேச்சைக் கேட்டு நடப்பார்கள்.

குருபகவான் ஒன்பதாம் பார்வையாக மூன்றாம் இடத்தைப் பார்ப்பதால் எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் உருவாகும். உடன் பிறந்த சகோதர, சகோதரிகளினால் உதவியும் ஆதாயமும் உண்டாகும். பணியாட்கள் விசுவாசமாக நடந்து தொழில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வார்கள். இந்தக் கால கட்டத்தில் சனியின் நாலாமிடக் கொடுமைகள் கூட மட்டுப்படலாம்.

*(அடுத்த வாரம் தொடரும்...)*

# பாப்பா முரசு



வான கத்தி னொளியைக் - கண்டே - மனம் கிழ்ச்சி பொங்கி,
யானே தற்கும் அஞ்சேன் - ஆகி - எந்த நாளும் வாழ்வேன்;
ஞான மொத்த தம்மா! - உவமை - நானு ரைக்கொணாதாம்
வானகத்தி னொளியின் அழகை - வாழ்த்து மாறியாதோ?

- சுப்பிரமணிய பாரதியார்


# சோம்பேறியும் கடலும்

பாப்பா முரசு சிறுகதை

புன்னை நகரில் கோபால் என்ற இளைஞன் வசித்து வந்தான்.

கோபால் ஓர் ஆலையில் வேலை செய்து வந்தான். நட்டமான சூழ்நிலை காரணமாக அந்த ஆலையானது இழுத்து மூடப்பட்டது. உடனே அந்த ஆலையில் வேலைபார்த்த வேலையாட்கள் அனைவரும் வேலையிழந்தார்கள்.

ஒவ்வொருவரும் அவரவர் சூழ் நிலைக்குத்



தக்கபடி வேறு வேலையைத் தேடிச் சென்றார்கள். ஆனால், கோபால் மட்டும் கிடைத்த வேலைக்குச் செல்லாமல் அதனைவிட நல்ல வேலை கிடைக்கும் என்ற ஆவலில் முயற்சி செய்வதை விட்டு விட்டு சோம்பேறித்தனமாக ஊர் சுற்றிக் கொண்டிருந்தான்.

வேறு வேலைக்குச் சென்று தங்கள் குடும்பத்தை வறுமையில்லாமல் தக்க வைத்துக்கொண்டவர்கள் எல்லோரும் கோபாலை வியப்போடு பார்த்தனர்.

"கோபால்! வேலைக்குச் சென்றே எங்கள் குடும்பச் செலவுகளை எல்லாம் எங்களால் தாக்குப்பிடிக்க முடிய வில்லையே! நீ வேலைக்குச்செல்லாமல் எப்படித் தாக்குப் பிடிக்கின்றாய்! நாம் நினைத்தபடி வேலை அமைய வேண்டும் என்பது நடக்காத காரியம். அதனால் கிடைத்த வேலைக்குச் சென்று சொற்பணம் கிடைத்தாலும் அதனைக் கொண்டு உன் குடும்பத்தை வறுமை இல்லாமல் காப்பாற்று" என்றனர்.

தன் நண்பர்கள் கூறிய அறிவுரையைக் கோபால் ஏற்கவில்லை. 'தான் வேலைக்குச் சென்றால் மிக அதிகமான சம்பளத்தில் தான் வேலைக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் வேலைக்கே செல்லவேண்டாம்' என்று முடிவு செய்தான் கோபால்.

கோபால் நினைத்தபடியான வேலை கிடைக்காததால் வேலைக்குச் செல்லாமல் சோம்பேறித்தனமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் கடற்கரைப் பக்கமாக வந்தான் கோபால்.

கடற்கரையில் இதமான காற்று வீசவே, மணல் மேட்டில் சாய்வாகப் படுத்துக் கொண்டான்.

சீறி வரும் கடல் அலையையே பார்த்துக் கொண்டிருந்த அவன், சிறிது நேரத்தில் தன் கண்களை மூடிக்கொண்டான்.

கடற்கரைக் காற்றில் இதமான தூக்கத்தில் ஆழ்ந்தான்.

நீண்ட நேரமாகத் தன்னையே மறந்தபடி தூங்கிக்கொண்டிருந்தான்.

அப்போது அதிக இரைச்சலுடன் அலையொன்று அவன் உடலைத் தொட்டு நனைத்துச் சென்றது.

திடுக்கிட்டபடி கண்விழித்துக்கொண்டே கோபால், கடலை கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

"மனிதனே! நீ ஏன் என்னைப் பார்த்து முறைக்கின்றாய்?" என்று கேட்டது கடல்.

"கடலே! நீ என்னுடைய பொன்னானத் தூக்கத்தைக் கெடுத்துவிட்டாயே! அதனால்தான் உன்னைப் பார்த்து முறைக்கிறேன்" என்றான் கோபால்.

"மனிதனே! எது பொன்னான தூக்கம்? இப்படி சோம்பேறித்தனமாக நீ படுத்திருக்கின்றாயே, இதுவல்ல பொன்னான தூக்கம்! இதன் பெயர் வெட்டித் தூக்கம். சோம்பேறிகளுக்கே உண்டான தூக்கத்தில் நீ இருந்தாய் அதனால் தான் உன் தூக்கத்தை நான் கலைத்தேன். நீ வியர்வை சிந்தி நன்றாக உழைத்து அந்தக் களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தால் அதனையே நான் பொன்னான தூக்கம் என்பேன்! அப்படிப்பட்ட தூக்கத்தில் நீ ஆழ்ந்திருந்தால் உன்னை ஒரு போதும் நான் எழுப்பியிருக்க மாட்டேன்!" என்றது கடல்.

கடலைப் பார்த்து மீண்டும் வெறுப் படைந்தான் கோபால்.

"கடலே! நீ என்னைத் தூக்கத்தில் இருந்து எழுப்பியது மட்டுமில்லாமல் இன்னும் என்னோடு பேசிக் கொண்டிருக்கின்றாயே! உனக்குத் திமிர் அதிகமாகத்தான் இருக்கின்றது" என்றான்.

"மனிதனே! எனக்குத் திமிர் இல்லை! என்னைவிட உனக்குத்தான் திமிர் அதிகமாக இருக்கின்றது. நீ எவ்வளவு திமிர் மிக்கவனாக இருந்தால் என் கரையிலேயே படுத்துக்கொண்டு என்னிடமே கேள்விகளைக் கேட்பாய்!" என்று திருப்பிக் கேட்டது கடல்.

"கடலே! இன்னும் நீ திமிரோடு பேசிக் கொண்டிருக்கின்றாய்! உன்னைப் பார்க்கின்ற வேளையில் எல்லாம் எனக்கு ஆத்திரமாக வருகின்றது" என்றான் கோபால்.

"மனிதனே! இந்த சின்ன விஷயத்திற்கெல்லாம் நீ ஆத்திரப்படலாமா? நீ தூங்குவதால் உனக்கு என்ன லாபம் என்று சிந்தித்துப்பார்! சோம்பேறிகளைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது! உன்னுடைய சோம்பலை விரட்டி, உன்னைச் சுறுசுறுப்பாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் உன்னை எழுப்பினேன்" என்றது கடல்.

அதனைக் கேட்ட கோபால் "கடலே! நான் சோம்பல் இல்லாமல் இருந்தால் உனக்கென்ன நன்மை?" என்று கேட்டான்.

"மனிதனே! நீ சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருந்தால் எனக்கு நன்மை இல்லை. உனக்குத்தான் நன்மை. உன் நன்மைக்காக வேண்டியே உன்னை நான் எழுப்பினேன்" என்றது கடல்.

"கடலே! எனக்கு என் வாழ்க்கையைப் பற்றி கவலையில்லை. நான் எப்படி வேண்டுமானாலும் இருந்து கொள்வேன்! என் பொருட்டு நீ இரக்கப் படுவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான் கோபால்.

"மனிதனே! என்னை நீ நன்றாகக் கவனி. நான் எப்போதாவது சோர்வுடன் இருப்பதை நீ கவனித்திருக்கின்றாயா? நான் எந்த நேரத்திலும் ஓயாமல் அலை வீசிக்கொண்டிருப்பேன்! நான் இது வரையிலும் ஓய்வே எடுத்ததில்லை! ஒரு நொடி கூட என்னால் அலை வீசாமல் இருக்க முடியாது. என்னைப் போன்று மற்றவர்களும் உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நான் இவ்வாறு செயல்பட்டு வருகிறேன்" என்றது கடல்.

கோபால் கடலை வித்தியாசமாகப் பார்த்தான். "கடலே! நீ சொல்வதைக் கேட்கும் போது ஏதோ ஓர் நல்லெண்ணத்திற்காக வேண்டித் தான் என்னை நீ எழுப்பி இருக்கின்றாய் என்று தெரிகிறது" என்றான்.

"ஆமாம் மனிதனே! நீ உன்னுடைய சோம்பலை அகற்றி நன்றாக உழைக்க வேண்டும். உன்னுடைய உழைப்பில் நீயும் பயன் அடைவதோடு மற்றவர்களும் பயன் அடைய வேண்டும். உழைக்காமல் ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது!" என்றது கடல்.

"கடலே! நான் உழைக்க வேண்டும் என்று எண்ணுகிறபோது அதற்குரிய வேலையானது எனக்குக் கிடைக்கவில்லையே! நான் என்ன செய்வது என்று கவலையாக இருக்கிறது! அதனால் தான் எனக்கு சோம்பல் வருகிறது. என் சோம்பலைப் போக்க வேறுவழி தெரியாமல் நான் தூங்கு கின்றேன்" என்றான் கோபால்.

அதனைக் கேட்ட கடல் "மனிதனே! இந்த உலகில் எல்லோரும் நினைப்பதுபோல் எதுவும் நடந்து விடாது. நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். எனவே நாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நிலையினை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்றது.

"கடலே! நீ என்ன சொல்கிறாய் என்று எனக்குப் புரியவில்லை. சற்றுத் தெளிவாகச் சொல்!" என்றான் கோபால்.

"மனிதனே! நாம் நினைத்த வேலை கிடைக்கும் வரை காத்திருந்தால் ஒரு வேலையும் கிடைக்காது. எனவே நாம் ஏதாவது ஒரு வேலையைச் செய்துகொண்டே நமது உழைப்பை வீணாக்காமல் நம் எண்ணத்திற்குத் தீனி போட்டுக் கொண்டு வேறு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

அப்போதுதான் திறமைக்கேற்ற வகையில் நல்லதொரு வேலையை எதிர்பார்க்க முடியும். நாம் சோம்பலாக இருந்தால் வாழ்க்கைப் பூராவும் அப்படியே சோம்பலாக இருக்க வேண்டியதுதான்" என்றது கடல்.

கடலின் அறிவுரையைக் கேட்டதும் கோபால் புத்துணர்ச்சி அடைந்தான்.

"கடலே! நீ தக்க நேரத்தில் என்னுடைய சோம்பலைப் போக்கி நல்ல அறிவுரையை வழங்கினாய்! என் நண்பர்களும் இந்தக் கருத்தினை என்னிடம் தெரியப்படுத்தினார்கள். அப்போது என் காதுகளில் அவைகள் ஏற மறுத்தன. இப்போது நான் அந்தக் கருத்துக்களைப் புரிந்து கொண்டேன். இப்போதே நான் அந்தக் கருத்துக்களுக்கெல்லாம் மதிப்பளிக்கும் வகையில் வேறு வேலையைத் தேடிச் செல்லப் போகிறேன்!" என்று கடலிடம் இருந்து விடைபெற்றபடி சென்றான் கோபால்.

ஓய்வு எடுக்காமல் உழைத்துக்கொண்டிருக்கும் கடல் அலையைப் பார்த்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

# அதிசய உலகம்

பனி பிரதேசத்தில் வாழும் சில விலங்குகள் வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட மாதங்களைத் தூங்கியே கழிக்கின்றன. இலையுதிர்காலம் முடிந்து குளிர்காலம் முடிந்து குளிர்காலம் தொடங்கும் போது இந்த வகை விலங்குகள் உறங்கத் தொடங்குகின்றன.

இந்த விலங்குகள் அனைத்தும் ஒன்றாகக் கூடி ஒன்றின்மேல் ஒன்று படுத்தபடி கடுமையான உறக்கத்தில் ஈடுபடும். சில சிறிய வகை உயிரினங்கள் ஏதாவது மரக்கட்டைகள், பட்டுப்போன மரங்களைக் கண்டால் விடாது.

அதன் அருகே சென்று முழங்கால்களை மடக்கி தன் உடலருகே கொண்டு வந்து உறக்கத்தை தொடங்கும். இப்படி உறங்கும் போது குறைந்தது 4 அல்லது 5 மாதங்கள் வரை தூங்கிக் கொண்டே இருக்கும். குளிர்காலத்தில் இந்த விலங்குகளுக்கு ஏற்ப உணவுகள் எளிதில் கிடைப்பதில்லை. எனவே காலத்திற்கு ஏற்றவாறு புதிய சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டு உறக்கத்தில் ஈடுபடுகின்றன. விலங்குகள் அனைத்தும் உணவுத் தேவைகளைத் ஈடுகட்டும் வகையில் குளிர்காலத்திற்கு முன்பே தங்களை தயார் செய்து கொள்கின்றன. சில விலங்குகள் மட்டும் இக்காலத்தில் உணவை உட்கொள்கின்றன. ஆனால், பல விலங்குகள் உணவு உட்கொள்ளாமலேயே வாழும் சக்தி கொண்டவை. உணவு உண்ணாமல் வாழ்வதால் இந்த விலங்குகளின் உடல்நிலை மிகவும் மெதுவாகவே வேலை செய்கின்றது.



# ஆத்திசூடி

## கேள்வி முயல்

நீ எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்டு ஆராய்ந்து, தெரிந்து, தெளிந்து அதன்பின் கைக்கொள்ள முயற்சி செய்.

-ஔவையார்


எஸ் நிரஞ்சலா, கண்டி.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்கள்

1. கி.பி. 1478 இல் மீண்டும் யாழ்ப்பாண இராச்சியத்தில் தமிழர் ஆட்சி மலர்ந்தது.
2. 1519 வரை பரராஜசேகரன் ஆட்சி செய்தார். இக்காலம் ஆட்சியின் பொற்காலமாகும்.
3. கி.பி. 1561 முதல் 1565 வரை புவிராச பண்டாரம்.
4. கி.பி. 1565 முதல் 1582 வரை பெரிய பிள்ளை.
5. கி.பி. 1582 முதல் 1591 வரை புவிராச பண்டாரம்.
6. கி.பி. 1591 முதல் 1615 வரை எதிர்மன்னசிங்கன்
7. கி.பி. 1615 முதல் 1617 வரை முடிக்குரிய இளவரசனின் பாதுகாவலனாகிய அரசகேசரி ஆட்சி செய்தான்.
8. கி.பி. 1617 இல் சங்கிலி குமாரன் அரசகேசரியைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான்.
9. கி.பி. 1619 வரை அரசாண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் பரம்பரையைச் சேர்ந்த கடைசி மன்னன்தான் சங்கிலியன்.
10. 1618 ஆவணி, புரட்டாதி மாதங்களில் ஏற்பட்ட புரட்சிகளின் போது சங்கிலியன் தன்னிரகற்ற மன்னாகத் திகழ்ந்தான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.07.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல 603**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 601

பரிசுக்குரியவர்:
**செல்வி. ஏ.எம். சிந்துஷா,**
**மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, மன்னார்.**

பாராட்டுக்குரியவர்கள் :

| | |
|---|---|
| மு.நிதர்சனா, தரம் 7, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை. | ஆர். திவ்யா, தரம் 6B, ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| எஸ். லக்ஸ்மி, நடராஜா வீதி,வல்வெட்டித்துறை. | ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த மல்வானை. |
| ம. துபாகரன், நீதிமன்ற வீதி, மல்லாகம். | பி. அனோஜன். தரம் 2, தூய தோமையர் கல்லூரி, பண்டாரவளை. |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ஆர். ஐங்கரன், 50/1B, மயூரா பிளேஸ், கொழும்பு 06. |
| என்.எப். நாகூஹா, தரம் 7 B, தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம், புத்தளம். | ரி. ஜனண்யா, 40, ஆரியகம, ஹட்டன், |





## 'கூ' அடிக்கும் குரங்கு!



**யாழ்.** பாடசாலை ஒன்றில் 25 வருடங்களுக்கு முன்னர் தமிழ் கற்பித்த வாத்தியார், தான் பாடம் படிப்பிக்கும்போது இடையூறாக இருக்கும் மாணவனைத் தண்டிக்கமாட்டார். கண்டிப்பார். எப்படி என்று கேட்கிறீர்களா? இப்படித்தான் கூறுவார்: "சந்தியிலே மந்திபோல் குந்தி இருந்து கூ அடிக்கக் கடவாய்" என்பதேயாகும். அதேபோல் படத்தில் காணப்படும் கறுப்பின மந்தியார், வாயை அகலத் திறந்து கூ அடிக்குமாம். கூ அடிக்கும் சத்தம் 3 மைல்கள் வரை (அதாவது 4.8 கிலோ மீற்றர்) கேட்குமாம். இந்தக் குரங்கு இனம் மத்திய, தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படுகிறது.

## அந்தக் கடைசி நிமிடம்!






**க**னடா வான்கூவர் நகரில் இருந்து விடுமுறையைக் கழிக்க வந்தவர்களின் கடைசிக் கட்டம் இது. இன்னும் சில நிமிடத்தில் கடல் அலை தங்களை அள்ளிச் செல்லப்போகிறது என்று தெரியாமல், பாங்கொக் கடற்கரையில் கடைசியாக இந்தத் தம்பதிகள் சேர்ந்து நின்று எடுத்த படத்தைத்தான் இங்கே காண்கிறீர்கள்.


கடற்கரையில் அண்மையில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட தொண்டர்கள் கண்டெடுத்த டிஜிட்டல் கமராவில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட படங்கள், கடல் அலை வருவதை மூன்று கட்டங்களில் படம் பிடித்துள்ளதைக் காட்டுகின்றன. கடல் அலை இவர்களைப் பலி கொண்டுவிட்டது. இவர்களது பிள்ளைகள்தான், இவர்களைத் தங்கள் பெற்றோர் என அடையாளம் காட்டியுள்ளனர்.

## வயது தடையல்ல



இசைக் கலைஞர்கள் பலர் இணைந்த இசைக் குழுவொன்றை (Orchestra) வழிந்டத்துவதற்கு இசையைப் பற்றிய மிக நுணுக்கமான அறிவு இருக்கவேண்டியது அவசியம். தற்போது பதினொரு வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ரஷ்யாவின் பாடசாலை மாணவனான டிமுர் சென்ஜியேவுக்கு அவ் வறிவு தாராளமாக உள்ளது. இச்சிறுவன் மொஸ்கோ நகரில் தன்னை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு வயது கூடிய இசைக் கலைஞர்களை ஒன்றிணைத்து இசைக் குழுவை வழிநடத்தும் காட்சியே இது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

## வியாபாரத் தந்திரம்!



**வி**யாபாரப் போட்டி என்றால் சிலர் எதையுமே செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதற்கு இது சிறந்த உதாரணம். இத்தாலியில் உள்ள வைன் உற்பத்தியாளர் ஒருவர் என்ன செய்தார் தெரியுமா? வைன் போத்தல் லேபலில் சர்வாதிகாரியான ஹிட்லர், முசோலினி ஆகியோரின் படங்களை ஒட்டி விட்டார். விற்பனை ஆகா, ஓகோ என்று நடக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் நடந்ததோ வேறு. ரோம் நகரில் உள்ள மதுபான நிலையத்தில் ஹிட்லரின் படத்துடன் இருந்த வைன் போத்தலைப் படம் பிடித்துப் பத்திரிகையில் பிரசுரித்துவிட்டார் ஒருவர். இத்தாலியில் பெரிய பரபரப்பு. இத்தாலி அரசு எடுத்த நடவடிக்கையால், ஹிட்லரின் படம் உள்ள லேபல்கள் அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக வேறு லேபல்கள் ஒட்டப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டது. ஜேர்மனிய அரசும் வைன் உற்பத்தியாளருக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்தது.

## இறுதிப் பயணம்



**மி**கப் பெரிய பயணப் பொதி போல் காணப்படும் இது ஓர் பிரேதப் பெட்டியாகும். ஜெர்மன் கசேல் நகரில் இக்காலத்தில் நடைபெறும் க்கேசி கொபின் என்ற கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இவ்வதிசய பிரேதப் பெட்டியை விடவும் கிட்டார், குப்பை லொறி போன்ற விசித்திர வடிவிலான பல பிரேதப் பெட்டிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பிரேதப் பெட்டிகளைப் போலவே மக்களும் விசித்திரமானவர்கள் போலத் தெரிகிறது.

## அந்த நாள் ஞாபகம்.....!



**60** வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த படம் இது. ஹிட்லரின் சர்வாதிகாரத்திற்கு முடிவுகட்டப்பட்டபின், கூட்டுப் படைகள் தளபதிகளுடன் சோவியத் யூனியன் தலைவர் ஜோசப் ஸ்டாலின் (இராணுவத் தொப்பியுடன் இருப்பவர்), அமெரிக்காவின் ஜனாதிபதி பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட் (நடுவில்), பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் காணப்படுகின்றனர்.



எஸ்.ஜே. சூர்யா - நயன்தாரா
கள்ளவனின் காதலி

## சினேகா திடீர்ப் பயணம்

படப்பிடிப்பே இல்லை. ஆனால், திடீர்ப் பயணமாக பாங்கொக் சென்று வந்துள்ளார் என்று சினேகாவைப் பற்றிய ஒரு வதந்தி கோலிவுட்டில் பரவியுள்ளது. 'சின்னா'வில் நடிப்பதற்கு முன்னால் குண்டாகத் தெரிந்த அவர், தற்போது உடல் இளைத்துக் காணப்படுகிறார். அப்படி என்றால், பாங்கொக்கிற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ? உடல் இளைக்க என்னென்ன சிகிச்சை மேற்கொண்டார் என்று சொன்னால், மற்ற கதாநாயகிகளுக்கு உதவியாக இருக்குமே!

## நயன்தாரா முத்தம் நல்ல விஷயமா?

'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி'க்காக தங்கர்பச்சான் மனைவியாக நடித்துக் கொண்டிருந்த மலையாள வரவு நவ்யா நாயரிடம், "கேரளத்து கதாநாயகிகள் என்றாலே பரபரப்பு வந்து தொற்றிக்கொள்கிறதே! நமது நயன்தாரா முத்தம் கொடுத்தது நல்ல விஷயமா...?" என்று கேட்டோம். ஒரு நிமிடம் ஆழ்ந்து யோசித்த அவர், "நயன்தாராவைப் பற்றி நான் என்ன கருத்துச் சொல்ல முடியும்?" 'வல்லவன்' படத்துக்காக சிலம்பரசனும், அவரும் சேர்ந்து அந்தமாதிரி போஸ் கொடுத்ததாக ஒரு பத்திரிகையில் படித்தேன். இது நயன்தாராவின் தனிப்பட்ட விஷயம். அவர் சுதந்திரத்தில் தலையிட எனக்கு உரிமை இல்லை. என்றாலும், இதுபோன்ற முத்தக் காட்சிக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். இந்தமாதிரி என்னை முத்தக் காட்சியில் நடிக்கச் சொன்னால், சினிமாவுக்கே முழுக்குப் போட்டு 'ஓடி விடுவேன்" என்றார், நெத்தியடியாக!



# சி னி வி சி ட்

## ராசியான காயம்!

**வீ**ட்டால், சோனியா அகர்வாலுக்குக் கோவிலே கட்டி விடுவார் போலிருக்கிறது நந்தா பெரியசாமி. 'ஒரு கல்லூரியின் கதை' பட இயக்குநர். "என் படத்தின் கதை கேட்டதிலிருந்து அந்தப் படத்தின் மேல் பயங்கர ஆர்வமாயிட்டாங்க சோனியா. ஒரு நாளைக்கு 10 முறை காஸ்ட்யூம் மாத்தச் சொன்னாலும் துளி கூட முகம் சுளிக்காமல் உடனே மாத்திட்டு வந்து நிப்பாங்க. ஒருமுறை மலைமேல் ஒரு சீன் வச்சிருந்தோம். அரை மணி நேரம் மேலே நடந்தே போகணும். என்ன சொல்லுவாங்களோன்னு தவிச்சுட்டு இருந்தேன். ரொம்ப உற்சாகமா மலை ஏற ஆரம்பிச்சிட்டாங்க. விதி பாருங்க. ஒரு பாறாங்கல்லு குத்தி அவங்க காலில் ரத்தம் வர ஆரம்பிச்சிடுச்சு. நாங்க பதறிப் போயிட்டோம். படப்பிடிப்பை அரை நாள் கேன்சல் பண்ணிடலாமான்னு கேட்டா, அதெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டு பயங்கரமா சிரிக்க ஆரம்பிச்சிட்டாங்க.

பிறகுதான் தெரிஞ்சுது. அவங்க காலில் அடிபட்டால் அந்தப் படம் பெரிய வெற்றிப்படமா ஆயிடுமாம். 'என்னடா? இந்தப் படத்திற்கு இன்னும் அடி படலையேன்னு நினைச்சேன். பட்டிடுச்சுன்னு' ரொம்ப கேஷுவலா சொல்றாங்க. இப்படி ஒரு ஆர்ட்டிஸ்ட் கிடைச்சது எங்க யூனிட் செஞ்ச பூர்வ ஜென்ம புண்ணியம்" என்றார் கையில் ஜாலரா இல்லாத குறையாக!

## 'அண்ணா' என்று உருகும் அஸின்

ஏற்கனவே ஒரு 'அண்ணா' புகழ் நடிகையைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பூஜாவைப் பார்த்து படப்பிடிப்புத் தளத்திலுள்ளவர்கள் பயந்து ஓடினார்கள். அதுபோல, அஸினைப் பார்த்து பலபேர் தலைதெறிக்க ஓடுகின்றனர்! அதற்குக் காரணம், யாரைப் பார்த்தாலும் 'அண்ணா' என்று சொல்லி விடுகிறார்! அவரைத் தங்கையாக ஏற்றுக்கொள்ள யாரும் முன்வராததாலேயே இப்படித் தலைதெறிக்க ஓடுகிறார்களாம். நல்ல கதையாக இருக்கிறதே.....



குஷ்பு - ஜோதிகா
ஜூன் ஆர்

## விஜய்க்கு மோதிரம் அனுப்பிய காதலி!

**நா**ளுக்கு நாள் விஜய்க்கு வரும் பெண் இரசிகைகள் கடிதம் அதிகரிக்கிறது. லண்டனிலிருந்து ஒரு மாணவி.....

"அன்பே விஜய்! உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது, பசி கூட மறந்து போகிறது. பிளீஸ், ஒரே ஒரு முறை எனக்காக என் வீட்டிற்கு வருகை தாருங்களேன். நீங்கள் லண்டன் வந்து போவதற்கான செலவு அனைத்தையும் நானே ஏற்றுக்கொள்கிறேன். பிளீஸ் விஜய்!" என்று கெ(ா)ஞ்சிக் கெ(ா)ஞ்சி எழுதியுள்ளார். அதோடு அந்தக் கடிதத்துடன் விஜய்க்கு தன் அன்புப் பரிசாக ஒரு தங்க மோதிரத்தையும் அனுப்பி இருக்கிறார்.

ஒரே கவரில் 20 கடிதங்களை இணைத்து, அத்தனையிலும் "ஐ லவ் யூ விஜய்", "ஐ லவ் யூ விஜய்" என்று அந்தப் பெண் எழுதியுள்ளார். தங்க மோதிரத்துடன் வெளிநாட்டு சாக்லெட் வகைகளையும் வைத்திருக்கிறார்! இப்படியொரு வித்தியாசமான காதல் கடிதத்தைக் அனுப்பி கண்ட விஜய், என்ன செய்வதென்று புரியாமல் திகைத்துப் போய் உள்ளார்.

சமீபத்தில் அவரை ஒன்ஸ்மோர் படப்பிடிப்பில் சந்தித்தபோது "என் மீது இரசிகர்களுக்கு அதிக அன்பும், மரியாதையும் உள்ளது. இதற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை" என்று உணர்ச்சி வசப்பட்டார்.

'ஒன்ஸ்மோர்', 'லவ் டுடே', 'நேருக்குநேர்' ஆகிய படங்களில் நடித்த விஜய், 'நேருக்கு நேர்' படத்தில் தனது கல்லூரி நண்பர் ஒருவருடன் இணைந்து நடித்தார். படத்திலும் அவர்கள் நண்பர்களாகவே நடித்தனர். அந்த நண்பர் பெயர் சரவணன். இவர் பிரபல நடிகர் சிவகுமாரின் மூத்த மகன். சினிமாவுக்காக சூர்யா எனப் பெயர் மாறியுள்ளார். சென்னை லயோலா கல்லூரியில், 1992ஆம் ஆண்டு விஷுவல் கம்யூனிகேஷன்ஸ் படிப்பை ஒன்றாகப் படித்தவர்கள் விஜய் - சூர்யா.

இன்று முன்னணி நடிகர் சூர்யா என்றுமே விஜய்யின் நண்பர் சரவணன்தான். தவிரவும் லண்டனிலிருந்து தொடர்பு கொண்டு அசத்தியவர்தான் இன்று அவரது துணைவியார் சங்கீதா. இவர் இலங்கைப் பெண். இது விஜய் பற்றிய பழைய செய்தி என்றாலும் அவரின் மனதில் என்றுமே பசுமையான செய்தியாம். பசுமைச் செய்தியை நமக்குப் படைத்தவர் ஏ.எம்.சாமி.

## 'சந்திரமுகியை' முந்துமா? 'அந்நியன்' வசூல்!

**ஷ**ங்கர் இயக்கம் மற்றும் விக்ரம் நடிப்பில் உருவாகி வெளியாகியுள்ள அந்நியன் திரையிடப்பட்டுள்ள திரையரங்கங்கள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன. ரஜினிகாந்தின் 'சந்திரமுகி' வசூலை 'அந்நியன்' விரைவில் முறியடிக்கும் என்கின்றது தியேட்டர்கள் வட்டாரம்.

விக்ரம் - சதா நடிப்பில் ஷங்கர் இயக்கத்தில், சுஜாதா வசனத்தில் உருவாகியுள்ள அந்நியன் 3 நாட்களுக்கு முன் திரையிடப்பட்டது. தமிழகம், ஆந்திரம் மற்றும் உலகெங்கும் திரையிடப்பட்டுள்ள 'அந்நியன்' அத்தனை திரையரங்குகளிலும் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடி வருகிறது.

படம் சூப்பர் ஹிட் ஆகியுள்ளது. ஜென்டில்மேன், இந்தியன் படங்களின் பிரதிபலிப்பாக இருந்தாலும் கூட விக்ரமின் நடிப்பை இரசிக்க ரசிகர்கள் படு ஆர்வம் காட்டுகிறார்கள். படத்தைப் பார்த்து விட்டு வெளியே வருபவர்களில் பெரும்பாலானவர்கள், 'விக்ரம் நன்றாக நடித்துள்ளார். ஆனால், ஷங்கர் ஏன் ஒரே மாதிரியான கதையைத் திரும்பத் திரும்ப வேறு ரூபங்களில் கொடுக்கிறார்' என்றே கருத்து தெரிவிக்கிறார்கள்.

எனவே, கதையை விட விக்ரம்தான் இரசிகர்களைக் கவர்ந்துள்ளார். எது எப்படியோ, படத்தைத் தயாரித்து தானே ரிலீஸ் செய்த ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரனின் காட்டில் கரன்சி மழை.

திரையிடப்பட்ட 3 நாட்களிலேயே வசூலிலும் சாதனை படைத்து விட்டது அந்நியன். சென்னை 'சங்கம்' திரையரங்க குழும மேலாளர் ஜெய்க்குமார் கூறுகையில், 'பத்மம்' திரையரங்கில் ரூ.4 லட்சமும், சங்கத்தில் 8 லட்சமும் முதல் 3 நாட்களில் வசூலாகியுள்ளது. இது ஒரு சாதனையாகும். இந்த நிலை தொடர்ந்தால் சந்திரமுகி வசூலை அந்நியன் முறியடித்து விடும். இருப்பினும் ஒரு வாரத்திற்குப் பிறகே உண்மையான நிலைவரம் தெரிய வரும் என்றார்.

முதலில் ஒரு வார டிக்கெட்டுகள் முன் பதிவு மூலம் புக் ஆகியிருந்த நிலையில், இப்போது அடுத்த பத்து நாட்களுக்கும் டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன.





ஆர்யா
ஒரு கல்லூரியின் கதை



ஜெய் ஆகாஷ் - பிரணதி
காற்றுள்ள வரை

# அச்சச்சோ சந்தியா!

இந்த வருடமும் பத்தாவது பரீட்சை எழுதுகிற முனைப்பில் இருக்கிறார் காதல் சந்தியா. எத்தனை வருஷமா ஒரே பரீட்சையை எழுதுவீங்க என்றால், அச்சச்சோ என்கிறார் உதட்டை கடித்தபடி! கடந்த வருடம் பரீட்சை நேரத்தில்தான் 'காதல்' பட வாய்ப்பு வந்ததாம். பரீட்சையைத் தள்ளிவைத்துவிட்டுப் படத்தில் நடிக்கக் கிளம்பிவிட்டார். அதன்பிறகு வந்த பத்தாவது பரீட்சையையும் எழுத முடியாமல் போய்விட, இந்த வருடம் எப்படியாவது முடித்தே தீருவது என்ற கஜினி முகமது கொள் கையுடன் அப்ளிகேஷனை நிரப்பி கல்வித் துறைக்கு அனுப்பிவிட்டாராம். சரஸ்வதியே கண் திறவாய்!

வல்லவன் பற்றிப் பேச ஆரம்பித்தால் குதூகலம் தாண்டவமாடுகிறது முகத்தில். 'இந்தப் படத்தில் சிலம்பரசன் சாரோட கிளாஸ்மேட்டா நடிக்கிறேன். ரீமாசென், நயன்தாரா நான் என்று மூன்று ஹீரோயின்கள் இருந்தாலும் படம் முழுக்க வருகிற கேரக்டர் எனக்கு....' என்றவரை இடைமறித்து, இன்னொரு குண்டை எறிந்தோம்.

இந்தப் படத்தில் நயன்தாரா நடிக்கப்போற கேரக்டரில் உங்களை நடிக்கச் சொன்னா நடிச்சிருப்பீங்களா? ஏன் என்றால் நயன்தாராவின் உதட்டை இழுத்து முத்தம் கொடுத்து அமர்க்களம் பண்ணிட்டாரே சிலம்பரசன்?

பளிச்சென்று பதற்றம் வந்து உட்கார்ந்து கொண்டது சந்தியாவின் முகத்தில்! "அது பற்றி நோ கமெண்ட்ஸ். என்னிடம் கதை சொல்லும்போது என்னோட கேரக்டர் பற்றி மட்டும்தான் சொன்னாங்க. பிடிச்சிருந்தது. நயன்தாரா கேரக்டர் என்ன என்பது எனக்குத் தெரியாதே!"

(எஸ்கேப்).



ஸ்ரேயா
மழை

## ஜெய் ஆகாஷ் காதல் திருமணம்

குருதேவா மூலம் இணைந்து நடித்த ஜெய் ஆகாஷ் - ப்ரணதி இருவரும் காதல் வலையில் சிக்கியதாக கோலிவுட் வட்டாரம் கூறுகிறது. இந்த விஷயத்தை அவர்கள் இருவருமே மறுக்கவில்லை! மீண்டும் அவர்கள் 'காற்றுள்ளவரை.....'படத்தில் இணைந்து நடிக்கின்றனர். இப்போது முன்பைவிட அதிக நெருக்கமாகப் பழகும் அந்த இளம் ஜோடிகள், சமீபத்தில் லண்டனுக்குச் சென்று நேசம் வளர்த்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விஷயத்தையும் அவர்கள் இதுவரை மறுக்கவில்லை! எனவே, தனது தாயார் அனுமதி கொடுத்த மறுவினாடியே ப்ரணதி கழுத்தில் தாலி கட்டி மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாராம் ஜெய் ஆகாஷ்!



வீக்ரம் - அஸின்
மஜா

## மருமகளாகிறார் - சோனியா

கட்டை பிரம்மச்சாரியாகவே காலத்தை ஓட்டி விடுவார் என்று கிசுகிசுக்கப்பட்ட செல்வராகவனின் வாழ்க்கையில் கல்யாண மேளத்திற்கு வேலை வந்தாச்சு. ஜனவரி 6ஆந் திகதி செல்வராகவனுக்கு டும் டும் டும்மாம்! மணப்பெண்? செல்வாவுடன் காதல் கொண்ட சோனியா அகர்வால். கடந்த சில தினங்களுக்கு முன் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளித்த செல்வராகவனின் அப்பா கஸ்தூரிராஜா, "சோனியா எங்க குடும்பத்தின் இரண்டாவது மருமகள். ஜனவரிக்குள் ஒப்புக்கொண்ட படங்களை முடித்துக் கொடுத்துவிட்டு திருமணத்திற்குத் தயாராகி விடுவார்" என்று கூறியிருந்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டல் ஒன்றிற்குச் சென்றது இந்த ஜோடி. மிதமிஞ்சிய போதையை ஏற்றிக்கொண்ட சோனியா அங்கேயே மயங்கி விழ, ரிசப்ஷனிலேயே போதையைத் தெளிய வைக்க முயன்றிருக்கிறார்கள் ஹோட்டல் ஊழியர்கள். இந்தச் செய்தி மெல்லக் கசிந்து மீடியாக்களில் பரவ ஆரம்பித்தது. கஸ்தூரிராஜாவின் வருங்கால மருமகள் இப்படி அசிங்கப்படுவதை விரும்பாத ரஜினி ஃபேமிலி இருவரையும் அழைத்து சீக்கிரம் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லி அட்வைஸ் பண்ணியதாம். இதைத் தொடர்ந்துதான் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் இருவரும்!

## கரடிதான் பிடிக்கும்

சரியான பொம்மைப் பைத்தியமாக இருக்கிறார் பூஜா. வெளிநாடு சென்றால் ஏகப்பட்ட பொம்மைகள் வாங்கி வந்து குவிக்கும் அவர், நண்பர்களுக்குப் பொம்மைகளைப் பரிசளித்து மகிழ்விக்கிறார். "வீட்டில் நூற்றுக்கணக்கில் பொம்மைகள் இருந்தாலும், பெட்ரூமிலுள்ள கரடிதான் எனக்குப் பிடிக்கும்" என்கிறார் பூஜா.



சீமா

## 'மஜா' பெயர் மாறுகிறது

தூய தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என்று சில அரசியல்வாதிகள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து பல படங்களின் பெயர்கள் தமிழில் மாற்றப்படுகின்றன. அந்த வகையில் விக்ரம், அஸீன் இணைந்து நடித்து வரும் 'மஜா' படத்தின் பெயர் விரைவில் மாற்றப்படுகிறது. 'மஜா' என்ற பெயரை உச்சரிக்க ஒரு மாதிரியாக இருப்பதாலேயே படத்தின் பெயர் மாற்றப்படுகிறதாம்.

## லண்டனில் விந்தியா

ஏகப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பணம் சம்பாதிக்கும் ஒரே கதாநாயகி யார் என்றால், அவர் விந்தியா மட்டுமே! கடந்த செவ்வாய் அன்று லண்டன் பறந்த அவர், மலையாளப் பட முன்னணிக் கலைஞர்கள் பலர் பங்கேற்ற ஒரு நட்சத்திரக் கலைநிகழ்ச்சியில் கலந்துகொண்டார். இந்த நிகழ்ச்சி, எய்ட்ஸ் நோயால் பாதிப்படைந்த குழந்தைகளின் மருத்துவச் செலவு நிதிக்காக நடந்தது. நல்ல நோக்கத்துக்காக நடந்த நிகழ்ச்சி என்பதால், அனைவருமே சேவை மனப்பான்மையுடன் பங்கேற்றார்களாம்!

## செந்தில் மகனின் புதிய ஏற்பாடு

நகைச்சுவை நடிகர் செந்தில் மகன் நவீன், 'உன்னெ எனக்குப் பிடிச்சிருக்கு' மூலம் நாயகனாக அறிமுகமாகிறார். இந்தப் படம் திரைக்கு வரும் முன்பே இன்னொரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அந்தப் படத்தை யூத் கிரியேஷன்ஸ் சார்பில் இராமமூர்த்தி தயாரிக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி நவீன் கார்த்திக் இயக்குகிறார். கதாநாயகியாக 'என் காதலே' விகாஸினி நடிக்கிறார். படத்துக்கு 'புதிய ஏற்பாடு' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் படப்பிடிப்பு முழுவதும் மலேசியா நாட்டில் நடத்தப்படுகிறது.

## நெருங்கிய ஜோடி

பிரபல இயக்குனர் விக்ரமனை 'புது வசந்தம்' படத்துக்காகத் தயாரிப்பாளர் சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரியிடம் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தியவர், பல வெற்றிப் படங்களுக்குத் தயாரிப்பு மேற் பார்வையாளராகப் பணிபுரிந்த இராமமூர்த்தி. யூத் கிரியேஷன்ஸ் சார்பில் அவர் தயாரித்துள்ள 'என் காதலே'யில், 'கும்மாளம்' படத்தில் நால்வரில் ஒருவராக அறிமுகமான கணேஷ், ரவிகணேஷ் என்ற பெயரில் கதாநாயகனாக நடிக்கிறார். அவரது ஜோடியாக 'பாறை' படத்தில் சின்ன கேரக்டரில் அறிமுகமான விகாஸினி நடிக்கிறார். ரஞ்ஜித் - ப்ரியாராமன் இணைந்து நடித்த 'நேசம் புதுசு' என்ற படத்தை வேல்முருகனுடன் இணைந்து இயக்கிய கார்த்திக், தற்போது நவீன் கார்த்திக் என்று பெயர் மாற்றிக்கொண்டு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார். இதில் ஒரு படுக்கை அறைக் காட்சியில் நெருக்க மாக நடித்துள்ள ரவிகணேஷ் - விகாஸினி ஜோடி யைப் பற்றி இப்போதே கிசுகிசு வர ஆரம்பித் துள்ளது! எப்போது வெடிக்குமோ?

## முடி வளர்க்கும் அஜித்

'காட் ஃபாதர்' படத்தைப் பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை என்பதால், அடுத்து பாலா இயக்கத்தில் நடிக்கும் 'நான் கடவுள்' படத்துக்காக புதிய அவதாரம் எடுத்துள்ளார்அஜித். இந்தப் படத்தின் மூலம் திருப்புமுனையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் அவர். தனது தோள்பட்டையைத் தொடுமாறு நீளமாக முடி வளர்த்திருக்கும் அவர், குறுந் தாடியையும் மழிக்காமல் வித்தியா சமான தோற்றத்துடன் காணப்படு கிறார். முடி வளர்ப்பதில் கவனம் செலுத்தியதால் அலுவலகப் பக்கம் வராமல் இருக்கும் அவர், யாரையும் நேரில் சந்தித்துப் பேசுவது இல்லை. இந்த கெட்டப் யாருக்கும் தெரியக் கூடாது என்பதில் உஷாராகச் செயல்படுகிறார் என்பதால், நண்பர்கள் கூட அவரை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து விடுகின்றனர்!



தியா




## எப்போதும் நீ...



உன் அரைக்காற்சட்டையின்
அழகு
எனக்கல்லவோ தெரியும்
அடிக்கடி
ஊசி தருபவள் நான்தானே...!

உன் 'டின்பால்' மூக்கை
கேலி செய்யும்
நண்பர்களைவிட
அதிகம் அறிந்தது
என் குட்டைப் பாவாடைதான்!

'பணிஸ்' தின்னும் போட்டிக்கு
உன்னைத் தூக்கிப்
போட்டால்.....
துடிதுடித்து மறுப்பாய்!
உன்னை விட
கவளம் தரும் - என்
கைக்குத்தானே தெரியும்
நீ சாப்பாட்டு ராமன் என்று...

காம்புகளில் முள்முருங்கை
காய் வைத்திருந்தால்
பல்லாங்குழியில் - உன்
கள்ள விளையாட்டுத்தான்
ஞாபகத்திற்கு வருகுது

இப்போது...
மூன்றாம் மனிதனாக
என்னைக் கடக்கிறாயே....
இந்தக் சமூகத்திற்கு நீ
காளைதான்
இந்தக் கன்னிக்கு...?
சிறுவன் தானடா
எப்போதும்.....!

*விஜயமலர், சம்பூர்.*

## சுனாமி - 2004

நினையாப் பிரகாரமாய்
எல்லாம் நடந்து
முடிந்துவிட்டது.
கிழக்கில் உதித்த
சூரியனைப் பார்த்து
விடிந்துவிட்டதாய்
நினைத்தவர்கள்
தலைகளில்
இடி வந்து விழுந்தது.

கடற்காற்றை சுவாசித்து
கடல் நீரில் நீச்சலடித்து
கடல் மணலில் உருண்டு
பிரண்டு
கீச்சுமாச்சுத் தம்பளம்
கீயா மாயாத் தம்பளம்
விளையாடி
மகிழ்ந்தவர்கள்
ஒரு கணத்தில் ஓய்ந்து
போயினர்.
கனவா நினைவா
பிரித்துப் பார்க்க
நேரமின்றி
அலையோடு
அலையாயினர்.

என்ன இது
அன்னையாய் உன்னை
நம்பினோம்
காலம் காலமாய்
அரவணைத்தாய்
இன்று அனாதைகளாய்
அனாதைப் பிணங்களாய்
மூர்க்கம் காட்டினாயே!

காற்றின் திசை பார்த்து
காலநிலை சொல்லும்
தேசத்து மக்களை
கணத்தில் அழித்து
புதுக் காலநிலை
அரங்கேற்றினாயோ!

கண் முன்னே மரண
ஓலம்
கையிலோ காலிலோ
பிடிமானம் ஏதுமின்றி
சிறு சருகுகளாய்
மனிதர் கூட்டம்.
வீதிகள் கடலாக
விரைந்து வந்த
வாகனங்கள்
விளையாட்டுப்
பொருளாக...
புயலுக்கே புருடா விட்டு,
உயர்ந்து நின்ற
கட்டிடங்கள்
மணல் வீடுகளாய்..
பெரிது சின்னன் பேசி
வீரம் காட்டும்
மனிதனிடம்
வாழ்க்கைப் பாடம்
கற்பிக்க
வாய்த்த வழி
இதுதானோ!

*அன்புடன்*
*சின்னத்தங்கச்சி, லண்டன்.*

## மலையகத்தான் மனதிலிருந்து.....!

பெருமூச்சின் வழியே
வெளியேறிப் போகிறது
எங்கள் கனவுகள்.

எம் நிழல்களை
யாரோ நசித்துக்
கொண்டிருக்கிறார்கள்
எங்களை
நழுவவிடாமல்.

வெளிச்சம் நுழையாத
எங்களது அறைக்குள்
வெள்ளையடித்துக்
கொண்டிருக்கிறோம்
வெளியேற முடியாத
சுதந்திரக் கைதிகளாய்

விதியினைக்
குற்றம்சொல்லி
எங்கள்
வேதனையை
சமாதானப்படுத்துகிறோம்.

தினம் தினம்
பெருமூச்சின் வழியே
வெளியேறிப் போகிறது
எங்கள் கனவுகள்.

*மு.கீர்த்தியன், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி.*

## விசுவாசி

விகாரம் துளிர்த்த
வாழ்வு வெளிக்குள்
தருணம் பார்த்து
உயிர்த்துக்
கிடக்கும்
நான்...
இயலாமைகள்
சில்லிட்ட
இதய நிலத்தில்
நெருஞ்சிகள்
முளைவிட
எத்தனிக்கும்...
நம்பிக்கைகள்
மரித்த
தருணத்தில்...
துயர்
அடர்ந்த
பரிதி
ஒளியிழக்கும்...
இருட்டு
பாசிகள்
முக்கி முனகி
ஆன்மா நசிக்கும்...
எனினும்...
வெறுமை
வியாபித்திருக்கும்
ஜீவித வெளியை
துன்பப் படிவகற்றி
பாதக சுவர் உடைத்து
எழ
தினமும் முயற்சிக்கும்
விசுவாசி நான்...!

*எஸ். சிவகுமார், அக்கரப்பத்தனை.*

## உன்னைக் காணாமல்

உன்னை
எதிர்பார்த்து
காணக் கிடைக்காத
ஒவ்வொரு
நிமிடமும்
நான் என்னை
விட்டு
தூரச் செல்கிறேன்.
நான் ஒதுங்கிச்
செல்லும்
ஒவ்வொரு மணித்
துளியும்
தோற்றுப்
போகிறேன்
உன்னால்.
என்னை எதிர்த்துப்
போரிட நினைக்கும்
ஒவ்வொரு
நினைவும்
மரித்துப்
போகின்றது
உன்னால்.
ஒருவேளை -
உன்னைக்
காணாமல்
இருந்திருந்தால்
இந்த ஏக்கங்கள்
என்னைச்
சோதிக்காது
தப்பித்திருப்பேன்.

*கே. கிஷாந்தினி, திருகோணமலை.*

## எச்சங்கள்

உன் எச்சில்
வார்த்தைகளால்
தோயப்பட்ட மனம்
உலரும் வரையான
தகிப்புக்களில்
உழன்று
கொண்டிருக்கிறது.
தவமிருப்புகளில்
இப்போது - சில
தடுமாற்றங்கள்
தலைதூக்கியிருக்கின்றன
இருண்ட தனிமைக்கு
மகுடம்தான்
கேட்டேன் - ஏன்?
மரண கிரீடம் சூட்டி
வாழ்வு ரதத்தை
மரண ஊர்தியாய்
மாற்றிப் போகிறாய்.
அன்பே!
கோடை உஷ்ணமாய்
கொதித்தெழும் -
உன்
பகட்டு
பரிகாசங்களுக்கு -
என்
ஆன்ம
நைவேதனத்தின்
உயர்ச்சிகள்
புரியவில்லை.
ஒன்று மட்டும் கேள்!
காலச் சக்கரத்தில் -
நீயும்
ஒரு நாள்
தொடக்கப்புள்ளியைத்தான்
தொட
வேண்டியிருக்கும் -
அங்கே
எச்சமாய் எஞ்சப்
போவது
நீ மட்டுமே.....

*—சிவனு மனோஹரன், ஹட்டன்.*

## இப்படிக்கு பூங்காற்று....

ஹோமோன்களின்
இரயில் பயணத்தில்
திடீரென்று எனைத்
திரும்பிப் பார்க்கிறாய்,
என் திண்ணையில்
திருக்குறள் துடைக்கிறது
வியர்வை வினையெச்சம்...!

கிரனைட் வீசும்
உன் கண்களால்
கருகிப் போயிற்று
ஹைக்கூத் தாவரங்கள்
இப்போது என் மனமெங்கும்
ஹிரோஷிமா நிசப்தம்.....!

இரத்தம் உறையும்
உன் புன்னகையில்
என் துருவப் பிரதேசத்து
பெங்குயின் பறவைகள்
இடம்பெயர்ந்தனவே....!

ஸ்பரிசங்களின்
பங்குச் சந்தையில்
கிரடிட் காட் மூலம்
கனவு வாங்கி வருகிறேன்.

*நியாஸ் முஸாதிக், கிண்ணியா - 05*

## ஹைக்கூ

### தாவரம்

சுய உழைப்பில்
உணவு உண்டு
சுயமாக வாழும்
எம்மிடமே
உயிர் வாழ
பிச்சை கேட்கும்
மனித இனமே
நீ எமக்கு
இரண்டாம் பட்சமே!

### இசை

இதயத்து
இரணங்களை
இலேசாக்கும்
மருந்து.

### மழை

வெப்பத்தை
தாங்க முடியாமல்
வியர்வை
சிந்துகிறது
வானம்.

### பூக்கள்

தாவரத்தின்
தனி அழகுக்கு
துணை போகும்
வண்ணத்
தேவதைகள்.

*-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

புதுக்கவிதை ஆரம்ப காலத் தயக்கங்களை மீறி பிரபலம் பெறத் தொடங்கிய காலத்தில், அதன் முக்கிய கவிஞர்கள் சிலர் நவீன கவிதைக்கென சில அடிப்படையான கோட்பாடுகளை வரையறுக்க முனைந்தனர். அவர்களது கருத்துக்களின் சாரத்தைப் பின்வருமாறு கூறலாம் :

"புதுக்கவிதை அனுபவங்களின் சாரத்தை உணர்த்துவதாக இருக்க வேண்டும். இன்றைய சிக்கல்களை, பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். எனவே கவிதை இன்றைய மொழி நடையில் வெளிப்பட வேண்டும். ஆகவே இன்றைய கவிதை உரைநடைத் தன்மை கொண்டதாக அமைவதே இயல்பான வெளிப்பாடு. நேற்றைய கவிதைக்கான செய்யுள்நடை, இன்றைய கவிதைக்கு அந்நியமானது. விவரிப்பை விடுத்து உணர்த்துவதை முதன்மைப்படுத்துவதால் இன்றைய நவீன கவிதை செறிவான அமைப்புக் கொண்டதாகிறது. வெளிப்படையாகவன்றி எதையும் சூசகமாக உணர்த்த முனைகிறது. இதனால் கவிதையில் ஒருவிதமான தெளிவின்மையும் மௌன இடைவெளியும் பன்முகத்தன்மையும் இன்றைய கவிதையில் தவிர்க்க இயலாததாகி விடுகிறது"

இந்த அடிப்படையான தன்மைகளை உள்வாங்கித் தக்கவைத்துக் கொண்டே இன்றைய கவிதைகள் பலவும் வருகின்றன.

இந்த வாரம் கவிஞர் அப்பாஸின் மூன்று கவிதைகள். நவீன கவிதைகளின் இன்றைய போக்கிற்கு உதாரணமாய் இருப்பவை, அப்பாஸ் அவர்களின் கவிதைகள். வரைபடம் மீறி, வயலட் நிற பூமி, ஆறாவது பகல் ஆகிய இவரது கவிதைத் தொகுப்புகள் வந்துள்ளன.



### காதல்

நீ கேட்பது
விசித்திரமாயிருக்கிறது
காதல் அவ்வளவு
சுலபமானதல்ல.
மற்றபடி நீ உன்னை
அலங்கரிப்பதும்
வாசனைத் திரவியங்கள்
இட்டுக் கொள்வதும்
உனது கடவுள்
பிரார்த்தனையை விடவும்
சற்று கடினமானதுதான்.
நான் புகைத்துக்
கொண்டிருப்பேன்
நீ முகம் சுளிக்கக் கூடும்
இரவுகளில் அமர்ந்து
மரங்களுக்கிடையில்
நிலவைப் பார்த்தபடி
பீர் குடித்துக்
கொண்டிருக்க
ஒழுங்கற்ற தன்மை
குறித்து
பதிலில்லாத உனது
கேள்விகள்
அப்பொழுது
நீ உனது
ஒப்பனைகளைக்
கலைத்து
விலகிச் செல்லக் கூடும்
வார்த்தைகள் வெறும்
அலுமினியப் பாத்திரங்கள்
அதன் சப்தம்
அவைகளை எப்படி
வேண்டுமானாலும்
உபயோகித்துக் கொள்ள
அது மட்டும்தான் கற்றுத்
தரப்பட்டிருக்க
எனது கைகள் சூடாகத்
தானிருக்கும்
நீ உனது
வெதுவெதுப்பைக்
கருப்பையினுள் கண்டு
உணர முடியுமானால்,
அப்பொழுது உன்னைத்
தீண்டும்
சங்கீதம் மிக
நெருக்கமாக
உன்னுள் நடனமிட
இப்பொழுது நீ சொல்லிக்
கொள்
அது காதல் எனக்கு
மறுப்பேதுமில்லை.


### குழந்தைகள்

கொஞ்சம் பொறுங்கள்
கேட்பதற்கு
நேரமில்லை
நீங்கள்
அரசியல்வாதியாய்க்
கூட இருக்கலாம்
விண்மீன்கள்
வெளிச்சத்திற்கு
வரப்போகிறது
நகரத்துக்
குழந்தைகள் தூங்கிக்
கொண்டிருக்கின்றன
நான் அவசரமாய்ப்
போக வேண்டும்
இந்தப் பால்
அவர்களுக்கானது
குண்டும் குழியுமாய்
இருக்குது சாலைகள்
நீங்கள் சொல்ல
வந்ததைப் போலவே
ஒவ்வொரு துளியும்
முக்கியமானது
சிந்தாமல் எடுத்துச்
செல்ல வேண்டும்
பச்சை இலையை
நேர் குறுக்காய்
கிழித்ததற்காய்
வருந்த வேண்டாம்
பால் சிந்தாமல்
இருக்க
அதுமிக
அவசியமானது
நான் விரைவாக
வேண்டும்
எனது குழந்தைகள்
தூங்கிக்
கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கானது


### ஒரு ஈராக்கியனின் காதல் பாடல்

எனது தேசத்தில்
நீங்கள் யார்
வெள்ளைத் தொப்பியோடு
எனது தொலைக்காட்சிப் பெட்டி
மூலம்
உண்மையை
மறுபடி மறுபடி பொய்யென நிரப்பும்
நீங்கள் யார்
என் காதலியின் பேச்சு முழுவதும்
உங்கள் கவச ராணுவ வண்டியும்
துப்பாக்கியும்
உங்களை அடையாளம் காணத்
துடிக்கிறேன்.
உங்கள் போர் விமானங்களின்
புழுதியில்
எங்கள் காதல் கண்கள்
கலங்கிப் போய் இருக்கின்றன.
தயவு செய்து
உங்களது தொலைக்காட்சிப்
பெட்டியை
மூடிவிடுங்கள்
மறுபடி மறுபடி பொய்களை நிரப்பி
தேசத்தை அபகரிக்கிறீர்கள்
இப்பொழுது
என் காதலியை
இரவில்தான் சந்திக்க முடிகிறது.
பயங்களில் அவளது கைகள்
உலர்ந்து போய் கிடக்கின்றன
ஒரு துப்பாக்கி வேண்டுமென்கிறாள்
எனது காதலை
துப்பாக்கியால் நிரப்பிவிட்டீர்கள்
நண்பனே,
உன் வெள்ளை முகமூடியைக்
கழற்றிவிடு
மறுபடியும் சொல்கிறேன்
உனது தொலைக்காட்சிப் பெட்டியை
மறைத்துவிடு
ஜாக்கிரதை
எனது காதல் ரவை
உனக்கு மிக அருகாமையிலேயே
இருக்கிறது.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : பூ. சுரேஸ்குமார்.
வயது : 22
முகவரி : 14, புகையிரத நிலைய வீதி, அம்பலாங்கொட.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, கிரிக்கெட், ஜிம்.



பெயர் : எஸ். அகிலன்.
வயது : 23
முகவரி : P. O. Box No: 60031, Alkhor, Doha - Qatar.
பொழுதுபோக்கு : ரி.வி., வானொலி.



பெயர் : அருள்நேசன்.
வயது : 25
முகவரி : P. O. Box No:10295, Kalabiha, Al - Hassa, Main Street, Mubarraq, K.S.A.
பொழுதுபோக்கு : வழமையானவை.




பெயர் : கி.கிருஷ்ணராணி.
வயது : --
முகவரி : 68, காந்திநகர், திருமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை.




## மூத்த குழந்தைகள் மக்குகளா?

மூத்த குழந்தைகள் எல்லாம் எப்போதுமே



மந்தமாக இருப்பார்கள். இளைய குழந்தைகள்தான் சுட்டிகள் எனப் பலர் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். இது உண்மையா என்றால் இல்லை.... சரி, அப்படியானால் ஏன் முதல் குழந்தைகள் அப்படி காணப்படு கிறார்கள். அவர்கள் பெற்றோரைப் போல பொறுப்புணர்ச்சி உள்ளவர்கள். ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுபவர்கள். வீட்டுச் சூழலைச் சார்ந்து நடப்பவர்கள். இதனால்தான் அப்படி இருக்கிறார்கள் என்கின்றன ஆய்வுகள். இரண்டாவது பிறக்கும் குழந்தைகள் எப்போதுமே விவாதம் செய்பவர்களாக இருப்பார்கள். கடைசிக் குழந்தை, முதலில் பிறக்கும்




குழந்தைகளைவிட பலவீனமானது என்பதால் நகைச்சுவை போன்ற உணர்வு கொண்டதாக இருக்கும். இதனால்தான் மற்றவர்களைக் கவர நினைத்து ஜோக்கர் போல நடந்துகொள்ளும்.

முதல் குழந்தைக்கு அடுத்த குழந்தைகள் மற்றும் கடைசிக் குழந்தை ஆகியோர் வெளியில் தங்களை ஒரு முக்கியப் புள்ளியாக வெளிப்படுத்துவார்கள். ஏன் தெரியுமா? தங்களுக்கு ஒரு பேக்ரவுண்ட் இருப்பதால்தான்.

## கடுமையான மன இறுக்கமா?

நீங்கள் மன இறுக்கத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறீர்களா? அப்படியானால் நன்றாகத் தூக்கம் போடுங்கள். ஆழ்ந்த - அமைதியான - தேவையான தூக்கம் கிடைக்கும் பட்சத்தில் மன இறுக்கக் கட்டு கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்ந்து




இயல்பு நிலைமை திரும்ப வழி பிறக்கும் என்கிறார்கள் மனோவியல் நிபுணர்கள்.

மன இறுக்கம் ஏற்கனவே இருந்துக் கூடவே இன்சோம்னியா என்ற தூக்க குறைபாடும் இருக்குமானால் குறிப்பிட்ட நபர், மன இறுக்கத்தில் இருந்து வெளியே வருவது கடினமான விஷயம் தான். ஆனால் மன இறுக்கத்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட ஒருவர் நன்றாகத் தூங்கினால் அவர் படிப்படியாகக் குணமடைய வாய்ப்பு உண்டு.

மன இறுக்கத் காரணமாக சோகம், விரக்தி, எந்தச் செயலிலும் முழு திருப்தி இல்லாமல் ஏனோ - தானோ என்று இருப்பது. நம்பிக்கையின்மை போன்ற பிரச்சினைகளைத் தோற்றும். இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல தூக்கம் கிடைத்தால் முன்னர் சொன்ன அனைத்தும் காணாமல் போய்விடும்.

## பெண்களை கவர்ந்திழுப்பதில் ஆண்கள் தோற்பது ஏன்?

பெண்களைக் கவர்ந்திழுக்கும் திறமை பல



ஆண்களிடம் இல்லாததற்கு ஆராய்ச்சி பூர்வமாக இப்போது காரணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது: அவர்களின் உடல் அமைப்பில் சில அணுக்களின் தன்மையே இந்த அவலத்துக்குக் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.


அமெரிக்க மற்றும் ஆஸ்திரிய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் பழ வண்டு உடலில் நடத்திய ஆராய்ச்சியில் இருந்து ஒரு அபூர்வ ஜீன் பற்றிக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த ஜீனின் திறமைக்கு ஏற்ப, பெண் வண்டுகளை ஆண் வண்டுகள் கவரும் திறமை அமைகிறது. இது போன்ற குறிப்பிட்ட உடல் அணு மனித உடலில் இல்லை என்றாலும் அதற்கு இணையான உடல் அமைப்பு ரீதியிலான மாற்றங்களே பெண்களை ஆண்கள் கவரும் திறமைக்கு அடிப்படையாக அமைகிறது.

## தாமதமாகக் கருத்தரித்தால் ஆபத்து....!

பெண்கள் கால காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்வது நல்லது. இல்லாவிட்டால் சிக்கல்தான்.

பெண்கள் 20 முதல் 30 வயதுக்குள் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும். குழந்தை பெறுவதற்கு ஏற்ற காலமும் அதுதான் அதை மீறி, தாமதமாகக் குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களுக்கு ஆபத்தான ரத்த உறைவுகள் காரணமாக பிரசவத்தில் சிக்கல், குறைப்பிரசவம், கருச்சிதைவு எனப் பல்வேறு சிக்கல்கள் வர வாய்ப்பு உள்ளது. சில நேரம் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படலாம்.

35 வயதுக்கு மேல் ஆகும் போது, பெண்கள் இயல்பான பிரசவம் என்ற பாதுகாப்பில் இருந்து விலகிச் சென்று விடுகிறார்கள். உடல் ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பது, இறந்தே பிறப்பது. கருச்சிதைவு எல்லாம் இந்த வயதை தாண்டிய பெண்களுக்கு பெரும்பாலும்



நடக்கின்றன. 20 வயதில் குழந்தை பெறும் பெண்ணுடன் ஒப்பிடும் போது 35 வயதைத் தாண்டி, ஏற்கெனவே ஒன்றுக்கும் மேல் குழந்தைகள் உள்ள ஒரு பெண் மீண்டும் கர்ப்பம் தரித்து பிரசவத்துக்கு தயாராகும் போது நுரையீரல் இரத்த உறைவு காரணமாக உயிரிழக்க கூடுதலான வாய்ப்பு உள்ளது.

45 வயதைத் தாண்டி கருத்தரித்தால், அது வம்பை விருந்து வைத்து அழைப்பதற்குச் சமம். ஏனெனில் இக்கால கட்டத்தில் இயல்பான ஒரு குழந்தையை கருப்பையில் சுமந்து பெற முடியாத அளவில் தான் பெண்கள் இருக்கிறார்கள். வயது ஆக, ஆக இரத்த அழுத்தம் அதிகரிப்பதால் கருவில் உள்ள குழந்தைக்கு பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. உடல் ஊனமுற்ற குழந்தைகள் பிறக்க இதவே காரணமாகிறது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

### அவல் பக்கோடா

**தேவையானவை:**

| | |
|---|---|
| அவல் | - 1/4 கிலோ. |
| கடலை மாவு | - 100 கிராம். |
| அரிசி மாவு | - 100 கிராம். |
| கொண்டைக் கடலை (வெள்ளை) | - 100 கிராம். |
| கடலை எண்ணெய் | - 1/4 கிலோ. |
| உப்பு, மிளகாய்த் தூள் | -தேவையான அளவு. |

**செய்முறை :**

அவலை கல், மண் இல்லாமல் சுத்தம் செய்து அரை மணி நேரம் ஊற வைக்கவும். கடலை மாவு, அரிசி மாவு, மிளகாய்ப் பொடி சலித்துக் கலக்கவும், கொண்டைக் கடலையை முதல் நாளே ஊற வைப்பது நல்லது. அம்மியில் கரமுர என்று அரைத்து அதையும் அவலையும் (தண்ணீர் இல்லாமல் பிழிந்து) அரிசி மாவில் போட்டு ஒரு கரண்டி எண்ணெய் காய்ச்சி ஊற்றி, நீர் சேர்த்துக் கெட்டியாய்ப் பிசைந்து, கடலை எண்ணெயை வாணலியில் விட்டு, காய்ந்ததும் சிறு பக்கோடாக்களாய் பொரித்து எடுக்கவும்.

## நீங்கள் மெதுவாக நடப்பவரா?


உடல் பருமனான ஆண்களும், பெண்களும் வழக்கமான வேகத்தில் நடப்பதை விட



மெதுவாக நடைப்பயிற்சி செய்வதால் நிறைய கலோரி எரிக்கப்படும் என்றும் மூட்டுக் காயங்கள் தவிர்க்கப்படும் என்றும் மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். மணிக்கு 3 மைல் வேகத்தில் நடந்து செல்வதைக் காட்டிலும், மணிக்கு 2 மைல் வேகத்தில் நடந்தால், மூட்டுக் காயங்கள் 25 சதவீதம் கூடுதலாகக் குறையுமாம்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா? உடல் பருமனான நபர்களுக்கு ஏற்கனவே பெரிய கால்களும், அதில் அதிகமான சதையும் இருக்கும். இந்நிலையில் மெது மெதுவாக நடக்கும் போது அவர்கள் அதற்காகக் கூடுதல் வேலை செய்ய நேரிடுகிறது. அதன் விளைவுதான் கலோரி செலவு.

அதே சமயம் மெதுவாக நடப்பதால் இருதய இரத்த நாளங்களுக்குப் பலன் கிடைப்பதில்லை. அதற்கு நடைப் பயிற்சியுடன் நீச்சல், சைக்கிளிங் போன்ற இதர பயிற்சிகளையும் செய்துவர வேண்டும்.



# ஒரு தாயின் மகள் 38

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

**சென்ற வாரம்**


தனது மகன் ஆண்டி பக்கத்து வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அங்கு வந்த பேஜ், அவனுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது அவள் கணவன் பிராட் அங்கு வந்து சேர்கிறான். இருவருக்கிடையிலும் வாக்குவாதம் நடைபெறுகிறது

“அவன் அப்படிப் பயப்படும் பட்சத்தில் நீ ராத்தரி வீட்டுக்கு வர வேண்டியது தானே? ஏன் ஆஸ்பத்திரியில் இருக்கிறாய்?” என்றான் பிராடு இரக்கமில்லாமல்.

சரேலென்று எழுந்தவள், அவனை அறைகிறாற்போல் அவன் முன்னே வந்து நின்றாள்.

“இப்போது சொல்கிறேன், கேளுங்கள். ஆலி உயிருடன் இருக்கிற வரையில் அல்லது அவள் உயிர் பிரிகிற வரையில் நான் அவளை விட்டு வர மாட்டேன்” என்றபோது அவள் கண்களில் நீர் முட்டித் தளும்பியது. ஆனால், அவள் குரலில் தடுமாற்றம் இருக்கவில்லை. “ஆலி பிறக்கும்போது அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்தேன். அதே போல அவள் இந்த உலகத்தை விட்டுப் போகும்போதும் அவள் கையைப் பிடித்துக் கொண்டிருப்பேன். நீங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்தாலொழிய அல்லது இங்கே ஆண்டியோடு இருந்தாலொழிய நான் வீட்டில் தங்கப் போவதில்லை. ஆனால் ஒன்று: எந்தக் கள்ளக் காதலனுடனும் கூத்தடித்துக் கொண்டிருக்க மாட்டேன்.”

சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்



கொண்டாள். பிராடைப் பார்க்கக் கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

“பேஜ்....” என்று அவன் மெதுவாகக் கூப்பிட்டான். அவன் குரல் கரகரத்திருந்ததைக் கேட்டு அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

“எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை....” என்றபோது குற்ற உணர்வு அவனைப் பொசுக்குவது வெளிப்படையாகவே தெரிந்தது. “ஆலியை ஆஸ்பத்திரியில் பார்த்த பிறகு, அவள் பிழைத்து வந்து நடமாடுவாள் என்று எனக்குக் கொஞ்சமும் தோன்றவில்லை. வாழ்க்கை பூரா அவள் ஜடமாக, மரமாக இருப்பதை என்னால் பொறுக்க முடியாது. டாக்டர்கள் என்னென்னவோ சொல்கிறார்கள். கோமா என்கிறார்கள், மூளை பழுதாகி விட்டது என்கிறார்கள், புலன்கள் இயங்காது என்கிறார்கள். அவ்வளவையும் கேட்டுவிட்ட பிறகும் அவள் பிழைத்து நோர்மலாக வருவாள் என்று எப்படி உன்னால் நம்ப முடிகிறது?”

“எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கடைசி வரையில் அவளுக்காகப் போராடத்தான் போகிறேன்.”

“எனக்குப் பயமாயிருக்கிறது பேஜ்” என்று கூறி, அவள் மார்பில் தலைசாய்ந்து ஆறுதல் தேடினான் பிராட். “ஆலி இறந்து போகக் கூடாதென்றுதான் நான் ஆசைப்படுகிறேன். அதே சமயம் அவள் மரக்கட்டையாக வாழ்வதையும் என்னால் சகிக்க முடியாது.”

யதார்த்த நிலைமையைப் பார்க்கப் பயந்தான் அவன். ஓட்டம் பிடிக்கவே அவனுக்குத் தோன்றியது. அவன் காதலி ஸ்டிபானி அவனை அப்படி மாற்றியிருந்தாள். ஆலிஸனின் பக்கத்திலேயே உட்காந்திருப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது என்று அவனை எண்ண வைத்தவள் அவள்தான். எப்படியும் பேஜ் சமாளித்துக் கொள்வாள் என்று சொல்லித் தந்தவளும் அவள்தான்.

எனினும், பேஜின் வேதனையைக் கண் முன்னே பார்த்தபோது அவன் மனம் இளகியது. குற்ற உணர்வு உறுத்தியது. அவள் இடுப்பை வளைத்து ஆதுரத்துடன் முத்தமிட முயன்றான்.

மறுவினாடியே, கசப்பினால் பேஜின் தேகம் விறைத்துக் கொண்டது. “கிட்டே வராதீர்கள். வெறுப்பாயிருக்கிறது” என்றாள் கடுமையாக. உண்மையாகவே அதைச் சொன்னாள். இவருக்குத்தான் ஸ்டிபானி இருக்கிறாளே? அதற்கு மேல் என்ன வேண்டும்? இவர் வேறொருத்திக்குச் சொந்தமாகி விட்டவர். அந்நியர். நமக்கும் இவருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.....

முரட்டுத்தனமாக முத்தமிட்ட அவனைப் பிடித்துத் தள்ளினாள். அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

சமையலறைக்குச் சென்று ஒரு காப்பி போட்டுக் கொள்ள முயன்ற சமயம் பிராட் பின்னாலே வந்து நின்றான். “ஸாரி பேஜ்..... முட்டாள்தனமாக உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொண்டு விட்டேன்...” என்றான்.

அவளுக்குக் கொஞ்சமும் மனம் இளகவில்லை. அவனைத் தொடவே அருவருப்பாக இருந்தது. ஒருவேளை ஸ்டிபானியின் தொடர்பைப் பற்றி அவன் வருந்தியிருப்பானானால், அந்த உறவை முறித்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருப்பானானால், பேஜுக்கு மனம் மாறியிருக்குமோ என்னவோ. ஆனால் அவனிடம் மனமாற்றத்திற்கான அறிகுறி இம்மியும் தென்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் பேஜின் உறவை முறித்துக் கொள்வதில் தான் அவன் அதிக நாட்டம் கொண்டிருப்பது போல் தோன்றியது. ஆஸ்பத்திரியில் ஆலிஸனின் நிலைமை பயங்கரமாக இருக்கிறதே என்பதோ, இங்கே ஆண்டி தனியாக இருக்கிறாளே என்பதோ எதுவும் இவருக்குக் கவலையில்லை. ஸ்டிபானி.... ஸ்டிபானி.... ஸ்டிபானிதான் முக்கியம்!

“அவளுடைய டெலிபோன் நம்பரைக் கொடுங்கள். ஏதாவது அவசரமானால் உங்களைக் கூப்பிடச் சௌகரியமாயிருக்கும்.” என்றாள் ஆத்திரத்துடன்.

“வந்து..... அதற்குத் தேவையிருக்காது. இன்று ராத்திரி நான் இங்கே ஆண்டியுடன் இருப்பேன்.”

“இருந்தால் இருங்கள். இல்லாவிட்டால் போங்கள். எனக்கு அக்கறையில்லை!” என்றாள் பேஜ். அவள் முகத்தில் கோபமும், அடிபட்ட காயமும், பிடிவாதமான உறுதியும் பளபளத்தன. அவள் நெருங்கி வருகிற மாதிரி தோன்றியதெல்லாம் ஒரு வினாடி நேரம்தான் என்பதைப் பிராட் உணர்ந்தான்.

“நிச்சயமாக நீங்கள் மாறப் போவதில்லை. அந்தப் பெண்ணின் நம்பரைக் கொடுங்கள் என்றால் கொடுத்து விட்டுப் போங்களேன்” என்றாள் அவள் மறுபடியும்.

“சரி. டெலிபோன் நோட்டில் குறித்து வைக்கிறேன்.”

அவள் மௌனமாகக் காப்பியை உறிஞ்சினாள்.

“இன்றைக்கு எங்கே போகப் போகிறாய்” என்று பிராட் கேட்டான். மீண்டும் ஆஸ்பத்திரிக்குத்தான் என்று அவள் சொல்லப் போகிறாள் என்று அவன் நினைத்திருந்தான். எனவே அவள் பதில் ஆச்சரியம் தந்தது.

“அந்தப் பையன் பிலிப்பின் சவ அடக்கம் இன்று நடக்கிறது. அதற்குப் போகப் போகிறேன். நீங்கள் வருகிறீர்களா?”

“நானா! நிச்சயமாய் வரமாட்டேன். அந்த அயோக்கிய ராஸ்கலால்தான் என் பெண் சாகக் கிடக்கிறாள். எப்படித் தான் உனக்கு அங்கே போக மனம் வருகிறதோ! சே!” என்று சீறினான் பிராட்.

“அவன் அவர்களுக்கு ஒரே பிள்ளை. விபத்துக்குக் காரணம் அவன்தான் என்பது இன்னும் முடிவாகவில்லை. அப்படியிருக்க, போகமாட்டேன் என்று சொல்வது என்ன நியாயம்?”

“எனக்கு அந்தப் பையனிடம் துளியும் இரக்கம் ஏற்படவில்லை. இரத்தப் பரிசோதனையில் அவன் குடித்திருந்தான் என்று வேறு தெரிந்திருக்கிறது. அப்புறம் என்ன?”

“ஆனால் போதை ஏற்படும் அளவுக்கு அவன் குடித்திருக்கவில்லை” என்று மறுத்துப் பேசினாள் பேஜ். “சரி, அந்தப் பெண்பிள்ளை? மறு காரை ஓட்டி வந்த அவள் மீதும் தப்பு இருக்கலாமில்லையா?”

“லாரா ஹட்சின்ஸ் ஒரு செனட்டரின் மனைவி. மூன்று குழந்தை பெற்றவள். போதை தலைக்கேறும் அளவுக்குக் குடித்துவிட்டுக் கன்னாபின்னாவென்று கார் ஓட்டுவாளா?”

(தாய் தொடர்வாள்.....)

## முத்தம் வேண்டும்!!




சச்சின் படத்தில் ஒரு பாடலுக்கு கவர்ச்சி ஆட்டம் ஆடி பல இளைஞர்களின் தூக்கத்தைக் கெடுத்த பிபாசா பாசுவை அண்மையில் பேட்டி கண்ட பிலிம் ஃபெயார் சஞ்சிகையில் அவர் தன்னை பற்றிய பல உண்மைகளைக் கூறியுள்ளார். இப்பேட்டியில் அவர், தான் கமலஹாசனுடன் நடிக்க விரும்புவதாகக் கூறியிருக்கிறார். ஏதோ நல்ல விடயமாக இருக்கிறதே என்று தொடர்ந்து கேட்க அவர் மேலும் கூறுகையில் கமலஹாசன் ஒரு நவரசநாயகன். அவரிடமிருந்து நான் நிறையக் கற்றுக் கொள்ள இருக்கிறது. மற்றும் நான் ஒரு கமல் தீவிர ரசிகை. கமலஹாசன் ஒவ்வொரு படத்திலும் ஒரு வித்தியாசத்தை செய்வார். அதனால் அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அது மட்டுமல்ல அவர் நடிக்கும் படங்களிலும் அந்த முத்தக்காட்சி ரொம்ப தத்ரூபமாக இருக்கு அந்த முத்தத்தை நான் பெற வேண்டும் போலவே இருக்கும். அதற்காகவே நான் அவர் படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன் என்று கூறியுள்ளார். கமலின் முத்தத்திற்கு அவ்வளவு ருசியா?

## பொது மக்களுக்காக!



தியா மிர்சா அனைவருக்கும் தெரிந்த கவர்ச்சி நடிகை. அவர் தன்னிடம் உள்ள கவர்ச்சியை இயலுமான வரை காட்டி வருகிறார். இவரிடம் பத்திரிகையாளர் ஒருவர் ஏன் நீங்கள் கவர்ச்சி காட்டி நடிக்கிறீர்கள் என்று கேட்ட போது, அவர் கூறினாராம். இன்று மக்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் அவர்கள் தங்கள் சிரிப்புகளை மறந்து போய்விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களில் முகத்தில் சிரிப்பை வர வழைக்கத் தான் நான் இப்படி கவர்ச்சி காட்டுகிறேன் என்றாராம். இவரின் பொதுச் சேவையை நினைத்து கேள்வி கேட்ட வருக்கு பேச்சு மூச்சு இல்லாமல் போய் விட்டதாம்.

## ஷில்பாவுக்கு டும்.... டும்.... டும்.....



உலகில் அதிக சம்பளம் வாங்கும் துறையாக சினிமாத்துறை கருதப்படுகிறது. அந்த வகையில் அதிக சம்பளம் வாங்கும் இந்தி நடிகைகள் வரிசையில் சில்பா ஷெட்டியும் இடம் பெற்றுள்ளார். இவர் குணச்சித்திர வேடம் மற்றும் கவர்ச்சி வேடங்களில் இரசிகர்களை பின்னி எடுத்து வீடுவார். இது மட்டுமல்ல 12 வருடங்களாகத் தொடர்ந்து நடிகையாக இருந்து களைத்து போய்விட்ட ஷில்பா, தற்போது திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலைக்கு வந்துள்ளார். இவர் திருமணத்திற்குப் பின் நடிக்க மாட்டேன் என்றும் முடிவெடுத்துள்ளாராம். இவர் சென்ற பின்பு இவரின் இடத்திற்கு தன் தங்கையான சமிதாவையும் விட்டுச் சென்றுள்ளார். யார் தான் வந்து இவருக்கு சேரப் போகிறார்களோ!

# உரிமை மடல் 17

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...

*அன்பான என் தேசத்து மக்களே!.....*

உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயகத் தேசத்து உறவுகளே!....

உங்களுக்கு வணக்கம்!

எங்கள் தாய் வழியும்... தந்தையர் வழியும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து முடித்த எங்கள் வரலாற்று வாழ்விடத்தில் சுதந்திர ஈழத்தை அமைப்பதற்காக ஆயுதப் புரட்சியில் நாங்கள் அன்று ஈடுபாடு கொண்டது எமது மக்களாகிய உங்களது விருப்பங்களுக்காகவே!

ஆயுதப் புரட்சியைக் கைவிட்டு எமது மனங்களில் எழுச்சி கொண்டிருக்கும் ஆத்ம பலத்தோடு நாங்கள் அரசியலுரிமை கோரி ஜனநாயக அரசியல் களத்தில் இன்று கால் வைத்து நிற்பதும் மக்களாகிய உங்களது விருப்பங்களுக்காகவே!

சிறீலங்கா அரசுடன் துப்பாக்கிக் குழாய்களுக்கு ஊடாகவே நாம் பேச விரும்புகின்றோம் என்று அன்று நாங்கள் களத்தில் நின்றிருந்தவர்கள்!

ஆனாலும், மாறி வரும் உலகத்தின் போக்கும், 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான இலங்கை அரசினது குணாம்ச ரீதியான மாற்றமும், எமது தேசத்தின் யதார்த்த சூழலும் எமது போராட்ட வடிவத்தில் மாற்றத்தை வேண்டி நின்றன!

சப்பாத்துகளுக்கு அளவாகக் கால்களை வெட்டிவிட முடியாது! மக்களாகிய உங்களது நாடி நரம்புகளைப் பிடித்துப் பார்த்து நாங்கள் கண்டுகொண்ட உண்மைகள்தான் எங்களை யுத்தத்தை வெறுக்க வைத்தன!

யாரிடம் இருந்து எமது உரிமைகளை நாங்கள் எதிர்பார்த்தோமோ, அவர்களுடன் பேசியே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய வரலாற்றுக் கடமையில் நாங்கள் அரச தரப்புடன் கைகுலுக்கிக்கொண்டோம்!

இவைகள் குறித்த சில உண்மைகளை நான் உங்களோடு மனம் விட்டுப் பேசுவதற்காகவே மற்றொரு உரிமை மடலில் மக்களாகிய உங்களை நான் சந்தித்துக் கொள்கின்றேன்!

இன்று, வகை தொகையின்றி எமது மக்களைக் கொன்றொழித்த சுனாமிப் பேரலைகள், பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் அரச தரப்போடு புலிகளை மீண்டும் கைகுலுக்க வைத்துள்ளன!

சுனாமி அழிவுகளைப்போல் எமது தேசத்தில் அடிக்கடி நடந்த யுத்த அழிவுகள்தான் அன்று எம்மை அரச தரப்போடு கைகுலுக்க வைத்தன!

அரச தரப்போடு நாங்கள் கைகுலுக்கிக் கொண்டது எமது மக்களாகிய உங்களது உரிமைகளுக்காகவே அன்றி, எமது தனிப்பட்ட சலுகைகளுக்காக அல்ல!

எமது மக்களாகிய உங்களை அழிவுகளிலிருந்து காப்பதற்காகவே அன்றி, எமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக அல்ல!

சமாதானத்தையும், அமைதியையும் அர்த்தமுள்ள அரசியல் தீர்வையும் நோக்கிய ஒரு புதிய பாதையை நோக்கி எம் தேசத்தை வழி நடத்திச் செல்வதற்காகவே நாங்கள் அரச தரப்புடன் கைகுலுக்கிக்கொண்டோம்!

அரச தரப்பிடம் நாங்கள் எமது தாயக நிலத்தைக் கேட்டோம்!.... அரசியலுரிமை கேட்டோம்!.... சுதந்திரம் கேட்டோம்!.... எமது மக்களாகிய உங்களுக்கான சுயநிர்ணய உரிமையினை இன்று வலியுறுத்தி வருகின்றோம்!

போராட்டம் என்பது, உண்பதற்காக.... உண்மைகளை விரும்பியபடி உரைப்பதற்காக.... உரிமையோடு மக்களாகிய நீங்கள் முகமுயர்த்தி நிற்பதற்காக.... நாங்கள் ஒரு தேசிய இனம் என்ற இலக்கினை அடைவதற்காக..... என்று பல பரிமாணங்களையும் கொண்டது!

இதில் ஈ.பி.டி.பி.யினராகிய நாங்கள் இதுவரை சாதித்தவைகள் எவைகள் என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்!

பாலாறும் தேனாறும் இந்த மண்ணிலே பாய்ந்தோட வைப்போம் என்று நாங்கள் மக்களாகிய உங்களுக்கு ஒரு போதும் வாக்குறுதி வழங்கியவர்களல்ல!

அழிவுகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக.... அழிந்து போன எங்கள் தேசத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக.... பல குடியேற்றங்களைக் குடியேற்றினோம். தூயக மண்ணைப் பறிபோகாமல் பாதுகாப்பதற்காக சிதைந்துபோன எங்கள் தேசியத்தின் பண்பாட்டுச் சின்னங்களாகிய கோயில்கள், தேவாலயங்கள் பள்ளிவாசல்களைக் கட்டி எழுப்புவதற்காக.....

பள்ளிச் சிறார்களின் கல்விக்காக..... பல்கலைக்கழக மாணவ மணிகளின் நலன்களுக்காக..... பாழடைந்த வீதிகளைப் புதிதாக அமைப்பதற்காக.... வேலையற்ற இளைஞர் - யுவதிகளின் தேவைகளுக்காக.... தொழில் நுட்பப் பூங்காக்களை உருவாக்கினோம். எமது மக்கள் இலகுவாக உலக அறிவைப் பெறுவதற்காக... சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஒற்றுமைக்காக...... எமது உரிமைகள் குறித்த பெரும்பான்மை தேசிய இனத்தின் ஆதரவுக்காக.... நாங்கள் இதுவரை முடிந்த வரை உழைத்தவர்கள்! இவைகள் ஊர் பார்த்த உண்மைகளாக உங்கள் முன் விரிந்து கிடக்கின்றன!

ஈ.பி.டி.பி.யினராகிய எங்களுக்கு மக்களாகிய நீங்கள் வழங்கிய அரிசியல் பலம் எந்தளவிற்கு உள்ளதோ அந்தளவிற்கு மட்டுமே எங்களால் சாதிக்க முடிந்திருக்கின்றது!

ஆனாலும், நாங்கள் எமது அரசியல் பணி குறித்து இதுவரை திருப்தியடைந்தவர்களாக ஒரு போதும் இருந்ததில்லை! அப்படியான ஒரு எண்ணத்தில் நாங்கள் ஓய்ந்திருந்ததும் இல்லை!

ஈ.பி.டி.பி.யினராகிய நாம் எமது கட்சியினை ஆரம்பித்திருந்தது இருக்கின்ற கட்சிகளோடு பத்தோடு பதினொன்றாக நாமும் இருப்பதற்காக அல்ல!

அல்லது நாங்களும் தலைமை தாங்க வேண்டும் என்ற அதிகாரப் போட்டிக்காகவும் அல்ல!

வாழும் வரை அரசியல்வாதிகளாக மட்டும் இருந்து அறிக்கை விட்டு காலம் தள்ளும் அரசியல் தொழிலுக்காகவும் அல்ல!

கடந்த கால... சமகால அரசியல் தளத்தில் பாரிய இடைவெளியாக விழுந்திருந்த ஒரு வெற்றிடத்தை நாங்கள் கண்டிருந்தோம்!

அந்த வெற்றிடத்திலிருந்து வேர் விட்டு முளைக்கவேண்டிய அவசியத்தை ஒரு மாபெரும் அரசியல் பணியாக வரலாறு எம்மீது சுமத்தியிருந்தது!

அதிகாரப் பலம் கைகளில் இருந்தால் துயரப்படும் மக்களுக்கு துணிந்து பணியாற்ற முடியும்! அதே அதிகாரப் பலம் மட்டும் தான் ஒரு உன்னத இலக்கை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்லவும் பயன்படும்!

அதிகாரங்களை ஆயுத வழியிலும் அடையலாம்!.... ஜனநாயக வழியிலும் அடையலாம்! ஆனால், ஆயுத வழியில் அடையும் அதிகாரம் என்பது எமது தேசத்தில் ஒரு கட்டத்திற்குப் பின்பு அது எமது சொந்த மக்களை அடக்குவதற்கே பயன்படுத்தப்பட்டது!

ஆகவேதான் எமது மக்களாகிய உங்களது வாக்குப் பலத்தில் நாங்கள் ஜனநாயக வழி நின்று அதிகாரங்களைக் கையிலெடுத்துக்கொண்டோம்!

ஜனநாயக வழிநின்று கடந்த காலங்களில் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் கூட தங்களது சுயலாப அரசியலையே நடத்தியிருந்தார்கள்! அது மட்டுமன்றி, இன்று மோசடித் தேர்தல் மூலம் அதிகாரத்திற்கு வந்தவர்களும் மக்களின் விருப்பங்களை மறுப்பவர்களாகவும் மக்களாகிய உங்கள் மீதான வன்முறையின் வழிபாட்டாளர்களாகவும் இருந்து வருகின்றனர்.

ஈ.பி.டி.பி. யினராகிய நாம் ஜனநாயக வழிநின்று அரசியல் அதிகாரங்களை பெற்றுக் கொண்டு மக்களாகிய உங்களைத் தேடி வந்த காலம் என்பது இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றின் ஒரு மறுமலர்ச்சிக் காலம் என்று பல சமூகத் தலைவர்களும் ஈ.பி.டி.பி.யைப் பாராட்டியிருந்தனர்!

யுத்தத்தின் அழிவுகளினால் அவஸ்தைப் பட்டுத் துயரம் தோய்ந்த எமது மக்களாகிய உங்களது முகங்களில் நாங்கள் புன்னகையை மலர வைத்தோம்!

அரை நூற்றாண்டு கால தமிழ்ப்பாராளுமன்ற வரலாற்றில் அரசியல்வாதிகளின் பாதங்களே பட்டிருக்காத கிராமங்கள் தோறும் எங்கள் பாதங்கள் பதிந்தன!

அந்தக் கிராமங்களை நோக்கி எங்கள் கரங்கள் விரிந்தன! எங்கள் கரங்கள், கொடுக்கும் கரங்களேயன்றி மக்களிடமிருந்து எடுக்கும் கரங்களல்ல என்பதையும் நீங்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்டீர்கள்! 1994இல் எம்மை நோக்கி மக்களாகிய உங்களில் பலரிடமிருந்து கோரிக்கைகள் வந்தன!

அமைச்சுப் பதவி ஏற்கவேண்டும் என்றும் அதனூடாக ஈ.பி.டி.பி.யின் சேவை இன்னமும் பல மடங்கு பரவலாக்கப்படவேண்டும் என்றும் எமக்குப் பல சமூகத் தலைவர்களும் சமூகப் பெரியார்களும், எமது வாக்காளர்களும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அப்போது அக்கோரிக்கைகள் குறித்து நாங்கள் எமது கட்சிக்குள் அதை ஒரு விவாதத்திற்குரிய விடயமாக எடுத்திருந்தோம்!

அப்போது நாம் முயற்சி செய்திருந்தால் அரச தரப்பிலிருந்து அமைச்சுப் பதவிக்கான சாதகமான பதில் கிடைத்திருக்கும்! ஆனாலும் கட்சியின் தீர்மானங்களின் அடிப்படையில் நாங்கள் அமைச்சுப் பதவி எதையும் ஏற்பதில்லை என்றே முடிவெடுத்திருந்தோம்!

அன்றைய பத்திரிகைகள் கூட ஈ.பி.டி.பி. அமைச்சுப் பதவி ஏற்குமா? என்று பரப்பாக செய்திகள் வெளியிட்டிருந்தன!

அப்போதைய எமது நிலைப்பாடு சரியாக இருந்திருக்கலாம் அல்லது பிழையாக இருந்திருக்கலாம்! ஆனால் நாங்கள் அமைச்சுப் பதவியினை நிராகரித்திருந்தோம்!

ஆனாலும் தொடர்ந்தும் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாங்கள் எமக்கு கிடைத்திருந்த அரசியல் பலத்தின் மூலம் எமது மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள் குறித்தும் நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வு குறித்தும் வாதாடியும் போராடியும் வந்திருக்கிறோம்!

குதிரை மீது அமர்ந்து மட்டும் மலர்களைப் பார்க்கும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில், நாங்கள் குதிரையை விட்டுக் கீழிறங்கி நின்றும் மலர்களை நோட்டமிடும் மக்கள் நலன் சாரந்தவர்களாக.... மண்ணின் மைந்தர்களாக இன்று வரை செயலாற்றி வருகின்றோம்!

அதன் பின்பு 2001இல்தான் நாங்கள் அமைச்சுப் பதவியினை ஏற்றுக்கொண்டோம்!

எம் இனிய மக்களே! நாங்கள் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டதற்கான காரணங்களில் பிரதானமான ஒன்று - எமது மக்களாகிய உங்களது அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்டது! இன்னொன்று - யுத்தத்தினால் அவஸ்தைப்படுகின்ற மக்களாகிய உங்களது நாளாந்தப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பது!

நாங்கள் எங்களது கொள்கையினைத் திட்டவட்டமாக வரையறுத்துக்கொண்டே அரசியல் களத்தில் நிற்பவர்கள்!

மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி! என்பது ஈ.பி.டி.பி.யின் அரசியல் இலக்கில் பிரதானமான ஒன்றாகும்!

வடக்கு - கிழக்கு எமது தாயகம்! எமது தாயக நிலப்பரப்பில் எமது மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கான ஒரு சுயாட்சி அதிகாரம் எமக்கு வேண்டும்!

அதே வேளை, எமது தாயக மண்ணிற்கான சுயாட்சி அதிகாரங்களை மத்தியில் இருந்து சரியான முறையில் பகிர்ந்து கொள்வதற்காக மத்தியில் பங்கெடுத்துக்கொள்வது என்பது இன்னொன்றாகும்!

உண்மையில் மத்தியில் கூட்டாட்சி என்பதும் மாநிலத்தில் சுயாட்சி என்பதும் ஒன்றை ஒன்று பிரித்துப்பார்க்கப்படாத நிலையில் இரண்டும் சமாந்தரமாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும்!

ஆனால், புலிகள் கொண்டிருக்கும் யுத்தத்தின் மீதான மோகமும்... சில பாராளுமன்ற அரசியல்வாதிகளின் தொலைதூர நோக்கற்ற சுயலாப அரசியலும்..... மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது அரசியல் தீர்விற்கான பிரதான அம்சம் நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது!

இதற்கு நல்லதொரு உதாரணமாக 1995இல் இன்றைய ஜனாதிபதி அவர்கள் அன்று கொண்டுவந்திருந்த அரசியல் சீர்திருத்த யோசனையினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்!

நாங்கள் ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் அந்த அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்டத்திற்கான மாற்று யோசனைகளை 19 பக்கங்களில் எமது மக்களாகிய உங்களது தேசிய அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தோம்!

இறுதியாக அந்தத் தீர்வு நகல் பாராளுமன்ற விவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது புலிகளின் தூண்டுதலினால் அதற்கெதிராகப் பேரினவாதிகளோடு இணைந்து இன்றைய தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களும் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர்.

அதன் பின்புதான் நாங்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தோம்! ஐயர் வரும் வரைக்கும் அமாவாசை காத்திருக்காது! மக்களின் நலன்களுக்கு அப்பால் செயற்படும் அரசியல்வாதிகளின் வருகைக்காக நாம் காத்திருக்க முடியாது! யுத்த வெறி கொண்டு அலையும் புலிகளின் வருகைக்காக எமது முயற்சிகளைப் பின்போட முடியாது! எனவேதான் நாங்கள் சில விடயங்களில் துணிந்து காரியமாற்றத் துணிந்து நின்றோம்!

மாநிலத்தில் சுயாட்சி என்பது காலதாமத மானாலும்..... மத்தியில் கூட்டாட்சி என்ற வகையில் நாங்கள் அமைச்சுப் பதவி எடுத்து மத்தியில் பங்கெடுக்கலாம் எனத் தீர்மானித்துக் கொண்டோம்!

எமது அயலக நட்புறவு நாடான இந்தியாவில், தமிழ் நாட்டு மக்களுக்கென்று தமிழக மாநில அரசு என்ற ஒரு சுயாட்சி அதிகாரம் இருக்கின்றது! தங்களுக்கென ஒரு சுயாட்சி அதிகாரம் கிடைத்திருக்கின்றது என்பதற்காக தமிழக மாநில அரசு சார்ந்தவர்கள் தமது மாநிலத்தோடு மட்டும் நின்று விடவில்லை!

அவர்கள் தங்களுக்குரிய அதிகாரங்களை உரிய முறையில் மத்திய அரசில் இருந்து பகிர்ந்தெடுப்பதற்காக தமிழக மாநில அரசின் சார்பாக இந்திய மத்திய அரசிலும் அமைச்சர்களாகப் பங்கெடுத்திருக்கிறார்கள்!

அது போலவே நாங்களும், எதிர்காலத்தில் அமையவிருக்கும் எமது ஈழ மாநிலத்திற்கான சுயாட்சி அதிகாரங்களைச் சரியான முறையில் பகிர்ந்துகொள்வதற்காகவே இலங்கைத் தீவின் மத்திய அரசில் நாங்கள் ஒரு முன்னேற்பாடாகப் பங்கெடுத்திருக்கின்றோம்!

இதனூடாக நாம் இன்னொரு சாதகமான விடயத்திற்காகவும் வழி திறந்து விட்டிருக்கின்றோம்! அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்றொழிக்கும் புலிகளின் குறுந் தேசிய இனவாத நடவடிக்கைக்கு மத்தியில், நாங்கள் மத்திய அரசில் பங்கெடுத்து வரும் நிகழ்வானது சிங்கள மக்களுக்கும் எமது மக்களாகிய உங்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்தியிருக்கிறது!

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் போராட்டமானது சிங்கள மக்களின் நலன்களுக்கு விரோதமான ஒன்றல்ல என்ற உண்மைத் தன்மையை நாங்கள் எமது அரசியல் வழிமுறைக்கு ஊடாக எடுத்துக்காட்டியிருக்கிறோம்!

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்ற செய்தியை சிங்கள மக்கள் சமூகத்திற்கு எங்களது அரசியல் வழிமுறைக்கு ஊடாக அறிவித்திருக்கின்றோம்!

எமது மக்கள் யுத்தத்தின் மீது மோகம் கொண்டவர்களல்ல என்ற அபிப்பிராயத்தை சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்!

இதே நேரத்தில் நாம் விரும்பும் சமாதானம் என்பது ஒடுக்கு முறையோடு உடன்பட்டுப் போகும் விடயம் அல்ல என்பதையும், உரிமைகளோடு நாம் தலை நிமிர்ந்து வாழும் உயரிய எண்ணங்களே எங்களது நிலைப்பாடு என்பதையும் நாம் நடைமுறையில் உணர்த்தியிருக்கின்றோம்!

அதற்காக நாம் அரச தரப்பிடமும் சர்வதேச சமூகத்திடமும் எமது மக்களாகிய உங்களது அரசியல் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வு யோசனையினையும் திட்டவட்டமாக வரையறுத்துச் சமர்ப்பித்திருக்கிறோம்!

உணவு முதற் கொண்டு உரிமை வரைக்கும்..... மக்களாகிய உங்களது வாழ்வுரிமை முதற்கொண்டு உங்கள் மீதான மனித உரிமை மீறல் வரைக்கும் நாம் முடிந்தளவு அக்கறை எடுத்திருக்கின்றோம்! அதற்காகக் குரல் கொடுத்திருக்கின்றோம்!

செம்மணி படுகொலை தொடக்கம் மிருசுவில் படுகொலை வரைக்கும்....

கிருசாந்தி கொலை தொடக்கம் கோணேஸ்வரி கொலை வரைக்கும்....

சாரதாம்பாள் கொலை தொடக்கம் இன்றைய சகோதரப் படுகொலை வரைக்கும்,....

நாங்களே முன்னின்று குரல் கொடுத்து வந்திருக்கின்றோம்! சர்வதேச மயப்படுத்தியிருக்கின்றோம். இவற்றுக்கூடாக, காணாமல் போதல், படுகொலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

எம் இனிய மக்களே!.... நாங்கள் அரச தரப்போடு உறவுக்குக் கரம் கொடுத்து நிற்கும் அதே வேளையில் மக்களாகிய உங்களது உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றோம்!

ஆம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்! உறவுக்குக் கரம் கொடுப்போம்! இதுவே அரச தரப்போடு நாம் கைகுலுக்கிக்கொண்டதற்கான அடிப்படைக் கோட்பாடு ஆகும்!

அரச தரப்புடனான எமது உறவினை எமது மக்களாகிய உங்களது நலன்களுக்காகவே நாம் பயன்படுத்திக் கொண்டோம்!


எம் இனிய மக்களே!.... இன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென்று பொதுக் கட்டமைப்பு உடன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது!

இந்தப் பொதுக் கட்டமைப்பானது சுயலாப அரசியலுக்காக அன்றி மக்களின் தேவைகளைப் பூரணமாக நிவர்த்தி செய்வதற்கே பயன்படுத்தப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாகக் கோரிக்கை விடுக்கின்றது!

'கும்பி கூழுக்கு அழுகிறது! கொண்டை பூவிற்கு அழுகின்றது!' என்பது போல் பாதிக்கப்பட்ட மக்கள் துயரப்பட்டிருக்க.... இதை ஏற்று நடப்பவர்கள் தங்களது சுயநலன்களுக்காகப் பயன்படுத்துவதென்பது எமது மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகச் செயலாகும்!

சுனாமிப் பேரழிவு என்பது முன்னறிவித்தல் விடுத்துச் சொல்லிக்கொண்டு வந்த ஒன்றல்ல! சுனாமியால் பாதிக்கப்பட்டுக் கூடாரங்களிலும், குடிசைகளிலும் முகாம்களிலும் வாழ்கின்ற மக்களின் மீது மேலும் துயரங்களை ஏற்படுத்த நாம் அனுமதித்து விட முடியாது!

எதிர்வரும் காலம் மாரி காலம்! நிரந்தர வசிப்பிடமின்றித் தொடர்ந்தும் இதே தற்காலிக வாழ்விடங்களில் பாதிக்கப்பட்ட



டக்ளஸ் தேவானந்தா

மக்கள் வசிப்பார்களேயானால் எதிர்வரும் மாரி காலம் இன்னொரு சுனாமி அழிவை ஒத்ததாக எமது மக்களைத் தாக்கிவிடும் அபாயமாக மாறிவிடக் கூடும்!

ஆகவே விரைந்து செயலாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை என்பது இந்த பொதுக் கட்டமைப்பிற்கு இருக்கின்றது!

மக்களின் மகிழ்ச்சியே எங்களது மகிழ்ச்சி! மக்களாகிய உங்களது துயரங்களைப் போக்கி, இடர்களை நீக்கி உரிய முறையில் பொதுக் கட்டமைப்பு என்பது செயற்படுமேயானால் நாம் அது குறித்து மக்களாகிய உங்களைப் போலவே மகிழ்வோம்!

மாறாக, அதிகாரத் துஷ்பிரயோகங்கள்.... அரசியல் லாபங்கள்.... பாரபட்சங்கள்.... மோசடிகள்... இதில் இருக்குமேயானால் ஈ.பி.டி.பி. இது குறித்து மக்களாகிய உங்களின் சார்பாகத் துணிந்து செயலாற்ற ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை!

மக்களுக்காக ஒதுக்கப்பட்ட சுனாமி நிவாரண நிதி என்பது மக்களையே சென்றடைய வேண்டும்! இதைத் தலை நிமிர்ந்து நின்று வலியுறுத்தும் தகுதி ஈ.பி.டி.பி. க்கு என்றும் உண்டு!

ஏனெனில், கடந்த காலங்களிலும் சரி... சம காலத்திலம் சரி..... இது போன்ற விடயத்தில் உண்மையாகவும் நேர்மையாகவும் மக்களாகிய உங்களுக்கு விசுவாசமாகவும் நாம் செயலாற்றி வருகின்றவர்கள்!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே! உங்களுக்காக ஈ.பி.டி.பி. யின் கதவுகள் என்றைக்கும் அகலத் திறந்திருக்கும்!

எந்தவொரு விடயத்திலும் சரி, மக்களாகிய உங்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுமேயானால் எங்களை நாடி நீங்கள் வரலாம்!

ஈ.பி.டி.பி. யின் இருப்பும்...... விருப்பும்.... மக்களாகிய உங்களுக்காகவே!

மக்கள் என்ற கடலில் நாங்கள் சமுத்திரத் துளிகள்!

நீங்கள் எங்களோடு மனந்திறந்து உங்கள் குறைபாடுகளை எடுத்துரைக்கலாம்!

மக்களின் குறைகள் ஒவ்வொன்றும் ஈ.பி.டி.பி. யின் குரலாக ஒலிக்கும்!

மக்களின் உரிமைக் குரலாகவும் ஈ.பி.டி.பி யின் குரல் ஒலிக்கும்!

மீண்டும் மறு மடலில் சந்திப்போம்!

***திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....***

***தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...***

***என்றும் நாம் மக்களுக்காக!....***

*பிரியமுடன்*

*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

நன்றி :- இதய வீணை

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்திரா காந்தி கொலையால் தமிழ் மக்கள் அந்தர நிலையில்




**மீ**னம்பாக்கம் விமான நிலையக் குண்டுவெடிப்பு இடம்பெற்று இரு வாரங்கள் கழிந்த பின்னர், சர்வகட்சி மாநாட்டின் மற்றொரு கூட்டத் தொடர் நடைபெற்றது. ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத் தொடரில் பிரதமர் பிரேமதாசா அதிகாரப் பகிர்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதிகாரப் பகிர்வுக்கான அலகு பற்றி எந்த யோசனையும் முன்வைக்காத பிரேமதாசா, சர்வகட்சி மாநாடு இதுபற்றித் தீர்மானிக்கட்டும் என்றும் கூறியிருந்தார். மாவட்ட சபையா அல்லது மாகாண சபையா அதிகாரப் பகிர்வுக்கான அடித்தளம் என்பதைச் சர்வகட்சி மாநாடு தீர்மானிக்க வேண்டுமென்று அவர் கூறியிருந்தார்.

செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி சர்வகட்சி மாநாடு மீண்டும் கூடியபோது, அதிகாரப் பகிர்வு எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கலந்துரையாடப்பட்டது. மாகாண மட்டத்திலோ அல்லது மாவட்ட மட்டத்திலோ அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படும் யோசனையை அமிர்தலிங்கம் நிராகரித்தார். வடக்கையும் கிழக்கையும் இணைத்து பிராந்திய சபைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டால், அது குறித்து தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறி அங்கீகாரம் பெறமுடியுமென்று அமிர் வலியுறுத்தினார். பிராந்திய சபை கோரிக்கையைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமும் இ.தொ.கா. தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும் வலுவாக ஆதரித்தனர். “பிராந்திய சபைகளை அமைப்பதற்கான கோரிக்கை நிராகரிக்கப் பட்டால் அஹிம்சை வழியில் தமிழ் மக்களின் விடு தலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர - பாரம்பரிய தாயகப் பிரதேசங்களின் ஒருங் கிணைப்பை வலியுறுத்துவதைத் தவிர சமாதானத்துக்கும்

> **1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவரது மெய்ப்பாதுகாவலர்களான சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்திரா காந்தியின் மறைவு இலங்கைத் தமிழர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. ஆனால் இலங்கை அரசுக்கு அவரது மரணம் பெரும் நிம்மதியைத் தந்தது. இந்தியாவின் அழுத்தம் நீங்கிவிட்டதாக இலங்கைத் தலைவர்கள் கருதினர். இந்திரா காந்தியின் மரணம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் பெரிதும் பாதித்தது. இந்திராவின் மரணம் குறித்து அவரது புதல்வரான ராஜீவ் காந்திக்கு அமிர்தலிங்கம் அனுப்பிய அனுதாபச் செய்தியில் “இலங்கைத் தமிழ் மக்கள் தமது அன்னையை இழந்துவிட்டனர்” என்று குறிப்பிட்டிருந்தார்.**

மனித உரிமைகளுக்குமாகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை” என்று அமிர்தலிங்கம் வலியுறுத்தினார்.

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கென ஜி.பார்த்தசாரதி ஆரம்பத்தில் சமர்ப்பித்த, பின்னிணைப்பு ‘சி’ யோசனைகளில் அதிகாரப் பகிர்வுக்கு அடித்தளமாப் பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருந்தார். 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி பின்னிணைப்பு ‘சி’ ஆவணம் முன்வைக்கப்பட்டது. சட்டம், ஒழுங்கு, நீதி நிர்வாகம், சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி, கலாசார விடயங்கள், காணிக் கொள்கை ஆகியவற்றில் சட்டவாக்க அதிகாரங்கள் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று - பின்னிணைப்பு ‘சி’ யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்திய அரசியலமைப்புப் பாணியிலேயே இச் சபைகள் அமைக்கப்படுவதற்கான சிபார்சுகள் செய்யப்பட்டிருந்தது. இன விகிதாசார அடிப்படையில் இலங்கையின் ஆயுதப்படைகளுக்கு ஆளணியினர் திரட்டப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனவே, பிராந்திய சபை யோசனைகள் குறித்து சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்பட்டு இணக்கம் காணப்பட்ட பின்னர், சட்டவாக்க அதிகாரத்துக்காக அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதெனவே திட்டமிடப்பட்டிருந்தது.

(அரசியல் தொடர்)

பார்த்தசாரதி பல்வேறு தமிழீழ ஆயுதக் குழுக் களோடும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் கலந்தாலோசித்த பின்னரே பிராந்திய சபை யோசனைகளை முன் வைத்திருந்தார். தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு அதற்கு மாற்றீடாக ஓர் சுயாட்சி அலகைக் கோருமாறு பார்த்தசாரதி தமிழ் ஆயுதக் குழுக்களைக் கேட்டிருந்தார். இந்தியா தனது பல்வேறு தேசிய இனங்களின் பிரச்சினைகளைக் கையாண்ட பாணியிலேயே இலங்கைப் பிரச்சினையின் தீர்வையும் முன்னெடுப்பது இந்தியாவின் நோக்கமாக இருந்தது. தனித் தமிழ் இராஜ்ஜியம் கோரிப் போராடிவந்த தமிழீழ ஆயுதக் குழுக்கள் 1983ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடான உள்ளக சுயாட்சியை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்குக், கிழக்கை இணைத்து சுயாட்சி அலகொன்றினை நிறுவ வேண்டுமென்பதே திட்டமாக இருந்தது.

தமிழீழக் குழுக்களின் முன்னுரிமை வேலைத் திட்டம் மாற்றப்பட்டமைக்கு இந்தியத் தலையீடே காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

செப்டெம்பர் ஐந்தாம் திகதி கூடிய சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத் தொடரை நவம்பர் 15, 16ஆம் திகதிகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன ஒத்திவைத்தார். அதிகாரப் பகிர்வு பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியின் நகல் யோசனைகளும் தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியின் நகல் யோசனைகளும் நவம்பர் மாதம் 15ஆம் 16ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப் படுமென்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவித்திருந்தார். இரு கமிட்டிகளின் நகல் யோசனைகள் தயாராக இல்லாததால் நவம்பர் 15ஆம் 16ஆம் திகதிய கூட்டத் தொடரை டிசம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் ஜெயவர்த்தன. இக் காலகட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தினார். சட்ட நிபுணர்களுடனும் கலாந்தாலோசித்த ஜெயவர்த்தன, நகல் சட்டவாக்கத்தைத் தயாரிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவரது மெய்ப்பாதுகாவலர்களான சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்திரா காந்தியின் மறைவு இலங்கைத் தமிழர்களுக்குப் பேரிடியாக

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அமைந்தது. ஆனால் இலங்கை அரசுக்கு அவரது மரணம் பெரும் நிம்மதியைத் தந்தது. இந்தியாவின் அழுத்தம் நீங்கிவிட்டதாக இலங்கைத் தலைவர்கள் கருதினர். இந்திரா காந்தியின் மரணம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் பெரிதும் பாதித்தது. இந்திராவின் மரணம் குறித்து அவரது புதல்வரான ராஜிவ் காந்திக்கு அமிர்தலிங்கம் அனுப்பிய அனுதாபச் செய்தியில் “இலங்கைத் தமிழ் மக்கள் தமது அன்னையை இழந்துவிட்டனர்” என்று குறிப்பிட்டிருந்தார். “நிச்சயமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமது எதிர்காலம் குறித்து பெரும் கவலையடைந்துள்ளனர்” என்று அமிர்தலிங்கம் வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். “இனி இந்தக் கிழவன் தானளித்த உறுதிமொழிகளைக் கைவிட்டு நழுவிப் போய் விடுவார்” என்று அமிர்தலிங்கம் தன்னிடம் கூறினாரென்று பத்திரிகையாளர் சபாரத்தினம் கூறினார்.

அமிர்தலிங்கம் தெரிவித்த அதே வகையிலேயே டிசம்பர் 14ஆம் திகதிய சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தன நடந்து கொண்டார். 14ஆம் திகதிய சர்வகட்சிக் கூட்டத்தில் நகல் யோசனைகளைச் சமர்ப்பித்த ஜெயவர்த்தன, டிசம்பர் 21ஆம் திகதிக்கு கூட்டத்தை ஒத்திவைத்தார். சமர்ப்பிக்கப்பட்ட நகல் யோசனைகளில் மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்குமென ஐந்து சட்ட நிர்வாக வரைமுறையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இவற்றின் அடிப்படை அலகாக கிராமோதய சபைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. கிராமங்களிலுள்ள தொண்டர் சபைப் பிரதிநிதிகளை இணைத்து கிராமோதய சபைகளை அமைப்பதே இந்த அடிப்படைத் திட்டமாகும். அடுத்த கட்டமாகப் பிரதேச சபைகள் தேர்ந்தெடுக்கப்படும். நாட்டிலிருந்த 250 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இந்தப் பிரதேச சபைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஒரு பிரதேச சபையென்ற வகையில் இவை அமைக்கப்படும். இதற்கு மேலாக மாவட்ட சபைகள் அமைக்கப்படும்.

இதுவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே அமைக்கப்படும். இவ்வாறு 25 மாவட்டங்களிலும் மாவட்ட சபைகள் அமைக்கப்படும். அப்போது இயங்கிக் கொண்டிருந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் போன்றே இந்த மாவட்ட சபைகள் அமைக்கப்படும். மாவட்ட அதிகாரங்களை இணைத்து மாகாண சபைகள் அமைக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. மாவட்ட அமைச்சர்களையும் மாகாண அமைச்சர்களையும் நியமிப்பதற்கும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. மாநிலங்களின் சபை பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை




**பிரபாகரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் தன்னை ஏதோ ஒன்று தனது ஊருக்கு இழுத்துச் செல்வதாலும் குமார் ஊருக்குச் செல்ல ஆயத்தமாகி ஊருக்கும் சென்று விடுகிறார். ஊரில் ஒரு டீக்கடையில் உட்கார்ந்து டீ குடித்துக் கொண்டிருக்கிறார்.....**

ரெண்டு பொண்ணுங்களைக் கட்டிக்கொடுக்க முடிஞ்சது என்றார் ராமன் நாயர்.

அவ்வளவு நெரம் காத்திருப்பது வீண் என்று தோன்றியது குமாருக்கு.

ஒண்ணு பண்றேன் ராமன் நாயரே! நான் இப்படியே மெதுவா போறேன் நம்ம பழைய பாதை அப்படியே தானே இருக்கு?

அதுக்கென்ன? அப்படியேதான் கிடக்கு கொஞ்ச தூரம் நடக்கிறக்குள்ள யாராவது துணைக்குக் கிடைக்காமலா போயிடுவாங்க....என்றார் ராமன் நாயர்.

குமார் எவ்வளவோ வற்புறுத்திக் கொடுத்தும் சாப்பிட்டதற்கான பணத்தை வாங்கிக் கொள்ளவில்லை நாயர். மறுநாள் வந்து பார்ப்பதாகச் சொல்லி விடை பெற்றார் குமார்.

கிராமத்தை பார்த்து நடக்கத் தொடங்கினார். சற்று தொலைவு போனதும், இருட்டுக்குக் கனமேறியது போலிருந்தது. தன்னுடைய பையைத் திறந்து , டார்ச் லைட்டை எடுத்து ‘ஆன்’ செய்தார். அந்த வெளிச்சத்தில் முன்புறம் கிடந்த ஒற்றையடிப்பாதை ஒரு பெரிய பாம்பைப் போல வளைந்து வளைந்து போவது தெரிந்தது.

பாதையின் இருபுறங்களிலும் மரங்கள் வளர்ந்து பந்தல் போல் மேற்புறம் இணைந்திருந்தன.

நேராகப் பிரபாகரனின் வீட்டுக்குப் போகவேண்டும் என்று நினைத்துக் கொண்டார். ஆனால், பிரபாகரனின் வீடு குத்துமதிப்பாகத்தான் நினைவிலிருந்தது.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு கிராமத்துக்குள் நுழைவதால், புதிது புதிதாக முளைத்திருந்த துணைப் பாதைகள் குமாருக்குப் பிரச்சினையாக இருந்தன.

“பிரபாகரனோட வீட்டைத் தேடிப் போறீங்க போல இருக்கே!” பின் புறத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார் குமார். அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை.

‘அவள்’ குமாரின் பின்னால் சிரித்த முகத்தோடு நின்று

**எழுதுவது**
**சிவன்**

கொண்டிருந்தாள்.

“நீ... நீ... எப்.... எப்படி இங்க வந்து சேர்ந்தே?”

குமார் அதிர்ச்சியோடு கேட்டார்.


“நீங்க இங்க வருவீங்கன்னு தெரியுமே! அதனால் தான் முன்கூட்டியே இங்க வந்து காத்திருக்கிறேன்.”

குமாரினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. லாபரெட்டரியின் ஸ்டோர் ரூமுக்குள், அதுவும் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த எலும்புக்கூடு இளம் பெண்ணாக வடிவெடுத்து, தற்போது தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறது. அதுவும் தன்னுடைய கிராமத்தில்! நகரிலிருந்து எத்தனையோ கிலோ மீட்டர் தூரத்தில்! இது எப்படிச் சாத்தியம்.....?

“பிரபாகரனை உனக்குத் தெரியுமா என்ன?”

“நல்லாவே தெரியும். நடங்க! பேசிட்டே போலாம். அவர் மிலிட்டரிலேருந்து வந்திருக்கிறவர்தானே? தெரியும்.”

“அவள், குமாரின் பின்னால் நடந்து வந்தாள். தரையில் உதிர்ந்திருந்த உலர்ந்த இலைச் சருகுகளின் மீது குமாரின் கால்பட்டு நெரிபடும் சத்தம்தான் கேட்டது. அவளுடைய காலடியோசை கேட்கவில்லை.



“இதோ இந்தப் பக்கம்..... வலது புறமாய்ப் போகணும்.”

அவளது குரல் கேட்டது.

அவள் குறிப்பிட்ட இடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்து சென்றது.

“இந்த இடத்துல இருந்த ஆலமரம், புயல்ல விழுந்துடுச்சு. ‘தேவியோட கோபம்தான் காரணம்’னு சொல்லிட்டாங்க” என்றாள் அவள்.

“சௌபர்ணிகா....” என்று ஆரம்பித்தார் குமார்.

“சௌபர்ணிகாவோட இன்னொரு பெயர், ‘ஸ்ரீதேவிக் குட்டி...’ அப்படி சொன்னாத்தான் பிரபாகரனுக்குத் தெரியும்” என்றாள் அந்தப் பெண்.

இருவரும் பிரபாகரனின் வீட்டை அடைந்தனர்.

தொடர்ந்து இரண்டு தடவை குரல் கொடுத்த பிறகுதான் பிரபாகரன் எதிர்க்குரல் கொடுத்தான். உடனே கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

“யாரு.... குமாரா? நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரையில் காத்திருந்திட்டு, சரி இன்னைக்கு வரமாட்டேன்னு நினைச்சு திரும்பி வந்தேன்” என்றான் பிரபாகரன்.

குமார் பின்புறம் திரும்பிப் பார்த்தார். அங்கு அவள் இல்லை. வீட்டுக்குள் நுழைந்தார்.

“சாப்பிடறதுக்கு ஏதாவது தயார் பண்ணட்டுமா?”

“இல்லை! வேணாம்; ராமன் நாயரோட கடையில ஒரு பிடிபிடிச்சுட்டேன்.”

நண்பர்கள் இருவரும் ஒரே அறையில் படுத்துக் கொண்டார்கள்.

“ஸ்ரீதேவி என்கிற பெண்ணைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா பிரபாகரா?” குமார் பேச்சைத் துவங்கினார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் பிரபாகரனின் இதயத் துடிப்பு சட்டென்று அதிகரித்தது.

காரணமற்ற ஒருவித பயம் அவனை வளைத்துக் கொண்டது. குமாரிடம் இப்படியொரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

“எல்லாத்தையும் நாளைக்குப் பேசிக்கலாம்; இப்ப தூங்கு” என்றான் பிரபாகரன்.

குமார் பிடிகொடுக்காமல், “உனக்கு சுவாரஸ்யமான ஒரு விஷயம் சொல்லட்டுமா?

(வாசனை வீசும்....)

# வேண்டும் ஒரு டொல்பின் வாழ்க்கை

"வாகனங்கள் போகும் பாதையை ஆக்கிரமித்துக் கொண்டு கடை விரிக்கும் வியாபாரிகள்... பேர்த் சர்டிபிக்கேட் கொடுப்பதற்குக்கூட லஞ்சம் கேட்கும் அதிகாரிகள்... துஷ்பிரயோகம் செய்யும் பொலிஸார்... மக்கள் நலன்கள் பற்றிக் கவலையேபடாமல் ஊழலிலும் லஞ்ச லாவண்யங்களிலும் நேரத்தைத் செலவிடும் அரசியல்வாதிகள்... இப்படி எங்கு திரும்பினாலும் பொதுஜன விரோதிகளாகவே இருக்கிறார்களே... இவர்களை நினைத்தாலே, என் மூளையில் கோபத்தைத் தூண்டும் அமிலங்கள் சுரக்கின்றன! கை, கால்கள் நடுங்குகின்றன! சில சமயங்களில் நான் டென்ஷன் ஆகிறேன்... சுவாமி, இவர்களை எல்லாம் திருத்தவே முடியாதா?" இப்படி நரம்புகள் புடைக்க ரத்தக்கொதிப்பு அதிகமாகி, என்னிடம் ஆதங்கப்படுபவர்கள் நிறையப் பேர்! இதனால் அப்செட் ஆகி, சோர்ந்து மூலையில் உட்கார்ந்து விடுபவர்களும் உண்டு!

இவர்களுடைய ஆதங்கம் நியாயமானதுதான்! ஆனால், 'அக்கிரமம் செய்பவர்களைக் கண்டால் நரம்பு புடைக்கிறது; மனம் தளர்கிறது' என்று சொல்வதுதான் சரியில்லை! நமக்கு நரம்பு புடைத்து டென்ஷனானால் அக்கிரமம் செய்பவர்களைத் திருத்த, அது எந்த வகையில் உதவியாக இருக்கப் போகிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்!

மார்க்கெட்டிங் துறையில் குரு என்று கருதப்படும் 'ஜிக் ஜிப்லர்' பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். நாடு நாடாகப் பறந்து மார்க்கெட்டிங் பற்றி சர்வதேசக் கம்பெனிகளின் நிர்வாகிகளுக்குப் பயிற்சி கொடுப்பது தான் இவரின் தொழில்! மிக மிக பிஸியான இவர், ஒரு முறை வெளிநாடு செல்வதற்காக விமான நிலையம் போனார்.

'விமானம் நான்கு மணி நேரம் தாமதமாகப் புறப்படும்' என்று க்ளோஸ் சர்க்யூட் டி.வி. அறிவிக்கிறது! இதைப் பார்த்ததும் ஜிக் ஜிப்லர் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா...? "ஃபன்டாஸ்டிக்!" இப்படிச் சொல்லவிட்டு, அவர் தனது ப்ரீப்கேஸைத் திறந்து சில காகிதங்களை எடுத்து, அடுத்த செமினாருக்குத் தனது உரையைத் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டார்! நான்கு மணி நேரம் போனதே தெரியவில்லை... 'விமானம் இன்னும் ஒரு மணி நேரம் தாமதமாகக் கிளம்பும், என்ற செய்தி வருகிறது. ஜிக் ஜிப்லர் "வெரிகுட்!" என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு மீண்டும் தன் வேலையில் மூழ்குகிறார்! இதைப் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சக பயணிகளுக்கு ஒரே குழப்பம் அவர்கள் ஜிக் ஜிப்லரை நெருங்கி "உண்மையைச் சொல்லுங்கள்... விமானம் புறப்படத் தாமதம் ஆவதில் உங்களுக்கு எரிச்சல் வரவில்லையா?" எனக் கேட்கின்றனர்.



அதற்கு ஜிக் ஜிப்லர் "எரிச்சல் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் 'ஃபன்டாஸ்டிக்', 'வெரிகுட்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்...." என்றாராம்.

ஊழல், லஞ்சம்.... போன்று நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத விஷயங்களை நாம் எப்படி எதிர்கொள்வது....?

லஞ்சம் மற்றும் ஊழல் அற்ற சமூகம் இருக்கவேண்டும் என்று நினைப்பது ஐடியல். அதாவது ஆதர்ஷ நிலை! ஆனால், நிதர்சனம் என்ன...? சமூகத்தில் ஊழலும் லஞ்சமும்தான் மலிந்து போய்விட்டன!

ஆதர்ஷ நிலையில் நின்று கொண்டு நிதர்சன நிலையைப் பார்த்தால், மனதில் போராட்டம் மட்டுமே மிஞ்சும்! போராட்டம் வந்தால் டென்ஷன். நரம்புகள் புடைக்கும்! இது முதல் வகை அணுகுமுறை. இன்னொரு வகையான அணுகுமுறையும் இருக்கிறது!

"ஊழலையாவது ஒழிப்பதாவது! அதெல்லாம் நடக்காத காரியம்..." என்று சொல்லி, நிதர்சனத்தை அப்படியே ஏற்றுக்கொள்வது! இந்த இரண்டு விதமான அணுகுமுறைகளுமே தவறு. ஊழலே கூடாது என்ற ஆதர்ஷ நிலையில் நின்றிருந்தாலும் நிதர்சனம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு, ஆதர்ஷ நிலையை - அதாவது, ஊழலே இல்லாத சமுதாயத்தை உருவாக்க முழு ஈடுபாட்டோடும் உறுதியோடும் உழைக்கவேண்டும்.

இந்த அணுகுமுறை மட்டுமே உங்களுக்கும்; சமுதாயத்துக்கும் பயன்தரும்.

இவ்வளவு அழுத்தம் கொடுத்து, இத்தனை நீளமாக நான் ஏன் இதைப் பேசுகிறேன் தெரியுமா?

பெரிய ஊழல் என்றில்லை... அலுவலகத்திலோ, வீட்டிலோ யாராவது ஒரு சின்னத் தவறைச் செய்துவிட்டால்கூடச் சிலருக்கு ரத்தம் கொதிக்கும்... உணர்ச்சி பொங்கும்! வெறும் ரத்தமும் உணர்ச்சியும் கொப்பளித்தால், மைக் டைசன் மாதிரியான மட்டமான செயலை மட்டுமே செய்ய முடியும்.

முடிவு...? மைக் டைசன் மாதிரி நாம் ஆட்டத்தைவிட்டே நீக்கப்பட்டு விடுவோம்!

குத்துச்சண்டை விளையாட்டிலேயே உணர்ச்சிகளை அடக்கி ஆள்வது அவசியம் என்றால், மற்ற துறைகளில் இருக்கும் நமக்கெல்லாம் இது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று யோசித்துப் பாருங்கள்!

"சுவாமி இது என்ன நியாயம்? அக்கிரமம் செய்பவர்கள் அரசியலிலும் ரௌடிக் கும்பலிலும் மட்டும் இருந்தால்கூடப் பரவாயில்லை... நம்மைச் சுற்றி நாம் வேலை செய்யும் அலுவலகத்தில், பொலிஸ் நிலையத்தில், அரசு அலுவலகங்களில், எதிர்வீட்டில், பக்கத்து வீட்டில், ஏன் சில சமயம் நமது வீட்டுக்குள்ளேயேகூட... அநியாயக்காரர்கள் இருக்கிறார்களே! இவர்களை எப்படிச் சமாளிப்பது?" இப்படிச் சிலர் கேட்கக்கூடும்.

இவர்களுக்கு எப்படி விளக்கலாம் என்று யோசித்தபோது, இந்தக் கருத்து தோன்றியது....

கடலில் இருக்கும் மீன்களை வகைகளாகப் பிரித்தால்... அதில் முதல் வகை, சின்னச் சின்ன மீன்கள்! இவை கடலில் இருக்கும் அடாவடி மீன்களை எதிர்க்க முடியாதவை! காலப்போக்கில் இவை அடாவடி மீன்களுக்கு இரையாகிவிடும். இரண்டாவது வகை சுறா போன்ற அடாவடி மீன்கள்... மற்ற மீன்களை விழுங்கி ஏப்பம்விட்டே வயிறு வளர்க்கும் ரகம் இவை! மூன்றாவது வகை டொல்பின் மாதிரியான மீன்கள்!

சுறா மீன்கள் இருக்கும் அதே கடலில் நீந்தினாலும் இவை சின்ன மீன்கள் மாதிரி சுறாவுக்கு இரையாகிவிடாது. அதே சமயம், சுறா மாதிரி அடாவடித்தனமும் செய்யாது! இவை சுறா மீன்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வாழ்கையை ஜாலியாக வாழும்!

நாமும் டொல்பின் மாதிரி வாழ்வதற்குப் பழகிக்கொள்ளலாமே!

நன்றி : சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 126க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஆர். டி. யொஷாந்திரன், 17/1 சிங்க வீதி, மாபோல, வத்தளை.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. ஏ.எச்.எம். ரமழான், 160, காமினிபுர, ஹட்டன்.
2. எஸ் ஜீவா, 54-6/3, சென். லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை.
3. எம். பிறேமலதா, கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறை.
4. எம்.ஜே. பெர்னாண்டோ, 30/3, சென். லூசியாஸ் ஒழுங்கை, கொழும்பு 13.
5. யூ. செல்லத்தம்பி, 20, கோவில் வீதி, கல்முனை - 03.
6. எஸ். ஷாமிலி, 34, லவண்டர் லேன், திருகோணமலை.
7. வி. ராமகிருஷ்ணன் அம்பிகா, சென். ஜேம்ஸ் எஸ்டேட், ஹாலி - எல.
8. ஏ.ஆர்.எம். இர்ஷாத், 383/1, புதிய தெரு, வெலிகாமம்.
9. திருமதி. பாலசரஸ்வதி தங்கவேலு, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு - 5.
10. ஜெயசுதா மெய்யநாதன், சரஸ்வதி தமிழ் வித்தியாலயம், வோல்டிமார், உடப்புஸ்ஸலாவ.

## குறுக்கெழுத்துப் போட்டி 128

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | |
| 6 | 7 | 8 | 9 | |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | | | |
| 26 | 27 | 28 | 29 | 30 |

### இடமிருந்து வலம்

1. நாட்டிய தேவதை (குழம்பியுள்ளது.)
6. கொடை வள்ளல் (குழம்பியுள்ளது).
12. உறக்கம் என்று சொல்லலாம் (குழம்பியுள்ளது).
17. உறவு என்று சொல்லலாம் (குழம்பியுள்ளது)
27. சிவராத்திரி வரலாற்றுடன் தொடர்புடைய மலர் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. சரத்குமார் நடித்து வெளியான திரைப்படம்.
3. அடையாளம் என்றும் சொல்லலாம்.
4. பொன் என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).
12. அழகு என்றும் சொல்லலாம்.
26. தமிழில் வரும் முதல் மாதம்

## குறுக்கெழுத்துப் போட்டி 126 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஙீ | 2 யா | | 3 ச | 4 தி |
| 5 ல | | 6 ய | 7 யை | 8 ன் |
| 9 ம் | | 10 மை | | 11 ற |
| | 12 தி | 13 ல் | 14 லை | |
| 15 ணை | 16 க | | | 17 |
| 18 பி | 19 த் | 20 த | 21 னை | |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 12.07.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-128
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இருளோ நீ இனிமேல் விலகாயோ?

-நீ.பி.அருளானந்தம், கல்கிசை.

காலையில் நித்திரைவிட்டு எழும்பியவுடன், முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி குப்பை கொட்டிச் சுத்தம் செய்து வைப்பதுதான் மாமியார் வீட்டில் அவளுக்கு முதல் வேலை. அடுத்ததாக உள்ளது சமையல் வேலைதான்! சமையல் கட்டுப் பக்கமாக நின்று கொண்டு அதையெல்லாம் ஒவ்வொன்றாகச் செய்துகொண்டிருக்கும் போது, இன்னும் அந்த வீட்டிலே உள்ள வேறு பல வேலைகளையும் உடல் நோவு பாராது அவள் தன் தலையிலே போட்டுக் கொண்டு செய்து முடிக்க வேண்டியதாகத் தான் இருக்கும். இப்படியாக அவள் புகுந்த இந்த வீட்டிலே, காலையிலிருந்து மாலை வரையிலும் கழுத்தைப் பிடிக்கும் அளவுக்கு வேலைகள் இருந்தன.

இப்படியெல்லாம் இந்த வீட்டிலே மாடாகக் கிடந்து கஷ்டப்பட்டு நாள் முழுக்க உழைத்தாலும் மாமியின் நச்சரிப்பு எப்பொழுதும் அங்கு அவளுக்கு இருந்து கொண்டுதான் இருக்கும்.

அவரிடமிருந்து வரும் அந்தப் பேச்சுக்களெல்லாம் சுமாரானதொன்றா....?

முள்முள்ளாகக் குத்துகிற கரம்பை!

அந்தப் பேச்சையெல்லாம் மௌனமாய் இருந்து செவியில் வாங்கிக்கொண்டு, கட்டாரி எறும்பு கடித்தாற்போல 'விண், விண்'ணென்று நெஞ்சிலெழும் வலியோடு தான் அவள் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருப்பாள்.

"நாளைக்கு இட்டலி..."என்று 'மாமி' கட்டளை கொடுத்த உடனே, உளுந்தை காலையில் ஊற வைத்து பிற்பகலில் அதை ஆட்டுரலில் ஆட்டி, மாவாய் அரைத்துப் பானையிலே அவள் போட்டு வைத்தாள்.

அடுத்தநாட் காலை அடுப்பருகே நின்று கொண்டு, இட்டலித் தட்டின் குழிகளிலிருந்து அதை அவள் சூட்டுடன் எடுக்கும் பொழுது, அங்கே குசினி வாசலில் வந்து அவளது மாமியார் கதவோடு கதவாய் நின்றார். இந்தக் கதை பிறகு அவர் வாயிலிருந்தும் வெளிவந்தது.

"நேற்றைக்கு நீ சுட்டாய் ஒரு இட்டலி....! அது ஒன்றும் நன்றாய் அவியவேயில்லை....! அது சாப்பிடவும் ஒன்றும் ருசியாகவேயில்லை...! உளுந்துலப் பச்சை மணம் அதிரகப்பெண்டு அடிச்சுது...! அது இட்டலியா இல்லாட்டிக் கல்லா....?

அந்த விஷமுள் 'நறுக், நறுக்' கென்று குத்துகிறது அவளுக்கு!

இட்டலியின் சூடுபட்ட கையை உடனே தண்ணீரில் நனைத்தால் விரலின் சூடு தனிந்து ஆறிவிடுகிறது. ஆனாலும் மாமியின் நாச்சூடு படவும், இட்டலிச் சட்டியில் கொதி நிலையில் இருக்கும் தண்ணீர் போல, மனசு அவளுக்கு நிலை கொள்ளாமல் தவிக்கிறது.

இட்டலியின் மிருதுச் சூட்டை நுனிவிரல் நுகர்கிற அளவிலே கொண்டுபோய், மேசை மீது வைத்து மாமனாருக்கும், மாமிக்கும் சாப்பிடக் கொடுத்தும் இப்படியெல்லாம் ஏச்சும் பேச்சும் கேட்க வேண்டியதாய் வருகிறதே....?

இதன்மூலமாக அவளுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் எப்பொழுதும் ஆகாயத்தில் வல்லூறைவக் கண்ட புறாப்போலத்தான், அவளது மாமியார் குசினிப் பக்கமாய் வருகிற தருணங்களில் இவளின் இதயம் 'பட, பட' வென அடித்துக் கொள்கிறது. சில பல வேலைகளை இப்படியாகத்தான் அவள் செய்ய வேண்டுமென்று மாமியார் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவருடைய கண்களிலே ஒரு 'தீ' எரிந்துகொண்டே இருக்கும். ஆனால், உதடுகளில் ஒரு சிரிப்பு... அதற்கு மாறாகப் படமெடுத்து ஆடுகிறதே! அதற்கான காரணம்தான் என்ன....?

அவளுக்கு இதெல்லாம் எளிதில் வீளங்கிக்கொள்ளாத ஒன்றாகத்தான், இற்றை நாள் வரையிலும் இருந்து கொண்டே இருக்கின்றது.

அவள் 'பம்பைமடு' என்கிற செழித்த கிராமத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள் - யாழ் குடா நாட்டிலுள்ள புத்தூர் கிராமத்தில், இவர்களது குடும்பத்தில் வந்து வாழ்க்கைப்பட்டதற்கான காரணம்...? அதையெல்லாம் சில நேரங்களில் மட்டுமல்ல, பலவாறான பொழுதுகளிலும், திரும்பத் திரும்ப அவள் நினைத்துப் பார்க்கத்தான் செய்கிறாள்.

முக்கியமாக, சவப்பெட்டிக்குள் தன் அப்பாவை வைத்து ஆணி அறைந்த அந்த சம்மட்டி அடியை, அவளால் இற்றை வரையிலும் மறக்கவே முடியாதிருக்கிறது.

அப்பா இறந்த பொழுது சுமாராக உள்ளதொரு சவப்பெட்டியைக்கூட வாங்க முடியாதபடி, அவளுடைய குடும்பத்துக்கு வந்துவிட்ட ஏழ்மைதான் எவ்வளவு கொடுமை!


'ஒரு நல்ல கமக்காரனுக்கு இப்படியெல்லாம் கஷ்டங்கள் வரவேண்டுமா....?'

இப்படித்தான் சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டு, ஒரு மாத காலத்துக்கு அந்த ஊரில் உள்ளவர்களெல்லாம் அவர்களுக்கு, செத்த வீடு நடந்துமுடிந்த பிறகு உணவு சமைத்துக்கொண்டு வந்து கொடுத்து உபசரித்தார்கள்.

'அந்த ஊரில் உள்ளவர்கள் மனசார நல்ல சனங்கள். கசவாரம் இல்லாததுகள்.'

இத்தனைக்கும் அவளுடைய அப்பாவுக்கு, மரபணு பிரகாரம் ஆயுசு கெட்டிதான். அவரின் வழியில் ஆயிரம் பிறை பார்த்தவர்கள், இன்னும் இரண்டு மூன்று பேர்கள் 'பம்பைமடு' கிராமத்தில் பல்கெட்டியாகவும் கூட இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது, இந்த நடு வயதில் ஏன் அவருக்கு வந்தது இந்தத் திடீர்ச் சாவு?

ஊருக்கு உதவுவதற்கும் அவரைக் கேட்டுத்தான்! அவருக்கு பனையோலை போல விரிந்த மனசு. அந்த முறை தோட்டம் செய்து



நொடித்துப் போய்விட்ட சிலருக்கு, கேட்ட பணத்தைக் கொடுத்து உதவுவதற்கும் அவர் பின்வாங்கவில்லை,

அந்தவிதமாக அவர்களுக்கு நடந்த அவ்வருடம், இப்படியாக மகிழ்ச்சியினூடே கழிந்துபோய், அடுத்த புதுவருடம் பிறக்க....

அவருக்கென்றிருந்த எல்லா நிலத்திலேயும் பயிர் விளைவித்தெடுக்கவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். எல்லாக் கமக்காரனுக்கும் வருகின்ற ஞாயமானதொரு ஆசைதானே இது! அது அவருக்கும் வந்ததில் ஏதும் வியப்பில்லையே! வியர்வை சிந்தி உழைக்க ஆசைப்படுவதில் ஏதும் தவறு உண்டா? அது பேராசையென்றும் சொல்வதற்கில்லையே? உணவை விளைவித்தால் உயிர்கள் வாழுமே! அது நன்மைதானே!

அவ்வருடம் பயிர்செய்யும் காலம் வர; நகைகளை அடகு வைத்ததுடன், கையில் உள்ள பணத்தையெல்லாம் வயலிலும் மரக்கறித் தோட்டத்திலும் போட்டு விட்டு, அவர் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருடைய செல்ல மகளுக்கு, இந்தக் கஷ்டங்களெல்லாம் என்னதான் விளங்கும்! அப்படியெல்லாம் கஷ்டத்தை உணர்ந்து அவள் வளர்ந்திருந்தால்தானே அது எல்லாம் தெரியும்!

அவள் தன் ஒரேயொரு குட்டித் தம்பியுடன் சேர்ந்து கொண்டு, அந்தத் தோட்டத்துப் பக்கம் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்தாள். அந்த இடத்திலேதான் அவளது பொழுது கரையும். மனசு நிறையும், ததும்பி வழியும். ஆகாயத்தில் ஜிவ்வென்று பறக்கும்.

வெங்காயத் தோட்டத்திலே போய் நின்றுகொண்டு, பனையோலைகளின் இசை நயமுள்ள ஓசையை அவள் இரசிப்பாள். அவளுடைய அப்பா நொங்கு வெட்ட அங்கே ஆள் பிடித்து விடுவார். பிறகு கேட்கவா வேண்டும். இளம் நொங்கை பெருவிரலால் துருவிவிட்டுக் குடித்து, ஒரு குலைக் காய்களை அப்படியே தம்பியும் அவளும் ஒருகை பார்த்து விடுவார்கள்.

அது அவ்வாறிருக்க.....

வீட்டிலிருந்து கதைப் புத்தகங்கள் படித்தபோது இருந்த சுகம், அவளுக்கு எங்கேனும் இனி வருமா?

ஆனால் அவளுடைய அப்பா, அன்று இரவு சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவாறு மனம் வருந்தியதாய்ச் சில வார்த்தைகளை அவளுடைய அம்மாவுக்குக் கூறிக்கொண்டிருந்த பொழுதுதான், தன் வீட்டுக் கஷ்டம் பற்றி அவளுக்கும் பெரிதாய்த் தெரிய வந்தது.

அவர் சொன்னார் :

"மழையில்ல கிணத்தில தண்ணீரில்ல.... பாயிறதும் காயிறதுமாயிருந்தா பயிர் என்னத்துக்காகும்!"

அப்பொழுதுதான் இவ்வளவு காலம் அவள் இருந்த நிலையில் இருந்து, விலுக்கென்று விழித்துக் கொண்டாள். அவள் மனதை துக்கம் அள்ளிப் பிடுங்கிற்று. ஒரு உருவில்லாத சஞ்சலம் அவள் மனதை வாட்டிற்று.

அந்த வேளையில் தோட்டத்துப் பக்கம் அலறிக்கொண்டு ஒரு ராக்குருவி பறக்கிறது. எங்கோ ஒரு நாய் நீட்டி ஆலாபனை செய்யும் ஊளை வேறு கேட்டது அவளுக்கு. அவள் அதையெல்லாம் கேட்டபடி இருந்துவிட்டு, எழுந்து படுக்கை அறைக்குப் போனாள். அங்கே இருள் சூழ்ந்த கல்லறைபோல் அந்தப் படுக்கைஅறை அவளுக்குத் தெரிந்தது. இருட்டுக்குள் பறக்கின்ற குருட்டு ஈயாக முட்டி மோதிக்கொண்டு போய், ஒரு மூலையில் பாயை விரித்துப் போட்டுவிட்டு அவள் படுத்தாள்.

மழையைக் காணோமே என்று அவரும் ஒவ்வொரு நாளும் வயல்வெளியிலே போய் நின்றுகொண்டு, வானத்தைப் பார்த்துப் பார்த்து மனம் வருந்தினார். அவர் ஏங்கி விட்ட பெருமூச்சுக்கள், அவரது மார்புப் பிரதேசத்தையே உலுக்கியது. சில நாட்களுக்குள்ளாக அவரது முகத்தை தாடியும் சிகையும் மறைத்து வேறு ஆளாகக் காட்டியது.

வெயில் எரித்துக் கொண்டு வர, அவருடைய தோட்டமும் கருகிக் கொண்டே வந்தது. கறையான்கள் அங்கே புற்றெடுத்தன. அதனால் பாவல்களும், புடோல்களும் பந்தல்களோடு 'பொல, பொல' வெனப் பொடிந்தன.

நெற்பயிர்கள் பாசனமேதுமற்று சருவோடிப்போக, வெட்டுக்கிளிகைகளை உரசிக்கொள்வது போல் தன் கைகளை உரசியபடி யோசித்திருந்து விட்டு - ஒரு கிடை மாடுகளை விரட்டிக் கொண்டுவந்து வேலி பிரித்து அவைகளை அவர் வயலுக்குள்ளே விட்டார்.

ஈப்பூச்சி விழுந்த அந்த வயல்களிலே, மாடுகள் புகுந்து கொத்துக் கொத்தாய் மேய்ந்தன.

அதைப் பார்த்து மனம் குமுறி அழுதபடி வீட்டுக்கு வந்தவர்தான்..... அதோடு நெஞ்சுக் குத்து வந்து சட்டடியாகப் படுத்துவிட்டார். இரவு முழுக்கவும் கொக்குக் கொக்கென்று இருமிக் கொண்டு, அவர் மிகவும் அவஸ்தைப்பட்டார். அடுத்த நாள் காலையில் கூட செம்மண்போல் கரடு முரடாக அவரது முகம் மாறிவிட்டது. உடல் குளிர்ந்து கொண்டுவர, போர்வையை இழுத்து தலைமுதல் கால்வரை போர்த்திக கொண்டு படுத்தவர்தான் - அதன் பிறகு உடலசைவு இல்லாமல் அப்படியே விறைத்ததாய்விட்டார். அவர் படுக்கையிலேயே அப்படியே சீவனை விட்டுவிட்டார் என்று பிறகுதான் எல்லோருக்கும் தெரியவந்தது.

அப்பா செத்த கவலை அவளை முற்றிலும் விழுங்கிவிட்டது. கண்களை அகல விரித்தபடி, இறந்து போனவளைப் போன்ற கண்களால் தன் அப்பாவினது உடலைப் பார்த்துக்கொண்டு அவள் நின்றாள். அந்த நேரம் வாழ்க்கைச் சகடமானது; பத்து நிமிடத்துக்கு அசைவற்றுவிட்டது போலத் தோன்றியது அவளுக்கு.

ஒருபக்கம் இருந்து அவளது தம்பியும் அழுதுகொண்டிருந்தான். மறுபக்கத்தில் இருந்து அவளது அம்மாவும் சோகத்தில் பொதும்பிப்போய் இருந்தாள். ஒப்பாரி வைப்பவர்கள் முறை கட்டிக்கட்டி அழுதுகொண்டிருந்தார்கள். ஒருபுறம் பறைமேளமும், மற்றொருபுறம் சங்கின் ஓலமும், சேகண்டின் நாதமும் அதிர, அவளது அப்பாவின் உடலை மயானத்துக்கு எடுத்துச் சென்றார்கள்.

அவளது அப்பா இறந்த பிறகு தானிய அறை சூனியமாகி விட்டது. வாழ்க்கை எனும் வண்டி அவர்களுக்கு நொண்டி நொண்டி ஓடத்தொடங்கி விட்டது. வீடே வறுமையில் கிடந்து உழன்றது...அப்பொழுதுதான் இவளுக்கு இந்தச் சம்பந்தமே பேசிவந்தது.

இங்கிலண்டில் மாப்பிள்ளையென்றார்கள்...!

சீதனமென்று சதக்காசும் வேண்டாமென்றார்கள்....!

குழந்தை வரையும் சித்திரம் மாதிரி பிள்ளையில எளியதொரு கவர்ச்சியுமிருக்கு.... மாதுளம்பழ நிறம்! மாதுளம் கோதுவாளிப்பு! எல்லாம் அளவெடுத்து வைச்சது மாதிரி அத்தனை லட்சணம்..... என்று புகழ்ந்ததோடு கல்யாணத்தையும் முற்றாக்கி, தின்பன குடிப்பனவையும் செய்து கொண்டார்கள்.

அந்த மகிழ்ச்சியில் அவளது மனக்குருவி சந்தோஷமாகப் படபடத்தது. அவளது விழிகள் மீனின் கண்களைப் போல் பளபளத்தன. மாப்பிள்ளை வீட்டார்கள் பெண் வீட்டாரை அழைத்துக்கொண்டு போய், இந்தியாவிலே தமிழ் நாட்டிலே வைத்து திருமணத்தை நடத்தி முடித்தார்கள்.

மாப்பிள்ளைக்கு லண்டனில் இன்னும் நிரந்தர வதிவிட உரிமை கிடைக்கவில்லையாம்....! அது அவருக்குக் கிடைத்த பிற்பாடுதான் பெண்ணை அவருடன் அங்கு வந்திருக்க அழைக்கலாமாம்....!

இதனால் இல்லற வாழ்வின் விளிம்பை நுகர்ந்து விட்டுத் திரும்பவும் அவள் இங்கே திரும்பி வரவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகுதான் இந்தச் சிறைவாசம். திருமணமாகி இன்பமானதொரு வாழ்க்கையை வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டவள், அந்த ஆசை நிறைவேறாது போய், மாட்டுக் கொம்பில் புல்லைக் கட்டிவிடுகிற இந்த அவதியை அனுபவிக்கத் தொடங்கிவிட்டாள்.

"என் அம்மா வீட்டிலே நீ இரு...!" என்று கணவன் சொன்னதை அவள் கேட்கத்தானே வேண்டும்.

பிறந்த வீட்டிலே இருந்த சுதந்திரமெல்லாம் இப்பொழுது அவளுக்கு இங்கே தொலைந்து விட்டது.

இவர்களது மகனுக்கு மனைவியாக வந்தவள், இன்று மலிவான வேலைக்காரியாகிவிட்டாள். மனத்திலும் அவளுக்குச் சிறிதேனும் இங்கு மகிழ்ச்சியென்றதில்லை. 'தன்னைப் பற்றிக் கவலைப்படவென்று ஒருத்தருமில்லை' என்ற நினைப்பு அவளுக்கு வரவர மனத்தில் வளர்ந்து கொண்டே வருகிறது.

நாளாந்த வீட்டு வேலைகள் போல இன்றும் அந்த வீட்டில், அவள் செய்ய வேண்டியதாய் இருந்த வேலைகளனைத்தையும் செய்து முடித்துவிட்டாள்.

நேரம் இரவு பத்து மணியாகிவிட்டது. அடுத்த அறையில் மாமனாரும் மாமியாரும் கொஞ்சலும் சிணுங்கலுமாய் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவளுக்கு உள்உணர்வுகள் தலைகாட்டத் தொடங்கின. இழுத்துப் போர்த்துக் கொண்டு கணவனை நினைத்து அழுதாள். அதிலும் ஒரு சுகம் தெரிந்தது. பொழுது புலர்ந்தது.

வழமைபோல் அவள் வேலையாய் நிற்கும் போது எதிர் வீட்டுப் பக்கம் அந்த ஜன்னலின் கம்பியில், உடல் அழுந்த நின்றபடி அவனின் பார்வை நங்கூரம்! அவன் ஆயிரம் கண்களால் தன்னைப் பார்ப்பது மாதிரி அவளுக்கு இருந்தது.

அந்தப்பார்வை .......:

உடனே அந்தத் தாக்கத்தை அவள் தன் மனத்திலிருந்து சமாளித்துக் கொண்டுவிட்டாள். தன்னைச் சுற்றிலும் காணமுடியாத வலை ஒன்றை தனக்குப் பாதுகாப்பாய் அவள் விரித்தாள். தன்னை உணர்ச்சிக் குவியலாக்கும் அந்தப் பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்ள, அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று அவளுக்கு அவசரம்தான்.... ஆனாலும் இன்னும் இரண்டு கழுவிய சேலைகள் வாளியின் அடிப்பாகத்தில் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றை எடுத்து இரண்டு தரம் உதறிவிட்டு கொடியில் விரிக்கும் போது, மாமியாரும் முற்றத்திலே வந்து நின்றுகொண்டார்.

"இன்று என்ன கதையைத் தொடங்கி அடைக்கோழி மாதிரி வெடுக், 'வெடுக்'கென்று கொத்திப் பிடுங்கப் போகிறாரோ....."

கொடியிலே சேலையை விரிக்கும் போது இந்த நினைவுகளில் அவளை அறியாமலே அவள் அழிந்து கொண்டிருந்தாள்.

அதிலே நிற்கின்ற ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாய் வதைத்துவிட்டு நகர்கிறது மாதிரி அவளுக்கு இருக்கிறது.

ஜன்னல் பக்கத்தில் நின்றவன், களவெடுத்தவன் மாதிரி ஒரு பம்பல் பதுங்கலோடு அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவிப் போய்விட்டான்.

மாமி சொல்கிறார் :

"நாலு துணியைக் கொண்டுவந்து உந்தக் கொடியில விரிக்க நாலு மணித்தியாலம் வேணுமே....என்ன அலுவலுக்கெண்டு உதில நசிந்து கொண்டு நிண்டு மிலாந்தவேணும்... உலையுமெல்லே அடுப்பில...அதெல்லாம் மறந்துபோச்சோ...?"

எளிமையிலும் எளிமையான ஆனால் கல்லாய்க் கனக்கும் சொற்கள். காய்ச்சிய கரிப்பு வார்த்தைகள். செவிடன் யார் காதிலோ விழவேண்டுமென்று சொல்வது போல் அதை உரக்கச் சொல்லிக் கொண்டு மாமி நிற்கிறார்.

அதைக் கேட்க அவளுக்கு கருவேலம் முள் குத்திவிட்டதைப் போல் இருக்கிறது. கருக்கு வெட்டாத பச்சை பனை மட்டை அடி வாங்கியது போலவும் அவளுக்கு வலிக்கிறது.

உடம்பு நெகிழ்ந்து வருந்துகிற மனசோடு, கடைசியாகக் கையிலெடுத்த சேலையையும் கொடியில் விரித்துப் போட்டாள். அந்த வெறும் வாளியைக் கொண்டுபோய் கிணற்றடியில் வைத்து விட்டு, விறுவிறுவென்று நடந்து குசினிக்குள்ளே போய், அடுப்பிலிருந்த சோற்றுப் பானையின் உலை மூடியைத் திறந்தாள். சோறு 'டிப், டிப்', டிப்பென்று சத்தமிட்டுக் கொண்டிருந்தது. அனலை அடுப்பில் பரத்தித்தட்டி, விறகை வெளியில் எடுத்து ஒதுக்கி வைத்த போது, அடுத்த அறையில் இருந்து மாமியாரின் குரல் அவளுக்குத் தெளிவாய்க் கேட்டது.

"இந்த வேலியை இனிமேல் பட்டு செப்பமா அடைத்து அறிக்கை பண்ணிப் போடவேணும்... ஏதாச்சும் சங்கையீனம் வந்தா அது ஆருக்கு வரும்....இந்தக் குடும்பத்துக்குத்தானே....?"

அவளுக்காக ஒரு மதில் சுவர் கட்டப்படப் போகிறது.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# புரிந்துகொள்ளுங்கள்

ஒருவர் தகவல்கள் அல்லது உண்மைகள் ஆகியவைகளைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு, அவற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளப்படும்போது, தகவல்கள் மற்றும் உண்மைகள் ஆகியவைகள் ஒருவருக்கு சரியாகவோ அல்லது தவறாகவோ இருந்தாலும், அந்த முடிவின் விளைவுகள் மனநிறைவு அளிக்காமல் போகலாம். இது திறமையின்மை என்ற ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும் ஒரு குறுகலான பாதையாகவும் அமையலாம்,

நினைவில் வைத்துக் கொள்ளும் அளவிற்கு செயல்பாடுகளை உள்ளடக்கி வைத்தல், கற்றல் முறையின் இன்னொரு பயனாக வெளிப்படுகிறது. அதாவது வார்த்தைகளில் உள்ள எழுத்துக்களை மனனம் செய்தல், கணக்குப் பாடத்தில் வரும் சூத்திரங்கள், மற்றும் இயந்திரத்தை இயக்கும் விசைகளை வரிசைக்கிரமமாக இயக்குவது. ஆனால், சாதாரண மனப்பாடம் செய்யும்போதுகூட, அவை என்ன மாதிரியான தகவல்கள், அவைகளை எவ்வாறு எப்படி பயன்படுத்துவது என்றறெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

கற்றுக்கொள்ளும் வழிமுறை என்பது, இருக்கின்ற தகவல்களுக்கும் மேலே, மேலே இன்னும் தகவல்களை அடுக்கிக் கொண்டேபோவது அல்ல. அது என்னவென்றால் புதிய முறையில் புரிந்து கொள்ளும் திறனைப் பெறுவதும் மற்றும் முன்னேற்றமான வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் ஆகும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

# மானுடம் என்பது ஆணினது

## வெற்றிகளையும் தோல்விகளையும் உள்ளடக்கியது

"அழகான ராட்சசியே.... அடி நெஞ்சில் குதிக்கிறியே...."

காலையில் வீட்டிலிருந்து புறப்படும்போது வானொலியில் கேட்ட பாட்டு அவன் மனதுக்குள் திரும்பத் திரும்பச் சுழன்றது. பெண்களின் உடல், ஆண்களுக்கு நினைத்தாலே அவஸ்தை தருவதாகத்தான் இருக்கிறது. ராட்சசி, பிசாசு, மோகினிப் பேய் என்று என்னென்னவெல்லாமோ 'திட்டித்' தீர்த்தும் அவன் அவஸ்தையை தணித்துக்கொள்ள



முடியவில்லை.

மாறாக, இன்றைய பெண்கள், இப்படியெல்லாம் அவஸ்தைப்படும் ஆணுக்கு குற்றவுணர்வைத் தருகிறார்கள்.

பெண்ணை சக மனுசியாகப் பார்க்காமல், போதையூட்டும் உடலாகவும், போகப் பொருளாகவும் பார்க்கும் இந்தப் பார்வை, அவளை அடிமைப்படுத்தி வைத்திருக்கக் கையாளும் தந்திரம்தான் என்று குத்திக் காட்டுகிறார்கள்.

அதில் உண்மை இருப்பதாகவே கண்ணன் நம்பினான். ஆண் முதல் நிலையிலும், பெண்

**தருவது முழுநிலவன்**

அவனுக்கானவளாக இரண்டாம் நிலையிலும் இருப்பதுதான் சமூகத்திற்கு அழகு என்று அவனே திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறான். அவளைப் பற்றிய எல்லா கற்பிதங்களையும், ஒழுக்கங்களையும் ஆணே உருவாக்கியிருக்கிறான். அவனுக்கு விரும்பிய மாதிரியே பெண் இருக்க வேண்டும் எனப் பார்த்துக் கொண்டான்.

அவ்வப்போது பத்தினித் தெய்வங்கள் - பளிங்குப் பொம்மைகள் - அழகான ராட்சசிகள் - அடங்காப் பிடாரிகள்..... என்ன வேண்டும் என்று அவனே தீர்மானித்துக் கொள்கிறான். அதற்கேற்றபடி பெண்ணும் விரும்புமாறு, அதுவே அவளுக்கு மகிழ்ச்சியளிப்பதென்று மயங்குமாறு எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திக் கொண்டு விட்டான் என்பது உண்மைதான்.

பெண் இரண்டாம் நிலையிலிருப்பதுதான் சமூகத்தின் அழகு என்று பெரும்பாலும் பெண்களையும் நம்பச் செய்துவிட்டான். வாதித்து நிருபிப்பதற்கும் அவனுக்கு ஏராளம் இலக்கியங்களும், இந்த மரபுக்குள் ஊறிப் பழக்கமாகிவிட்ட மனித மனங்களும் துணையாக இருக்கின்றன.

அடிப்படையில் மனிதர்கள் யாவரும் சமம் என்பதை ஏற்றுக் கொள்ளாத நிலையில், இதுபற்றி அவனோடு பேசி ஒப்புக் கொள்ள வைப்பதும் சாத்தியமில்லைதான்.

இவற்றையெல்லாம் புரிந்துகொண்டிருந்தாலும், பெண்ணை இரண்டாம் நிலையில் வைத்துப் பார்ப்பது மனித நாகரிகத்துக் கொவ்வாதது என்றுணர்ந்திருந்தாலும்.... பெண் என்று நினைத்ததுமே மனதில் உண்டாகும் 'கடபுடா'க்களுக்கு என்ன செய்வதென்று கண்ணனுக்குத் தெரியவில்லை.

இது இயல்பாகத்தானே உண்டாகிறது! பெண்ணுக்கும் ஆணை நினைக்கும்போது இவ்வாறு ஏற்படலாமல்லவா! தெருவில் ஒரு பெண்ணைப் பார்த்ததும் மனது போடும் இந்தக் குதியாட்டத்தை அறிவினால் தடுத்து நிறுத்திவிட வேண்டுமா? ஒரு பெண்ணைச் சிரிக்க வைத்துவிடுவதற்கு இந்த ஆண் மனம் படும் பாடு! அவள் நாணப் புன்னகை கண்டு எகிறும் இதயத் துடிப்பு..... இவையெல்லாம் அவளை அடிமைப்படுத்துவதற்கான உணர்வுகள்தானா?

பெண்களுக்கும் இப்படித்தான் இருக்கும். ஆனால் அவர்கள் அடக்கி வைத்துக் கொள்ள, வெளிக்காட்டிவிடாதிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். ஆணும் அவ்வாறு தன் உணர்வெழுச்சிகளை அடக்கி வைத்துக் கொள்ள வேண்டுமா? பெண் விடுதலை என்பது அவளுக்கும் அந்தச் சுதந்திரத்தை அளிப்பதல்லவா!.... ஆணைப் பற்றிய அவளது இயல்புணர்ச்சிகளை வெளியிடுவதற்கான தடைகளை இல்லாதொழிப்பதல்லவா!

ஒரு தோழியிடம் கண்ணன் கேட்டபோது அவள் சொன்னாள், "எங்களுக்கு அப்படி ஒரு அவஸ்தைகளும் வருவதில்லை. உங்களுக்கு காலகாலமாக பெண்ணை வெறும் போகப் பொருளாக கற்பிதமாக்கி ஊட்டப்பட்ட உணர்ச்சிகள்தான் மரபான மனமாக இருந்து வருகிறது. பெண் உடல் மீதான மோகத்தை அதிகமாக வளர்த்தெடுத்துவரும் ஆண் சமூகத்தின் மரபான பிரஜைகள் நீங்கள். அதனால்தான் உங்களுக்கு இந்த அவஸ்தைகள்"

என்று அலட்சியமாக அவள் சொன்னபோது கண்ணனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

அவனால் ஒப்புக் கொள்ளக் கஷ்டமாக இருந்தது. பெண்ணை இரண்டாந்தரமானவளாக எண்ணுவதே இழிவு என்றுதானே நான் நினைக்கிறேன். என்னோடு சமமானவளாகத்தானே அவளை நினைக்கிறேன். அப்படியும் அவள் என் மனதைத் துள்ள வைப்பதை இவள் ஏன் புரிந்து கொள்கிறாளில்லை. அதற்கு வேறு நோக்கமிருப்பதாகச் சொல்கிறாளே! எல்லா உயிரினங்களுக்கும் கூட இந்த அவஸ்தை இயல்பானதாக இருக்கிறதே!

அவள் மேலும் சொன்னாள், "மானுடம் என்பதே ஆண்சார்ந்த விஷயம்தான். ஆணினது வெற்றிகளையும் தோல்விகளையும் உள்ளடக்கியது.... இந்த உங்கள் 'சமூகத்தில்' பெண் விதிவிலக்காகத்தான் இருக்கிறாள். வெறுமனே ஆணுக்குரியவளாக அவனுக்கு போதையூட்டும் ஒரு வஸ்துவாக நினைத்துப் பழக்கப்பட்டிருப்பதே உங்கள் மனம்! அதுவே இத்தனை அளவுக்கதிகமான ஆர்ப்பாட்டங்களுக்கும் கொண்டாடுதல்களுக்கும் காரணம்."

பெண் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவது அடக்கமற்ற செயல் என்று காலங்காலமாக உணர்த்தப்பட்டு வந்ததன் விளைவுதான், இவள் இப்படி இயந்திரத்தனமாகப் பேச முடிவதற்குக் காரணம் என்று கண்ணன் நினைத்தான். ஆணும் பெண்ணும் அவர்களது பலம் - பலவீனங்களோடு இங்கு சமமான மனிதர்களே என்பது உறுதியாகி விட்டால், பெண்களும் ஆண்களும் குறித்த தங்கள் அவஸ்தைகளை வெளிப்படுத்துவர் என்று கண்ணன் நம்பினான். பொது உலகத்துடன் உரையாட, அதன்முன் உரக்க பேச, அத்துடன் வாதம் புரிய வாய்ப்பும் அதற்குரிய இடமும் பெண்ணுக்கு இதுநாள் வரை வழங்கப்படாததே அவர்கள் தங்கள் கிளர்ச்சிகளை மறுப்பதற்குக் காரணமாயமைந்து விட்டது என்று நினைத்தான்.

ஆண்டாள் கூட, அவள் காலத்திய ஆண் சமூக வரையறைக்குள் வெறும் அச்சுக் கோர்ப்பாளராக மட்டுமே இருந்திருக்கிறாள் என்று எவ்வளவு அலட்சியமாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்! அதாவது அவள் வெளிப்படுத்தியவை சுதந்திரமான உணர்வுகளில்லையாம். ஆண் சமூக நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுச் சொன்னவைதானாம் அவள் காதல் பிதற்றல்கள்!

ஆண், பெண்ணை ஒடுக்கி வைத்திருப்பதற்கு அப்பால், ஆணும் பெண்ணும் ஒருவரில் ஒருவர் கிளர்ச்சியுற்றுப் பித்து நிலை அடைவது உயிரின் ஆதார உணர்வல்லவா!

அவள் நினைவு மட்டுமே தன்னிடமிருந்த வெம்மையை எல்லாம் நீக்கிக் குளிர்ச்சியைப் பாயவிட்டதாகத் தலைவன் கூறுவது அந்த நாளில் மட்டும்தானா? இன்றைக்கும் அதே உணர்வுதானே அலைக்கழிக்கிறது!

***நெடுங்கழை முளிய வேனி னீடிக்***
***கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்***
***வெய்ய வாயின முன்னே யினியே***
***யொண்ணுத லரிவையை யுள்ளுதொறுந்***
***தண்ணிய வாயின சுரத்திடை யாறே.***

*(ஐங்குறுநூறு : 322).*

✉ **சிந்தியா! வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ம்....எல்லாம் யோசிக்கும் வேளையில், அலுவலகம் போய் வருவதும், உண்பதும் உறங்குவதுமாகத்தான் முடிகிறது!

✉ **வேடுவ இனத்தவரும் பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திட வேண்டும் என்று கேட்பதைப்போல, தமிழ்ப் பத்திரிகையொன்றில் கிண்டல் கார்ட்டூன் வந்திருப்பது எதைக் காட்டுகிறது?**

-த.சரண்யா, பாண்டிருப்பு.

இனவாதிகள் எங்கும் இருக்கிறார்கள் என்பதை!

✉ **த்ரிஷாவின் அழகின் இரகசியம் என்ன?**

-கே.ரி.பிரியன், தம்பிலுவில்.

கோபத்திலும் கூட முகத்திலிருந்து முற்றாக மறைந்துவிடாத புன்னகை!

✉ **பேட்டி காண்பவர் தனது அரை வேக்காட்டுத்தனத்தை வெளிப்படுத்தியபடி அதட்டியும் உறுக்கியும் ஒரு Ring Master போல நடந்து கொள்கிறார். மந்திரி முதல் எம்.பி.மார் வரை அவருக்கு முன்னால் குழைந்தும் நெளிந்தும், மூச்சுக்கொருதரம் அவர் பெயரைச் சொல்லி இளித்தும், 'உங்களுக்குத் தெரியாததா!' என்று புகழ்ந்தும் அசட்டுத் தனங்களை அரங்கேற்றுகிறார்கள். வேறெந்த மொழியிலும், வேறெந்த நாட்டிலும் நாம் காணமுடியாத இந்த அரசியல் - ஊடக ஆபாச உச்சம் இங்கு கொண்டாடப்பட என்ன காரணம்?**

-எம்.எப்.எம்.பர்ஸான், கொழும்பு - 12.

மக்களுக்கு அடிக்கடி முகத்தைக் காட்டிக் கொள்ள, அரசியல்வாதிகளிடையே உள்ள போட்டி.

✉ **நடிகைகளுக்கிடையே ஒற்றுமை - வேற்றுமை பற்றிய கேள்வியும் - பதிலும் அவசியம்தானா?**

-எம்.நர்மதா, கொழும்பு - 05.

சரி, உங்கள் திருப்திக்கு கடவுள்களிடையேயான ஒற்றுமை பற்றிய ஒரு ஜோக் :

"யேசுகிறிஸ்து, புத்தர், காந்தி மூன்று பேருக்கும் உள்ள சிறப்பு ஒற்றுமை என்ன?

மூன்று பேருமே லீவு நாளில் பிறந்தவர்கள் சேர்."

✉ **எங்கள் கூட்டமைப்பு பா.உ.ஈழவேந்தன் அவர்கள் நேர்காணலிலும் சரி, விவாதத்திலும் சரி, பாராளுமன்றில் உரை நிகழ்த்துகையிலும் சரி, தனது வலது கைச் சுட்டு விரலை நீட்டியும், அங்குமிங்குமாக ஆட்டியும் பேசுகின்றார். இதற்கு ஏதேனும் விசேட காரணங்கள் இருக்குமா?**

-ஏ.கே.பி., தெல்லிப்பளை.

அவர் விரலைப் பார்த்துக்கொண்டிருப்பதால் தப்பித்தீர்கள். அவர் முக சேட்டைகளையும், அசட்டுத்தனமான தமிழ்ப் பெருமைப் பேச்சையும் கவனிக்க நேர்ந்திருந்தால், உங்களுக்குத் 'தமிழன்' என்று சொல்லவே வெட்கமுண்டாகியிருக்கும்.

✉ **சிங்களவர்கள், சிறீலங்கா அணி கிரிக்கெட் விளையாடினால் மட்டும் பார்க்கிறார்கள். தமிழர்கள் இந்தியாவுக்கும், முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும் சப்போர்ட் பண்ணுகிறார்கள். கிரிக்கெட்டிலாவது இலங்கையர் அனைவரும் ஒன்றுபட என்ன செய்ய வேண்டும்?**

-சிஹ்னாஸ், பெரியமடு.

ஆசிய அணி உருவாக வேண்டும்.

✉ **அந்நியன் பார்த்தீர்களா?**

-அ.ம.வபீஸ், மருதமுனை - 06.

இந்தியன், முதல்வன் போல அந்நியனும் சாதாரணன் அல்ல. ஷங்கரின் சமூகக் கோபம் இன்னும் தணியாதிருப்பது நல்லதுதான். படத்தின் சாதகமான அம்சம் என்று நான் கருதுவது இதைத்தான். சமூகத்தின் ஊழல்கள் இயல்பானவைதான் என்று காட்டாமல், அவற்றின் மீதான எதிர்ப்பையும் வெறுப்பையும் எந்தவிதத்திலேனும் காட்டிக் கொண்டிருப்பது, இது ஒன்றும் பெரிய சமூகமாற்றத்தை நோக்கியதல்ல என்றாலும், குறைந்தபட்சம் இந்திய மக்கள் மனதில் இந்த ஊழல்கள் மீதான எதிர்ப்புணர்ச்சியைத் தக்க வைக்கிறதில் சிறுபங்கேனும் ஆற்றுகிறது என்றே நினைக்கிறேன். நம்மூரில் போல சமூகத்தின் அங்கீகாரத்தோடு நடக்கும் கொலைகள், கொடூரங்கள் அங்கு இல்லை.




நாயகனில் பாலகுமாரன் வசனத்தில் தனது சமூகக் கோபங்களைக் கொட்டியது போல, இதில் சுஜாதா கொட்டியிருக்கிறார். உதாரணத்திற்கு :-

"சின்னத் தப்புக்கெல்லாம் இவ்வளவு பெரிய தண்டனையா?"

"தப்பு என்ன பனியன் சைஸா ஸ்மோல், மீடியம், லார்ஜ் ன்னு....விளைவோட சைஸைப் பாருங்க, எல்லாமே எக்ஸ்ட்ரா லார்ஜ்தான்."

"இதுக்கெல்லாமா கொல்லுவாங்க?"

"இதுக்கெல்லாம் யார் கொல்லப் போறாங்க என்ற தைரியத்தில்தானே இந்தத் தப்பெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்."

"அதுக்காக, நீங்கள் சட்டத்தை கையில எடுத்துக்கொள்ளலாமா?"

"நீங்க சட்டத்தை மீறலாம், நான் சட்டத்தை கையில் எடுத்துக்கொள்ளக் கூடாதா?"

✉ **22 தமிழ் எம்.பி.க்களுக்கு மேலாக வடக்கு - கிழக்கில் என்ன ஜனநாயகப் பன்முகப்பாடு வேண்டும்? என்று ஒரு வாரக் கட்டுரைப் பெருந் தமிழ்மகன் கேட்கிறாரே.... அந்தக் கேள்வியிலுள்ள பாசிசக் குரூரமும், இனவாதக் கபடமும் உண்மையிலேயே அவருக்கும் - அவர் போன்றவர்களுக்கும் புரியாமல்தான் இருக்கிறதா?**

-எம்.ஏ.எம்.இர்பான், கல்முனை.

தமிழர்களின் உரிமைகளைத் தர மறுக்கப்படுவது பற்றியும், அரசாங்கத்தினரதும் அரச படைகளினதும் நடவடிக்கைகள் நம்மைச் சண்டைக்கே தள்ளுவது பற்றியும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி யுத்தத்தை ஆரம்பிக்கப் போவது அரசுதான் என்பது பற்றியும் எழுதுவதை விடுத்து, ஜனநாயகம், பன்முகப்பாடு என்று தென்னை மரத்தில் புல்லுப் பிங்கின கதைகளை எழுதிக் கொண்டிருப்பதற்காக அவரது எஜமானர்களும் அவர்மீது கண் வைத்திருப்பார்கள். இன்று கருத்துச் சொல்ல நினைக்கும் தமிழர்களின் நிலை, இருபுறமும் கூரான கத்தியைப் பிடிப்பது போலத்தான். பாவம் அவர்கள், விடுங்கள்!

✉ **நடிகர் மாதவன் இப்போது என்ன படம் நடித்துக்கொண்டிருக்கிறார்?**

-ஆர்.உமா, கினலன் எல்ல.

பிரியசகி.

**சிந்தியா பதில்கள்**

✉ **கதை, கவிதை, இலக்கியம் எதற்காக?**

-க.வளர்மதி, திருகோணமலை.

மனித குலம் தன் சுயத்தைக் கண்டடையவும், மனிதரைச் சக மனிதரோடு இசைவிக்கவும், அன்பெனும் ஆற்றல் மிகு சக்தியைக் கொண்டு வாழ்வைக் கடக்கவும்.....

✉ **ஹிட்லர் தனது புத்தகத்தில் எழுதியிருப்பவற்றைப் பார்க்கும்போது, நமது நாட்டைப் பற்றியே சொல்லியிருப்பதாக அல்லவா தெரிகிறது! ஜெர்மானிய இனத்தின் பெருமைமிகு வாழ்வுக்காக ஹிட்லர் செய்த கொலைகளுக்கு அந்த மக்களின் அங்கீகாரத்தையும் அவர் பெற்றிருந்தார் என்பது உண்மைதானா?**

-ஆர்.எஸ்.ஆர்த்தி, கொழும்பு - 05.

எங்கள் வீறார்ந்த வாழ்வுக்கு ஏகப்பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை வலிமையாக நம்பும் ஈழத் தமிழனின் மனதைப் படிக்க, அந்தப் புத்தகம் ஒரு சிறந்த வழிகாட்டி. புத்தகத்தின் அட்டையைக் கிழித்துவிட்டு வாசித்தால், இந்த வரலாறு எங்களுடைய வரலாறுதானோ என்று நினைத்தே ஒருவர் வாசித்து முடிப்பார்.




உங்களை மேலும் புல்லரிக்க வைக்க, ஹிட்லரின் நூலிலிருந்து மற்றொரு சிறு பகுதி

"நமது இலட்சியத்தை ஸ்தாபிப்பதற்கு சகிப்புத்தன்மை அணுவளவும் கூடாது. ஏனெனில், அதற்கு விரோதமாக இருப்பவர்களை எல்லாம் இரக்கமின்றி ஒழித்தால்தான், அது அமுலுக்கு வருவது சாத்தியமாகும். மற்றவர்களை மறுப்பதில் தளர்வுப் போக்கைக் காட்டினால் இயக்கம் பலவீனமாகி அழிந்துவிடும். இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான தீவிர போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுடன், அதை எதிர்க்கும் எதிரிகளை ஒழித்துக்கட்டவும் திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். ஏக காலத்தில் அவ்விரு முறைகளையும் கைக் கொண்டால்தான், இயக்கத்தின் தலைவர்கள் பொதுஜனங்களை வசீகரிக்க முடியும். சிறிதும் தளர்ச்சியுறாது அதிதீவிரமாக எதிர்ப்பவர்கள் பக்கத்தில்தான் நியாயமிருக்கிறதென்று பொது ஜனங்கள் எப்போதுமே கருதுவது வழக்கம். பலசாலிகள் வெற்றிபெற வேண்டும்; அவர்கட்கு மாறானவர்கள் ஒழியவேண்டும் அல்லது பலவான்களுக்குப் பணியவேண்டும் - இதுதான் பொதுஜனங்களுக்கு உடன்பாடாக இருக்கும். சிறிதும் இரக்கமின்றி விரோதிகளை ஒழிப்பவர்கள் மீதுதான் அவர்களுக்குப் பிரியமேற்படும்...."

✉ **தற்கொலையா? தற்கொடையா?**

-எஸ்.சர்வேஸ்வரன், வவுனியா.

எந்தக் காரணத்தைச் சொல்லியும் ஒரு மனித உயிரின் வாழ்வைப் பாதியிலேயே முடித்துக்கொள்ளத் தூண்டுவது அநீதி என்று நினைப்பவர்களுக்குத் தற்கொலை. அதையே பிச்சையாகப் பெற்றுக்கொண்டு தங்கள் வாழ்வை நல்லபடியாக்கிக் கொள்ள நினைக்கிறவர்களுக்குத் தற்கொடை!

# 83ஆவது சர்வதேச கூட்டுறவு தினச் சிறப்பிதழ்

**1911ஆம் வருடம் உலகில் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத் துறையானது 1922ஆம் வருடம் முதல் சர்வதேச கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாட ஆரம்பித்தது. இன்று சர்வதேச மட்டத்தில் வியாபித்துள்ள கூட்டுறவுத்துறை இலங்கையைப் போன்றே சர்வதேச மக்களினதும் நெருங்கியதொரு அமைப்பாக அன்று தொட்டு இன்றுவரை செயற்பட்டு வருகின்றது.**

**சர்வதேச கூட்டுறவுத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு அதன் 83ஆவது வருடம் பூர்த்தியாகும் இன்றைய தினத்தில் இவ்விசேட சிறப்பிதழ் வெளியிடப்படுகின்றது.**

## கௌரவ அமைச்சர் அவர்களின் செய்தி

**2005,** ஜூலை மாதம் 02ஆம் திகதி, இன்று சர்வதேச கூட்டுறவுத் தினம் கொண்டாடப்படுகின்றது. இதனை முன்னிட்டு செய்தியொன்றை வெளியிடுவதற்கு இந்நாட்டின் கூட்டுறவுத்துறை அமைச்சர் என்ற வகையில் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

1911ஆம் வருடம் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத் துறையானது நூற்றாண்டுகளை அண்மித்துள்ள காலப்பகுதிக்குள் இந்த நாட்டு மக்களது வாழ்க்கையில் அத்தியாவசியமான ஓர் அங்கமாக மாறியுள்ளமையானது கூட்டுறவுத் துறையின் உன்னதத் தன்மையையே எடுத்துக் காட்டுகிறது.

இரண்டாம் உலக யுத்தம் ஏற்பட்ட காலகட்டத்தின் போது அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்களை விநியோகிக்கின்ற ஓர் உபகரணமாக வியாபித்த இந்நாட்டு கூட்டுறவுத் துறையானது, அதன் பின்னரான காலகட்டங்களின் போது நாட்டின் அபிவிருத்திக்கும், வறுமை நிலையைப் போக்கும் முயற்சிகளுக்கும் மற்றும் அனைத்து அவசர நிலைமைகளின் போதும் பாரியளவில் மக்களுடன் கைகோர்த்து, சேவையாற்றி, மக்கள் பணி சார்ந்த துறையானதால், அது அவர்களது வாழ்க்கையில் வேரூன்றி அவர்களது இதயத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டு வந்ததை நாங்கள் கண்டு வந்துள்ளோம்.

கூட்டுறவுத் துறையானது அனைத்துத் துறைசார்ந்த மக்களினதும் தேவைகளை நிறைவேற்றுகின்ற பாரியதொரு எண்ணக்கருவாகும் என்பதாலும், மக்களின் சுயமான பங்களிப்புகளினால், மக்களுக்காக அம் மக்களாலேயே ஆரம்பிக்கப்பட்ட ஒரு துறை என்பதாலும் அதனது செயற்பாடானது நிரந்தரமானதாகும் என நான் உணர்கிறேன்.

இலங்கையில் சுமார் ஐம்பது இலட்சம் கூட்டுறவாளர்களாலும், அதனோடு இணைந்து சுமார் நாற்பதாயிரம் உழைப்பாளர்களாலும் இன்று கட்டியெழுப்பப்பட்டிருக்கும் எங்களது கூட்டுறவானது சுமார் எழுநூறு மில்லியன் உறுப்புரிமையைக் கொண்ட சர்வதேச கூட்டுறவுத் துறையின் உறுப்புரிமையைப் பெற்றிருக்கின்றது. இது எங்களைப் போன்ற நாடுகளில் உள்ள மக்களுக்குப் பலத்தையும், இத்துறை சார்ந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

கூட்டுறவுத்துறை சார்ந்த அறிவுகளையும், அனுபவங்களையும் பரிமாற்றிக் கொள்ளும் வேலைத்திட்டங்களின் மூலம் சர்வதேச கூட்டுறவுக் கூட்டமைப்பை மென்மேலும் பலப்படுத்திக்கொள்ள இயலும் என்கின்ற அதேவேளை இதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் எதிர்காலத்தில் மேற்கொள்வார்கள் என நான் எதிர்பார்ப்புக் கொண்டுள்ளேன்.

கூட்டுறவுத் துறையின் தனித்துவம், எண்ணக்கரு மற்றும் இலக்குகளைப் பாதுகாத்துக் கொண்டு இத்துறையை மென்மேலும் எமது நாட்டில் உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் சர்வதேச ரீதியில் இத்துறை தொடர்ந்தும் முன்னேறிச் செல்வதற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பா.உ.**
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் கல்வி,
வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சர்.



## கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி

**83**ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு செய்தி ஒன்றை வெளியிடுவதையிட்டு கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பல்வேறு சிக்கல்களின் ஊடாகவேனும் இத்துறையானது முன்னேறி தனது நூற்றாண்டைக் கொண்டாடுவதற்குத் தயாராக இருக்கிறது. இந் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அனர்த்த காலகட்டங்களின் போது மக்களது வாழ்வு நிலையை சிறந்த வகையில் பேணும் முகமாக கூட்டுறவுத் துறையானது முன் வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

திறந்த பொருளாதாரம் காரணமாகக் கூட்டுறவுத் துறையானது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்ற போதும், இது முழுமையாக மூடிவிடக் கூடிய ஒரு துறையல்ல. மக்களை அடிப்படையாகக் கொண்டு இத்துறை கட்டியெழுப்பப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இத்துறையைச் சார்ந்துள்ளனர். திறந்த பொருளாதார முறையினால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நல்லதொரு மாற்று அமைப்பாக இருப்பது கூட்டுறவுத் துறை என்பது எனது எண்ணமாகும். கடந்த காலங்களில் இது நேரடியாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் அத்தியாவசியம் ஏற்பட்டுள்ள ஒரு யுகத்தில் நாங்கள் இருந்து வருகின்றோம். தற்போதுள்ள பல பிரச்சினைகளுக்கு நாங்கள் ஒன்றிணைந்தே முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்த ஒற்றுமைக்குத் தேவையான சித்தாந்தம், கொள்கை மற்றும் பண்புகள் என்பன கூட்டுறவுத் துறையினுள் உள்ளன. எனவே வானவில் வர்ணத்தைக் கொண்ட கூட்டுறவுக் கொடியின் கீழ் இணைந்து எங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இன்றைய இந்தக் கூட்டுறவு தினத்தின் போது நாங்கள் உறுதி கொள்வோமாக.

**சிறிபால கமலத், பா.உ.**
கமத்தொழில் சார்ந்த விற்பனை
அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி
பிரதி அமைச்சர்.

## அமைச்சு செயலாளரின் செய்தி

**83**ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த முக்கிய தினத்தில் எமது நாட்டின் பாரிய மக்கள் சார்ந்த துறையான கூட்டுறவுத் துறையுடன் இணைந்துள்ள கூட்டுறவாளர்களுடன் இத் தினத்தைக் கொண்டாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை தொடர்பாக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் கூட்டுறவுத் துறையானது நூறு வருடங்களுக்கு அண்மித்த காலமாக முக்கிய பொருளாதார மற்றும் சமூகப் பணிகளில் பங்களிப்பினை நல்கியுள்ளது. இதனால் இத்துறையை இந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமாக இருந்துவரும் உன்னத மக்கள் அமைப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எனினும் இந்நாட்டு கூட்டுறவுத் துறையானது தற்போதைய யுகத்தில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக தற்போதைய உலக மயமாக்கல் மற்றும் வர்த்தகச் சந்தையின் மாறுபாடுகள் என்பன காரணமாக மேற்படி கூட்டுறவுத் துறையை பலம் பொருந்திய மக்கள் சார்ந்த துறையாக முன்னெடுப்பதற்கு புதிய வழிவகைகள் மற்றும் தந்திரோபாயங்கள் குறித்து அவதானத்தைச் செலுத்தவேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன.

தற்போதைய சவால்கள் மற்றும் அதனுடன் சார்ந்த காலத்தின் மாறுதல்கள் என்பனவற்றின் முன்பாக இந் நாட்டு கூட்டுறவுத் துறையானது அதனது வியூக மயமான மறுசீரமைப்புக்கும் அதுபோன்றே சிந்தனை ரீதியிலான மாறுதல்களுக்கும் உட்படல் வேண்டும். இச் செயற்பாட்டுக்கு தெளிவான கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் யதார்த்த ரீதியிலான மாறுதல்களை இனங்கண்டு கொள்வது சாலச் சிறந்ததாகும். இதற்காகச் சர்வதேச கூட்டுறவுக் கூட்டமைப்பின் மூலம் பல்வேறு ஆய்வுகள் மற்றும் செயற்பாடுகளின் ஊடாக வெளியிடப்பட்டிருக்கும் புதிய கருத்துக்கள் மற்றும் சிந்தனைகள் தொடர்பாக எங்களது கவனத்தைச் செலுத்துவதானது கூட்டுறவுத் துறைக்கே முக்கியமானதொரு தினமாகக் கருதப்படும் இன்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும் என நான் கருதுகின்றேன்.

இதன் பிரகாரம் கூட்டுறவுத் துறை இன்று முகங்கொடுத்துள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகளை உரிய முறையில் இனங்கண்டு அதற்குரிய தந்திரோபாயங்களை அணுகுவதன் மூலம் இத்துறை தொடர்பில் ஆராய்வது காலத்தின் தேவையாக உள்ளது. எனவே எமது நாட்டின் கூட்டுறவுத் துறையை, நூற்றாண்டை நோக்கி முன்னகர்த்துவதற்கும் இயலுமான வகையில் கூடியளவில் செயற்பாட்டு ரீதியானதும், அமைப்பு ரீதியானதுமான துறையாக அமைத்துக் கொள்வதற்கும் தேவையான தைரியமும் பலமும் கிட்டட்டும் என வாழ்த்துகின்றேன்.

**கருணாநிதி மகானந்தன்,**
செயலாளர்.
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு
மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சு.

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் செய்தி

இன்றைய தினத்தில் 83ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாடுகின்ற இலங்கை கூட்டுறவாளர்கள், 2006ஆம் வருடத்தின் போது இலங்கைக் கூட்டுறவுத் துறையின் நூற்றாண்டை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவார்கள் என எதிர்பார்க்கின்றேன். இலங்கையில் இன்றும் செயற்பாட்டு ரீதியில் இருந்து வருகின்ற பழைமை வாய்ந்த அமைப்பான இந்தக் கூட்டுறவுத் துறையானது மக்கள் அபிவிருத்தித் துறையாகவும், மக்களுடன் நெருங்கிய அமைப்பாகவும் இருந்து வருகிறது.

இத்துறையானது மேலும் நூற்றாண்டுகள் முன்னேறி, விருத்தியடைவதற்கான வழிவகைகள் பற்றி முன்கூட்டியே நிச்சயித்துக்கொள்வதற்கு இந்த 83ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாடுகின்ற சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்திக்கொண்டால் அது நன்மையாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

இதே நேரம் 83ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தில், நீண்ட இந்தப் பயணத்தில் பங்களிப்பு ஆற்றியுள்ள, ஆற்றவுள்ள அனைத்துக் கூட்டுறவாளர்களுக்கும் பலமும் மன உறுதியும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**ஜீ.எஸ்.எல்.பொன்சேக்கா,**
கூட்டுறவு அபிவிருத்தி
ஆணையாளரும் பதிவாளரும்.

## இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை தலைவரின் செய்தி

சர்வதேச கூட்டுறவு தினத்தைக் கொண்டாடுகின்ற இன்றைய தினத்தில் செய்தி ஒன்றை வெளியிடுவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுமார் நூற்றாண்டு காலமாக எமது கூட்டுறவுத்துறை பயணித்துள்ள பாதையைப் பார்க்கும் போது வர்த்தக ரீதியாகவும், சமூக நலவுரிமை என்ற ரீதியாகவும் மக்கள் சமூகத்துக்கு ஆற்றியுள்ள சேவையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

இக் கடமைப்பாடுகள் எமது உறுப்பினர்களது பணிநலன் கருதி மட்டுமல்லாது தேசத்தின் ஏனைய மக்களுக்காகவும் சிரமமான பயணத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்தும், எமது பயணத்தை மென்மேலும் நாங்கள் முன்னெடுத்துச் செல்வதாக 83ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தைக் கொண்டாடுகின்ற இச் சந்தர்ப்பத்தின் போது உறுதி பூண்டு, அதனைச் செயற்படுத்துவதன் மூலம் உறுதி செய்வோமாக.

**பந்து ரணவக்க,**
தலைவர்,
இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை.

**கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.**

# கிரிகோர் மெண்டல் (1822 - 1884)

## உலகை வியக்க வைத்தவர்கள்

*சென்ற வாரத் தொடர்ச்சி......*

**மெ**ண்டல் கண்டுபிடித்த மரபுவழி பற்றிய உண்மைகள் யாவை? முதலாவதாக, உயிர் வாழும் உயிரிகள் (Organism) அனைத்திலும், மரபுப் பண்பு தொடர்வதற்குக் காரணமாக இருக்கும் "மரபுப் பண்புக் கூறுகள்"(Gens) என அழைக்கப்படும் அடிப்படை அலகுகள் (Basic units) இருந்தன என்று மெண்டல் அறிந்து கொண்டார். இதன் மூலமாக, மரபுவழிப் பண்பியல்புகள் பெற்றோரிடமிருந்து அவர்களி சந்ததியினருக்கு வழிவழியாக வந்தன. மெண்டல் ஆராய்ச்சி செய்த தாவரங்களில், விதையின் நிறம் அல்லது இலையின் வடிவமைப்பு போன்ற தனிப் பண்பியல்புகள் ஒவ்வொன்றும், ஒரிணை (pair) மரபுப் பண்புக் கூறுகளின் மூலமாகத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு தனித் தாவரம்,ஒவ்வொரு இணையின் ஒரு மரபுப் பண்புக் கூற்றினை பெற்றோர் ஒவ்வொருவரிடமிருந்தும் பெற்றது. ஒரு குறிப்பிட்ட பண்புத் திறத்திற்காக (Trait) மரபு வழியாகப் பெற்ற இரண்டு மரபுப் பண்புக் கூறுகளும் வெவ்வேறாக இருக்குமானால்,(எடுத்துக் காட்டாக, பச்சை விதைகளுக்காக ஒரு மரபுப் பண்புக் கூறும்,மஞ்சள் விதைகளுக்காக இன்னொரு மரபுப் பண்புக் கூறும் பெறப்படுமானால்) அப்போது, பொதுவாக, மேம்பட்டு நிற்கும் மரபுப் பண்புக் கூறின்,(இந்தத் தேர்வில், மஞ்சள் விதைகளுக்குரியது) செயல் விளைவு (Effect) மட்டுமே அந்தத் தனித் தாவரத்தில் வெளிப்படையாகப் புலப்படும். ஆயினும், முனைப்புக் குன்றியிருக்கும் (Recessive) மரபுப் பண்புக் கூறு அழிந்து விடுவதில்லை. அந்த தாவரத்தின் சந்ததிகளுக்கு அந்தப் பண்புக் கூறு சென்றடையக் கூடும். இனப் பெருக்க உயிரணு (Reproductive cells) அல்லது பாலணு (Gamete) மனிதர்களிடமுள்ள நேரிணையான விந்து (Sperm) அல்லது கரு உயிரணுக்கள் (Egg cells) ஒவ்வொன்றும், ஒவ்வொரு இணையின் ஒரு மரபுப் பண்புக் கூற்றினை மட்டுமே கொண்டிருந்தது என்பதை மெண்டல் கண்டறிந்தார். ஒரு தனிப் பாலணுவில், ஒவ்வொரு இணையின் எந்த ஒரு மரபுப் பண்புக் கூறும் காணப்படுவதும் அது ஒரு தனிச் சந்ததிக்குச் சென்றடைவதும் முற்றிலும் தற்செயல் நிகழ்வே என்றும் மெண்டல் கூறினார்.

மெண்டலின் விதிகள், அவை சற்றே மாற்றமைவு செய்யப்பட்டுள்ள போதிலும், மரபு வழிப் பண்பியல் (Genetics) பற்றிய தற்கால அறிவியலுக்குத் தொடக்கமாக அமைந்தன. மெண்டலுக்கு முன்பு தொழில்முறை உயிரியலறிஞர்களாகப் புகழ் பெற்றிருந்த பல விஞ்ஞானிகளுக்குப் பிடிபடாமலிருந்த இந்த முக்கியமான விதிகளை, ஒரு பொழுதுபோக்கு விஞ்ஞானியாக மட்டுமே இருந்த மெண்டலினால் எவ்வாறு கண்டுபிடிக்க முடிந்தது. நல்ல காலமாக, இவர் தமது ஆராய்ச்சிகளுக்காகத் தேர்ந்தெடுத்திருந்த தாவர இனத்தின் (Species) முக்கிய பண்பியல்புகள் ஒவ்வொன்றும், மரபுப் பண்புக் கூறுகளின் ஒரு தனித் தொகுதி (Single Set) மூலமாகத் தீர்மானிக்கப்படக் கூடியதாக இருந்தது. ஆனால், இவர் ஆராய்ச்சி செய்த பண்பியல்புகள் ஒவ்வொன்றும், மரபுப் பண்புக் கூறுகளின் பல தொகுதிகளினால் தீர்மானிக்கப்படக் கூடியதாக இருந்திருக்குமானால், இவருடைய ஆராய்ச்சி மிகவும் கடினமானதாகவே இருந்திருக்கும். மெண்டல், மிகுந்த கவனமும், அளவற்ற பொறுமையும் வாய்ந்த ஒரு



பரிசோதனையாளராக இல்லாது போயிருந்தால் அல்லது தமது ஆராய்ச்சிகளின் புள்ளி விவரப் பகுப்பாய்வினைச் செய்வது மிகவும் இன்றியமையாதது என்பதை மெண்டல் நன்கு உணர்ந்து கொள்ளாமற் போயிருந்தால் - அவருடைய இந்த நற்பேறு அவருக்கு எந்த விதத்திலும் உதவியாக இருந்திருக்காது. மேற்சொன்ன, அங்கொன்றும் இங்கொன்றுமான நிகழ்வு காரணமாக, ஒரு தனிச் சந்ததியின் பண்புத் திறன்களின் எந்தப் பண்புத் திறன் மரபு வழி வந்தடையும் என்பதை ஊகித்துக் கூறுவது பொதுவாகக் கடினம். ஏராளமான பரிசோதனைகள் செய்ததன் மூலமாகவும் (மெண்டல் 21,000-க்கும் மேற்பட்ட தனித் தாவரங்களுக்கான பரிசோதனைகளின் முடிவுகளைப் பதிவு செய்து வைத்திருந்தார்.) தமது முடிவுகளைப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வு செய்ததன் மூலமாகவும் மெண்டல் தமது விதிகளை வகுத்தமைக்க முடிந்தது.

மரபு வழி விதிகள் மனித அறிவுக் கருவூலத்திற்கு ஒரு முக்கியமான சேர்மானம் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. மரபு வழிப் பண்பியல் பற்றிய நமது அறிவு, இதுகாறும் பயன்பட்டதைவிட மிக அதிக அளவில் எதிர்காலத்தில் பயன்படக் கூடும். ஆயினும், இப்பட்டியலில் மெண்டலுக்குரிய இடத்தை நிர்ணயிப்பதில் மற்றொரு அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மெண்டலின் கண்டுபிடிப்புக்கள் அவருடைய வாழ்நாளின்போது அடியோடு புறக்கணிக்கப்பட்டு விட்டன. அவருடைய முடிவுகளை, பிற்காலத்திய விஞ்ஞானிகள் தனித்தனியாகவே கண்டறிந்தனர். எனவே, மெண்டலின் ஆராய்ச்சி ஒதுக்கிவிடத்தக்கது தான் என்று கருதலாம். இந்த வாதம் வலியுறுத்தப்படுமானால், கொலம்பஸ், கோப்பர்னிக்கஸ், ஜோச.்.ப் லிஸ்டர் ஆகியோருக்கு ஆதரவாக லை.்.ப் எரிக்சன், அரிஸ்டார்க்கஸ் இக்னாஸ், செம்மல்வெய்ஸ் ஆகியோர் விட்டுவிடப்பட்டது போன்றே, மெண்டலும் இப்பட்டியலிலிருந்து முற்றிலுமாக விட்டுவிடப்பட வேண்டும் என்று ஒருவர் முடிவுக்கு வரக் கூடும்.

ஆனால், மெண்டலுக்கும் மற்றவர்களுக்குமிடையே வேறுபாடு உண்டு. மெண்டலினுடைய பணி தற்காலிகமாகவே மறக்கப்பட்டது. அது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டபோது, மிக விரைவாக உலகப் புகழ் பெற்றது. மேலும், டி. விரிஸ், கோரன்ஸ், ஷெர்மாக் ஆகிய மூவரும் இவர் கூறிய விதிகளை மறுபடியும் கண்டுபிடித்தார்கள் என்ற போதிலும், இறுதியில் இவருடைய ஆய்வுக் கட்டுரையைப் படித்து, இவரது முடிவுகளை மேற்கோள் காட்டினார்கள். இறுதியாக, டி விரிஸ், கோரன்ஸ், ஷெர்மாக் ஆகிய மூவரும் தோன்றாமலிருந்திருந்தால், மெண்டலின் கண்டுபிடிப்பு செல்வாக்குப் பெறாமல் போயிருக்கும் எனக் கூறுவது சரியன்று. மரபு வழி பற்றி டபிள்யூ.ஓ.்.பர்க் என்பவர் தொகுத்து, பெருமளவில் விற்பனையாகி வந்த நூல் விவரத் தொகுதி (Bibliography) ஒன்றில், மெண்டலின் கட்டுரை ஏற்கனவே இடம் பெற்றிருந்தது. அவ்வாறு அந்த நூல் விவரத் தொகுதியில் அது சேர்க்கப்பட்டிருந்தமையால், விரைவிலோ பின்னரோ இத்துறையில் தீவிர ஆராய்ச்சி மாணவர் ஒருவர் கண்ணில் மெண்டலின் கட்டுரை நிச்சயமாகப் பட்டிருக்கும். அதுமட்டுமன்றி, மேற்சொன்ன மூன்று விஞ்ஞானிகளில் ஒருவர்கூட, மரபு வழிப் பண்பியலைக் கண்டுபிடித்ததற்காக உரிமை கொண்டாடவில்லை. மேலும், இவர் கண்டுபிடித்த அறிவியல் விதிகள் உலகெங்கும் "மெண்டல் விதிகள்" (Mende'ls Laws) என்றே குறிப்பிடப்படுகின்றன.

மெண்டலின் கண்டுபிடிப்புக்கள், அவற்றின் நற்பண்பிலும், முக்கியத்துவத்திலும், இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்த ஹார்வியின் கண்டுபிடிப்போடு ஒப்புநோக்கத் தக்கனவாகும். எனவே, அதற்கிணங்க மெண்டலுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது.

**அடுத்த வாரம் பிளேட்டோ வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ....!

**போ**னவாரம் என்ர கடிதத்தைப் படிச்சுப் போட்டு பொக்கை வாய்க் குள்ளேயே சிரிச்சவையள் சிலபேர் எண்டாலும் போன் போட்டுச் சொல்லாலை எனக் குப் பொல்லடி அடிச்சவைக்கும் நன்றிங்கோ. எது எப்புடி எண்டாலும் எனக்கும் தேசியத்தில அக்கறை இருக்குதெண்டதை அங்கீகரிக்கிற உங்களின்ர உணர்வுகளை நான் முட்டுக் காலில நிண்டு ஏற்றுக் கொள்ளுறேனுங்கோ. உந்தப் பூரிப் பிலையும், புழுகத்திலையும் புரண்டு கொண்டிருக்கேக்க, பாறாங்கல்லைத் தூக் கிப் படுத்துக் கொண்டிருக்கிறவனின்ர தலையில போடுற மாதிரி தம்பி சு.பா. சிரிச்சுக் கொண்டே போட்டது, சீன வெடியெண்டுதான் முதலில நினைச்சன். பிறகுதான் புரிஞ்சுது, அது அணுகுண் டெண்டு. பாதையால போகேக்க பாது காக்க முடியுமா, முடியாதா எண்டதைத் திட்டவட்டமாகச் சொல்லாட்டில் தாங்களே துவக்குகளோடை பயணிக்கப் போறம் எண்டு போட்டிருக்கார். அவர் உப்புடிச் சொன்னாலும் ஆமியின்ர பேச்சாளர் சொல்லிறதும் யோசிக்க வைக்குது.

கடந்து போன மூண்டு வருஷத்திலையும் உப்பிடி நடந்ததில்லையெண்டும் அண்டைக்குக் கூட தாங்கள் இருந்ததாலதான் இவை தப்பிச்சினம் எண்டும் சொல்லிப் போட்டு, உப்பிடி எடுத்ததுக் கெல்லாம் எடுத்தன் கவுத்தன் எண்ட விதமா புலிகள் அறிக்கை விடுறது பொறுத்தமானதில்லையுங்கோ எண்டு சொன்னவர். சு.பா. சொன்னதுபோலை அவை துவக்குகளோடை உலவ விடமாட் டினம் எண்டது ஒருபக்கமா இருந்தாலும், இனந்தெரியாதவை எண்ட போர்வையில கொலைகளைச் செய்து போட்டு, அவையின்ர ஏரியாவுக்குள்ளாலை ஓடித்தப் புறவையளைப் பிடிக்க அரசாங்கம் படையை அங்கால அனுப்ப வேண்டிவரும். ஆகவே கொலையளை நிறுத்துங்கோ எண்டு உந்த அரசாங்கம் இதுவரைக்கும் ஒரு வார்த்தை இறுக்கிப் பேசியிருந்தால் எப்புடி இருந்திருக்கும். ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டால், மட்டக்களப்பில படைத்தரப்பும், படைத்தரப்பின்ர உளவுப் பிரிவும்தான் கொலை செய்யினம் எண்டால், அப்ப அவையளைச் சுடுறவையள் யார்? எண்டதுக்கு யார் பொறுப்புச் சொல்லப் போகினம்.

அதுமட்டுமே, உந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பிறகு ஈ.பி.டி.பி.யின்ர கட்சி உறுப்பினர்கள் நாற்பத்திமூன்று பேர்வரை புலிகளாலை சுடப்பட்டிருக்கினம் எண்டு அக்கட்சி முறைப்பாடு செய்திருக்கு. அவையள் எப்பவாவது தங்களிட்டை வாங்கின துவக்குகளை திருப்பித் தாருங்கோ. அதனாலை புரிந்துணர்வு ஒப்பந்தம் என்னவானாலும் பரவாயில்லையெண்டு இதுவரைக்கும் சொல்லியிருக் கினமோ, இல்லையே - அப்படியெண்டால் உந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு வலு கெதியிலை ஆயுள் முடியப் போகுது. அதுக்கு எந்தத் திசையாலை இருந்து வில்லங்கத்தை ஸ்டார்ட் பண்ணிறதெண்டு புலிகள் யோசிக்கினமாக்கும். பொதுக் கட்டமைப்பு எதிர்ப்புகளாலை கைச்சாத் தாகாது அதை வச்சுக் கொண்டு காலத்தை ஓட்டலாமெண்டு நினைச்சுக் கொண்டிருந்தவைக்கு இப்ப மெல்லவும் முடியாம விழுங்கவும் முடியாமப் போயிட்டுது. இப்ப அடுத்த வளத்திலை மக்களின்ர பேராலை யுத்தத்தை ஆரம்பிக்கச் சொல்லி நிகழ்ச்சி நடத்தினம். அதுவும் போதாதெண்டு, துவக்கு களோடை பயணம் செய்யிறதுக்குக் கேக்கினம். உப்பிடி சுடப்படுகிற தரப்பெல்லாம் துவக்குகளோடை பவனி வந்துதெண்டால் எப்புடி இருக்கும்? கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. உப்பிடி கண்டவனும் கையில துவக்குத் தூக்கினா விடுதலை கிடைக்குமெண்டது தப்பான எடுகோள் தானுங்கோ. இண்டைக்கு இரு, எழும்பு எண்டு எவனெவனோ தராதர மில்லாம நடக்கிறான். வளர்த்துவிட்ட கிடாய் மார்பில பாஞ்ச மாதிரி, விடுதலைப் போராளிகளெல்லாம் பயங்கரவாதிகளாகி அண்டர்வெயார் தெரியிற அளவுக்கு சண்டிக் கட்டோடை திரியினம். இப்பவே பொலிரிக்ஸ் எண்டு வந்தவை, பொழுதுக்கு ஒண்டு எண்டு போட்டுத்தள்ளினம். போதாக்குறைக்கு துவக்கோடையும் நடமாட விட்டால், அவ்வளவுதான். உப்பிடியெல்லாம் மூச்சு வாங்கப் பேசிறது நான் இல்லையுங்கோ. பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு அவை அனுப்பிற பணத்திலை, புளிச்ச கள்ளுக் குடிச்சுப் போட்டு, ஊர்வம்பு கதைக்கிற வீம்பு புடிச்ச ரெண்டு பெரிசுகள் பேசினம். ஏன் சொல்லுறன் சொல்லுங்கோ. உதுகளையெல்லாம் நான்தான் நாசூக்காகச் சொல்லுறன் எண்டு நீங்கள் சரியைத் தப்பாவும், தப்பை சரியாவும் விளங்கிக் கொள்ளக் கூடாது பாருங்கோ. அதுக்குத்தான். ஹி..... ஹி.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(07.07.2005 தொடங்கி 13.07.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

மிதுனம் - சூரியன், கர்க்கடகம் - சனி, வெள்ளி, புதன், கன்னி - வியாழன், கேது,
மீனம் - செவ்வாய், இராகு,
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் கால்.) தொழில் நிலை சிறப்பு, உயர்ந்த நிலை, காரியானுகூலம், வெளியிடப் பயணம், குடும்பச் சுகம், உத்தியோகச் சிறப்பு, மனமகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கலக்கம், செலவு மிகுதி, பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோக மாற்றம், மனப்பயம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, இனசன மகிழ்வு, உத்தியோக மேன்மை, பெரியோர் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் சிக்கல், எதிர்பாரா செலவு, தேகசுகக் கஷ்டம், மனக்கலக்கம், குடும்ப மகிழ்ச்சி, சுபகாரிய சித்தி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.)
தொழில் மந்தம், செலவு மிகுதி, பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் கவலை, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்தோர் நட்பு, குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, கடன் தொல்லை, அற்ப சுகம், குடும்பப் பற்று, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் வெறுப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம், மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் மந்தம், காரியத் தடை, வீண்குறை கேட்டல், மனக்கலக்கம், குடும்ப நன்மை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் உயர்ச்சி, பண வரவு, காரிய சித்தி, மனக்குறை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்பக் கஷ்டம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, வீண்குறை கேட்டல், அந்நியர் சகாயம், குடும்பக் கஷ்டம், கடன் தொல்லை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க்கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல – 1665
கொழும்பு.
தொலை பேசி :– 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது தாயக உறவுகளுக்காக செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## மூடி



முக்கிய பொருட்களைப் பாதுகாக்க அதற்கேதும் உறைகளைப் போட்டு வைப்பார்கள். அந்த வகையில் இங்குள்ள யானையாருக்கு அதனது முக்கிய பொருளான தந்தத்தையும் பாதுகாக்க ஏதோவொரு கவசம் செய்துள்ளார்களாம். 50 சென்ரி மீற்றர் நீளமான இக் கவசமானது 13 சென்ரி மீற்றர் விட்டமுடையது. இதன் நிறை 13 கிலோ கிராம். இக்கவசத்தினை யானைக்கு 12 வைத்தியர்கள் கொண்ட குழுவினர் 3 மணித்தியாலங்கள் 30 நிமிடம் மேற்கொண்ட சத்திரகிசிச்சையின் பின் பொருத்தினார்களாம். இது நடந்தது வேறெங்கும் அல்ல. கனடாவில் இருக்கும் கல்கெரி மிருகக்காட்சி சாலையில். கவசம் பூட்டப்பட்டது ஒரு ஆசிய யானைக்கு என்பது குறிப்பிடத் தக்கது. ஆசிய மக்களுக்கு மட்டுமல்லாமல், ஆசிய யானைக்குக் கூட கவசமா?

## வாசிக்கலாம் வாங்க....




இசைக்கலைஞர்கள் அநேகமாகக் கையாளும் இசைக்கருவியான இந்த எக்கோடியன் சாதாரணமாகத் தூக்கி வாசிக்கக்கூடிய எக்கோடியன் அல்ல. இதனை வாசிக்கக் குறைந்தது 10 மனிதர்களாவது தேவை. அப்படி என்ன விசேடம் என்றால், இது 2.53 மீற்றர் (8 அடி 3 அங்குலம்) உயரமும், 1.9 மீற்றர் ( 6 அடி 2 அங்குலம்) அகலமுமுடையது. இதன் நிறை 200 கிலோ கிராம். 2000ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இதன் தயாரிப்புகள் 2001ஆம் ஆண்டுதான் முடிவடைந்ததாம். 120 பேஸ் கட்டைகளும் 240 சாதாரண கட்டைகளும் உள்ளனவாம். இது முற்றுமுழுதான மகோகனி மரத்தாலும், அலுமினியம், கார்ட்போட் மட்டைகள் மற்றும் துணிகள் கொண்டும் தயாரிக்கப்பட்டதாம். ஆயினும் இது வடிவுக்காக மட்டுமல்லாமல், இதனை வாசிக்கவும் முடியும் என்பது இதன் சிறப்பம்சமாகும். இசைக்கருவியிலும் பெரிய அளவு வேண்டுமா?


## பறந்து பறந்து




அமெரிக்க நாட்டவர்களுக்குச் சாதனை செய்வதற்கு அளவே இல்லாமல் போய்விட்டது. அந்த வகையில் ரோபர்ட் ஹரிஸ் என்பவர் சாதனை செய்யும் பொருட்டு தானே தயாரித்த விமானம் ஒன்றில் பறந்து சாதனை செய்துள்ளார். பறப்பதென்ன சாதனையா என்று யோசிக்கிறீர்களா? இவர் பறந்தது 14,938 மீற்றர் உயரத்திலாம். (49,009 அடி) இச் சாதனையை இவர் 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நிகழ்த்திக் காட்டினார். இவருக்கு முன் அமெரிக்காவைச் சேர்ந்த சப்ரினா எனும் பெண்மணியொருவர் 12,637 மீற்றர் (41,460 அடி) பறந்து நிகழ்த்திய சாதனையை இவர் முறியடித்தமை குறிப்பிடத் தக்கது. உயர உயரப் பறந்தாலும் அமெரிக்கர்கள் அமெரிக்கர்கள்தான்.

## பிறந்த நாள் வாழ்த்து

### ப. சசிகுமார்



**01.07.2005**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ப. சசிகுமார் தனது பிறந்த தினத்தை London Southall இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை இவரது பெற்றோர், அன்புச் சகோதரிகள், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.


அத்தோடு யாழில் அவருடன் கல்வி பயின்ற நண்ப, நண்பிகளையும் இப் பிறந்த தினத்து வாழ்த்துச் செய்தியூடே சந்தித்துக்கொள்ள பெரும் ஆவலாக உள்ளார்

நன்றி.

வாழ்த்துச் செய்தி: நண்பர்கள் (1ஆம் ஆண்டு கணக்கியல் மாணவர்கள்)

வாழ்த்துச் செய்திகளுக்கு:
0044 7949050469
kummarann@hotmail.com

## உயரம்



முலையூட்டிகளில் அதிக உயரமான விலங்காக ஒட்டகச் சிவிங்கி கருதப்படுகிறது. இது எல்லோருக்கும் தெரிந்தது. அதிலும் ஆபிரிக்கக் கண்டத்தின் சகானா பாலைவனத்தில் காணப்படும் ஒட்டகச் சிவிங்கிகள் சாதாரண ஒட்டகச் சிவிங்கிகளைவிட உயரம் கூடியதாகும். அதனடிப்படையில் நன்கு வளர்ந்த ஆண் ஒட்டகச்சிவிங்கி ஒன்றின் உயரம் 4.6 தொடக்கம் 5.5 மீற்றர் (15 - 18 அடி) உயரம் வரை இருக்குமாம். ஆயினும் இதன் குட்டிகள் ஆரம்பத்தில் மெதுமெதுவாக உயரத் தொடங்கினாலும் குறிப்பிட்ட காலத்தின் பின் மிக வேகமாக வளர்ந்து மேற்குறிப்பிட்ட உயரத்தை அடைந்துவிடுமாம். உயரத்தாலும் சாதனை படைக்கலாம் என்பதற்கு இது உதாரணம்.

## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி இ. தருணிகா 08.07.2005

London இல் வசித்து வரும் இதயநாதன் - யாழினி தம்பதிகளின் செல்வப் புதல்வி தருணிகா தனது முதலாவது பிறந்த தினத்தை 09.07.2005 சனிக்கிழமை அன்று அப்பா - அம்மா, அண்ணா பிரவீன், சித்தா, சித்தி, அண்ணாமார் மற்றும் நண்பர்கள் உறவினர்களுடன் BARHAM PARK LOUNGE இல் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கை தேத்தாத்தீவில் வசித்து வரும் அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா - அம்மம்மா, பெரியப்பாமார் - பெரியம்மாமார், மாமாமார் - மாமிமார், சித்தாமார் - சித்திமார், அண்ணாமார், மச்சாள்மார், அக்காமார், அத்தான்மார் அனைவரும் பல கலைகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ விநாயகர் அருளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல் :- இதயன் (அப்பா), London.